தனிநாயகம் அடிகளாரின் ஆய்வுகள்

முனைவர் ம.பி. இரபிசிங்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.ஐ.டி. வளாகம், தரமணி,
சென்னை - 600 113.

தனிநாயகம் அடிகளாரின் ஆய்வுகள்

முனைவர் ம. செ. இரபிசிங்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
சி.பி.டி. வளாகம், தரமணி, சென்னை - 600 113

BIBLIOGRAPHICAL DATA

Title	:	Taṉināyakam Aṭikalāriṉ Āyvukaḷ
Author	:	Dr. M.S. Rabisingh Professor of Tamil (Retd.) 8A, IInd Avenue, Indira Nagar, Chennai - 600 020.
Publisher	:	International Institute of Tamil Studies, C.I.T. Campus, Tharamani, Chennai 600 113.
Publication No	:	332
Language	:	Tamil
Date of Publication	:	1999
Edition	:	First
Paper used	:	TNPL 70GSM Super Printing
Size of the book	:	1/8 Demy
Printing types	:	10 Points
No. of pages	:	VIII + 91
Price	:	Rs.22/-
No. of Copies	:	1,200
Printed by	:	**PAVAI PRINTERS (P) LTD.,** **142, J.J.K. Road, Royapettah,** **Chennai - 14. PH: 8532441**
Subject	:	Research Works of Taṉi Nāyakam Aṭikal

அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பல்ல

முனைவர் ச.சு. இராமர் இளங்கோ
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

அணிந்துரை

தவத்திரு தனிநாயகம் அடிகளார் உலகத் தமிழாராய்ச்சிக் கழகத்தையும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தையும் உருவாக்கியவர்களுள் ஒருவர். தமிழ் இலக்கியத்தில் ஆழ்ந்த புலமை மிக்க தனிநாயகம் அடிகளார் பன்மொழிப் புலவர் ஆவார். பரந்துபட்ட பார்வையில் தமிழாய்வு செய்ய அவருடைய பன்மொழிப்புலமை வழி வகுத்தது. அடிகளார் தேமதுரத் தமிழோசையை உலகமெலாம் பரப்பியவர். உலகமெங்கும் பயணம் செய்து பல பல்கலைக் கழகங்களில் தமிழ் மொழியின் சிறப்புக் குறித்துப் பேருரை ஆற்றிய தமிழ்த் தூதுவர்.

தமிழ்மொழி உலகில் உள்ள தொன்மையான மொழிகளில் ஒன்றாகவும், இன்றும் வாழும் மொழியாகவும், செம்மொழியாகவும் விளங்குகிறது என்ற கருத்தை ஆய்வரங்குகளில் சான்றுகளுடன் நிறுவியவர். அடிகளார் ஆற்றிய தமிழ்ப் பணிகள் உணர்வுள்ள ஒவ்வொரு தமிழனும் மிகவும் நன்றியோடு நினைத்துப் போற்றத்தக்கன.

இந்நிறுவனத்தைத் தோற்றுவித்த அப்பெருமகனாரின் நூல்கள் இன்று கிடைப்பதற்கரியதாக உள்ளன. எனவே இந்நிறுவனம் அவருடைய நூல்களை மறுபதிப்பு செய்வதைத் தலையாய கடமையாகக் கொண்டுள்ளது. ஒருவகையில் அடிகளாருக்குச் செய்யும் நன்றிக் கடனாகக் கூட இதைக் கருதலாம்.

தனிநாயகம் அடிகளாரின் ஆய்வுகள் எனும் இத்தலைப்பில் முனைவர் ம.செ. இரபிசிங் இந்நிறுவனத்தில் நிகழ்த்திய அறக்கட்டளைப் பொழிவு தற்போது நூலாக வெளிவருகிறது. இவ்வறக்கட்டளையை நிறுவிய அமுதன் அடிகள் போற்றுதற்குரியவர்.

முனைவர் ம.செ. இரபிசிங் சீரிய சிந்தனையாளர். ஒப்பீட்டு இலக்கியத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். அரிது முயன்று உழைத்து

எழுதிய இவருடைய நூல் தமிழ் ஆர்வலர்களுக்கு அடிகளாரின் ஆய்வுத் திறனை அறிவதற்கு மிகத் துணையாக அமையும் என்பதில் ஐயம் இல்லை. தனிநாயகம் அடிகளார் அறக்கட்டளை வரிசையில் மூன்றாவது நூலாக இது வெளிவருகிறது.

இவ்வறக்கட்டளைச் சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்த முனைவர் ச.சிவகாமி அவர்களுக்கு நன்றி.

நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி-பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத்துறைச் செயலாளர் திருமிகு. த. இரா. சீனிவாசன் இ.ஆ.ப. அவர்களுக்கும் எங்கள் நன்றி.

இந்நூலினை நல்ல முறையில் நூலாக்கம் செய்து தந்த விக்னேஷ் அச்சகத்தார்க்கு எங்கள் நன்றி.

இயக்குநர்

முன்னுரை

கருத்துரை (Commenting), பாகுபடுத்தல் (Analysing), மதிப்பிடல் (Valuating), கொள்கை உருவாக்கல் (Theorising) என்ற நிலையில் வளர்ந்த இலக்கிய ஆய்வுத் தொடக்கத்தில் வரலாற்று அடிப்படையிலும், பின்னர் திறனாய்வு அடிப்படையிலும், இன்று கோட்பாடுகளின் அடிப்படையிலும் நிகழ்த்தப்படுகிறது.

தமிழ் இலக்கியத்தைப் பொறுத்தவரையில், டாக்டர் உ. வே. சாமிநாதய்யர், சி. வை. தாமோதரப்பிள்ளை ஆகியோரின் தொகுத்தல் பணி இராகவ ஐயங்கார், சேஷையர், டாக்டர் மா. இராச மாணிக்கனார் போன்றோரைக் கால ஆராய்ச்சியில் ஈடுபடச் செய்தது. அதன் பின்னர் மேலை இலக்கியத் திறனாய்வுகளின் அடிப்படையில் ஆய்வைத் தொடங்கி வைத்தவர், பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை, அவர்கள். மேலை இலக்கியக் கோட்பாடுகளை அறிமுகப்படுத்தித் தம் ஆய்வை மேற்கொண்டவர்கள், டாக்டர் கே. கைலாசபதியும் டாக்டர் க. சிவதம்பியும் ஆவர். அவர்களைப் போன்ற பின்புலத்தில் வந்த டாக்டர் சேவியர் தனிநாயகம் அடிகளார்; தம் பன்மொழிப் புலமையாலும், பிற இலக்கியங்களின் அறிமுகங்களாலும், தமிழ் இலக்கியப் பயிற்சியாலும், தமிழ் ஆய்வின் பரப்பை அகலப்படுத்தினார். மேலும் தமிழ் இலக்கிய மரபு வழி கோட்பாடுகளையும், மேலை இலக்கியக் கோட்பாடுகளுடன் ஒப்பிட்டு தமிழ் ஆய்வை மேற்கொண்டவர் அடிகளார்.

தொல்காப்பியம் ஓர் இலக்கண நூல் மட்டுமல்ல அது ஒரு வாழ்க்கை நூல். நிலவியல், மானிடவியல், பண்பாட்டுச் சுற்றுப்புறச் சூழலியல் ஆகியவற்றின் துணையுடன் தொல்காப்பியத்தைப் பற்றிய ஆய்வை மேற்கொள்ள வேண்டுமென்று முயன்றவர் அடிகளார். மெய்ப்பாட்டியலை உளவியலின் அடிப்படையில் ஆய வேண்டும் என்பதின் தேவையை எடுத்துரைத்தவர் அடிகளார்.

தொல்காப்பியத்திலுள்ள திணை பற்றியச் செய்திகள், சமுதாயப் பகுப்புகள், வாழ்க்கை முறை ஆகியவை, இன்றைய இலக்கியக் கோட்பாடுகளுடன் பொருந்துகின்றன என அவற்றைச் சான்றாதாரங்களுடன் விளக்கிக் காட்டியவர் அடிகளார்.

ஒரு துறையாகத் தொடங்கி, இன்று ஓர் ஆய்வு நெறி முறையாக வளர்ந்துள்ள ஒப்பியல் ஆய்விற்கு அடிகளாரின் பங்களிப்பு கணிசமானது. உரோமப் பேரரசுக்கும் தமிழ் நாட்டிற்கும் நடைபெற்ற வாணிபத்தின் பின்னணியில் இரு நாடுகளிலும் தோன்றிய உயர்ந்த இலட்சியங்களின் ஒற்றுமை வேற்றுமைகளை ஒப்பிட்டு "இந்திய சிந்தனையும் உரோம ஸ்டோய்க்கு வாதமும்" என்ற ஒப்பியல் ஆய்வை

1962-லேயே மேற்கொண்டார். அடிகளாரது **Landscape and Poetry - A Study of Nature in Classical Tamil Poetry** எனும் நூலிலும், **தமிழ்த்தூது** எனும் நூலிலும், உலகத்திலுள்ள பிற இலக்கியங்களோடு தமிழ் இலக்கியங்கள் எந்தெந்த வகையில் ஒப்புமை உடையன, அவற்றை எவ்வாறு ஒப்பிட்டு ஆயலாம் என ஒப்பியல் ஆய்விற்குரிய வாயிலையும், பல ஆய்வுக் களங்களையும் அடையாளம் காட்டியுள்ளார்.

மேலும், ஐரோப்பிய இலக்கியங்களின் இயற்கைப் பாடல்களுடனும், சமஸ்கிருத்திலுள்ள இயற்கைப் பாடல்களுடனும் தமிழ் இலக்கிய இயற்கைப் பாடல்கள் எவ்வகையில் ஒப்புமை உடையனவாகத் திகழ்கின்றன என்பதை எடுத்துக் காட்டியுள்ளார். கிரேக்க, இலத்தீன் பாடல்களும், ஆங்கில இலக்கியத்தின் பல படைப்புக்களும் தமிழ் இலக்கியங்களுடன் ஒப்பிட்டு ஆய்வதற்குள்ள சாத்தியக் கூறுகள் பலவற்றையும் விரிவாக விளக்கியுள்ளார்.

தமிழ் இலக்கியத்தின் பெருமையினையும், தொன்மையினையும், தந்நிகரற்றத் தன்மையினையும், வெளிப்படுத்தியதோடு, அதை உலகளாவிய நிலையில் பரப்ப முற்பட்டவர் தனிநாயகம் அடிகளார். தொண்டராகிய அடிகளார், தமிழிற்குச் செய்த தொண்டு அளவிடற் கரியது. அவர் முயற்சியால் உருவானவையே உலகத் தமிழ் ஆய்வு மன்றமும் அதன் விளைவான உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனமும். ஆனால் அவரது முயற்சியையும் அயராத உழைப்பையும் அங்கீகரித்து அவரது ஆசைகளை நிறைவேற்றும் வகையில், அவருக்கு வாய்ப்பு அளிக்கப்படவில்லை. அது அவருக்குப் பெரியதொரு ஏமாற்றத்தையும், அதிர்ச்சியையும் கொடுத்தது என அவரொடு தொடர்புடையவர்கள் குறிப்பிடுகின்றனர்.

அடிகளாரது தன்னலமற்ற உழைப்பையும், தமிழ்த் தொண்டையும் சரியான முறையில் தமிழர்களிடையே அறிமுகப்படுத்தவில்லை. அவரது புலமையையும் ஆற்றலையும் தமிழகம் அறிந்து கொள்ளும் வாய்ப்பினையும் தமிழறிஞர் உருவாக்கவில்லை. இக்குறைகளைப் போக்கும் வகையில் அடிகளாரையும் அவரது தமிழ்ப் பணிகளையும் தமிழர்கள் அறிந்து கொள்ளும் வகையில் தவத்திரு. அமுதன் அடிகளார், தனிநாயகம் அடிகளார் பெயரால் ஓர் அறக்கட்டளையை உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திலேயே 1992-இல் நிறுவியுள்ளார். ஆண்டுதோறும் நிகழ்த்தப் படும் அறக்கட்டளைச் சொற்பொழிவின் மூலம் அடிகளாரின் தந்நிகரற்ற தமிழ்த் தொண்டினைத் தமிழகம் அறிந்து கொள்ளும் நல்வாய்ப்பினை பெருமதிப்பிற்குரிய அமுதன் அடிகளார் நல்கியுள்ளார். அடிகளார் மீது பேரன்பும் பெருமதிப்பும் கொண்டிருக்கும் அமுதன் அடிகளார், தனிநாயகம் அடிகளாரின் பெயரிலேயே இதழியல் நிறுவனமும் நடத்தித் தமிழ்த் தொண்டு ஆற்றி வருகிறார். அமுதன் அடிகளாரின் இப்பணிகள் உண்மையிலே மிகவும் பாராட்டப்பட வேண்டிய தமிழ்ப் பெரும்பணி.

அறக்கட்டளையின் இரண்டாவது சொற்பொழிவை நிகழ்த்தும் நல்வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அமுதன் அடிகளார் இயற்றிய தனிநாயகம் அடிகளார் பற்றிய நூலிற்குப் பெருமதிப்பிற்குரிய பேராசிரியர். வ. அய். சுப்பிரமணியம் அவர்கள் ஓர் அருமையான முன்னுரை வழங்கியுள்ளார். சுருக்கமாகவே எழுதுவதையும், பேசுவதையுமே நடைமுறையாகக் கொண்ட பேராசிரியர் சுப்பிரமணியனார், அடிகளாரைப் பற்றி ஒரு நீண்ட முன்னுரை வழங்கியுள்ளார். தன்னோடு முதுகலை கற்ற, தனது வகுப்புத் தோழர் மீது கொண்ட அன்பும், மதிப்பும் வெளிப்படுகின்றன என்பதை விட, அளவற்ற தமிழ்ப்பற்றும், தமிழின் பெருமையினை உலகறியச் செய்ய வேண்டுமென்ற அப்பழுக்கற்ற ஆர்வமும், தமிழ் அபிமானத்துடன் ஒளிர்விடும் மனிதாபிமானமும் அடிகளாரிடம் எவ்வாறு அமைந்திருந்தன என்பதனை மிகவும் சிறப்பாக வெளிப் படுத்தியிருக்கிறார். அடிகளாரை முழுமையாக அறிந்து கொள்ள விழைவோருக்கு இது ஒரு சிறந்த அறிமுகவுரை. இம்முன்னுரையைப் படித்ததுமே, அடிகளாரின் நூல்களையும், ஆய்வுக்கட்டுரைகளையும் முழுமையாகப் படிக்க வேண்டும் என்ற பேரார்வம் என்னுள் எழுந்ததுண்டு. அது நிறைவேறாத ஆசையாகவே இருந்தது. ஆனால், அடிகளாரைப் பற்றி அறக்கட்டளைச் சொற்பொழிவு நிகழ்த்த வேண்டுமென்ற அழைப்பு வந்ததும், என் ஆசை நிறைவேறும் வகையில் அவரது படைப்புக்ளை முழுமையாகக் கற்கும் நல்வாய்ப்பை எண்ணி அகமிக மகிழ்ந்தேன்.

அறக்கட்டளைச் சொற்பொழிவு நிகழ்த்த அழைப்பு அனுப்பியவர் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் முன்னாள் பொறுப்பு இயக்குநர் டாக்டர். அன்னிதாமசு ஆவார். அறக்கட்டளைச் சொற்பொழிவு நிகழ்த்துவதற்குப் பல நிலையில் துணை செய்தவர், அறக்கட்டளைப் பொறுப்பாளர் டாக்டர் ச. சிவகாமி. அவ்விருவருக்கும் எனது நன்றியினை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அறக்கட்டளைச் சொற்பொழிவு நிகழ்த்த அழைப்பு வந்து ஏறத்தாழ ஆறு திங்களுக்குப் பின்னரே, 1995 சனவரியில் சொற்பொழிவை நிகழ்த்தினேன். அதற்கு அனுமதி வழங்கியதோடு, அறக்கட்டளை நிகழ்த்தப்படுவதற்குரிய உதவிகளையும் செய்து ஊக்குவித்ததோடு, நான் அறக்கட்டளைச் சொற்பொழிவு நிகழ்த்திய பொழுது, தனிநாயகம் அடிகளாரின் நூல்களும், ஆய்வுக் கட்டுரைகளும் மறுபதிப்பின்றி, அருகியே காணப்படுகின்றன. எனவே அவற்றை மீண்டும் வெளியிட வேண்டும் என்ற எனது அன்பு வேண்டுகோளை ஏற்று, அடிகளாரது ஆய்வுக் கட்டுரைகளைத் தொகுத்து நூலாக்கியவர் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் டாக்டர் இராமர் இளங்கோ. அவர்களுக்கு எனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அறக்கட்டளை நிகழ்த்தியக் காலக் கட்டத்தில் பனாரசுப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தேன். அங்கு

ஆய்வுகள்

அடிகளாரின் நூல்களைப் பார்க்கும் வாய்ப்பில்லை எனவே அடிகளாரோடு தொடர்புடைய பலரைத் தொடர்பு கொண்டேன். மனமுவந்து உதவிகளைச் செய்தனர். குறிப்பாக, தவத்திரு. அமுதன் அடிகளார், நூற்களைப் பற்றியப் பல தகவல்களையும், அவை கிடைக்கும் இடங்களையும் தெரிவித்தார். அடிகளாரைப் பற்றியும் அடிகளாரின் ஆய்வுகளைப் பற்றியும் பல செய்திகளை இலயோலா கல்லூரிப் பேராசிரியர் தவத்திரு. டாக்டர். இராசமாணிக்கனார் வழங்கினார். தேவைப்பட்ட நூல்களை, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவன நூலகத்திலிருந்து எடுத்துத் தந்து உதவியவர், டாக்டர். ரங்கநாதன் அவர்கள். இவர்கள் செய்த உதவிகள் மறக்க இயலாதவை. இவர்களுக்கும் நெஞ்சில் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், சொற்பொழிவு நிகழ்த்தப்பட்ட உடனேயே மறக்கப்பட்டுவிடும். அல்லது மறைக்கப்பட்டு விடும். ஆனால், ஆய்வுலகில் ஒருவரது கருத்துக்கள் எல்லா காலங்களிலும் பயன்படும் வகையில் பதிவு செய்து, நூல்வடிவு கொடுத்து ஊக்குவிக்கும் பணியைத் தொடர்ந்து உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் செயல்படுத்தி வருகிறது. அது பாராட்டிற்குரிய நற்பணி.

தவத்திரு. சேவியர் தனிநாயகம் அடிகளார், தமிழ் இலக்கிய ஆய்வை விரிவுபடுத்துவதிலும், வளப்படுத்துவதிலும் எந்தெந்த முயற்சிகளை மேற்கொண்டார் என்பதை வெளிப்படுத்துவது இந்நூலின்கண் முதல் நோக்கமாகக் கொள்ளப்படுகிறது.

தமிழ் இலக்கியத்தின் தொன்மையினை, பெருமையினை வெளிக் கொணர்வதில் எத்தகைய விடா முயற்சியும், ஆர்வமும் கொண்டிருந்தார் அடிகளார் என்பதைச் சுட்டிக் காட்டுவதும் இந்நூலின் நோக்கமாகும்.

உலகளாவிய நிலையில் அறிவும் அனுபவமும் பெற்றுள்ள அடிகளார், தம் அறிவாற்றலையும், ஆழப்புலமையையும் தமிழோடும் - தமிழ் இலக்கியத்தோடும் தொடர்புபடுத்தி ஆய்வை மேற்கொண்டமையும் வெளிப்படுத்தப்படுகிறது.

உலகிலுள்ள எந்தவொரு மொழிக்கும், இலக்கியத்திற்கும், தமிழ் மொழியும் தமிழ் இலக்கியமும் எந்த வகையிலும் குறைந்தவை அல்ல என்பதை நிரூபிக்க அவர் எடுத்துக் கொண்ட முயற்சியும், உழைப்பும் அவரது ஆய்வுப் பணிகளில் முதன்மையானவை.

அடிகளாரின், தன்னலங்கருதாத இத்தமிழ்ப் பணியை - தமிழ் இலக்கிய ஆய்வுப் பணியை அங்கீகரித்தாலே அது அடிகளாருக்கு நாம் செய்யும் நன்றிக் கடனாக அமையும்.

ம. செ. இரபிசிங்

தனிநாயகம் அடிகளாரின் ஆய்வுகள்

ஐரோப்பியர் வருகை, அரசியல், பொருளாதாரத் துறைகளில் இந்தியத் துணைக் கண்டத்திற்குப் பலவித இடர்களை ஏற்படுத்தியிருந்தாலும், அவர்கள்வருகையால் இந்தியச் சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்களும், கல்வி நிலையில் ஏற்பட்ட முன்னேற்றங்களும், இலக்கிய ரீதியாக இந்திய இலக்கியங்கள் அடைந்த வளர்ச்சியும், கணிசமானவை. இந்தியத் துணைக் கண்டத்தைப் பொறுத்தவரையில் - குறிப்பாகத் தமிழகத்தைப் பொறுத்த வரையில் அவை ஐரோப்பியர்களின் பங்களிப்பாகவே கருதப்படுகின்றன. தமிழ் இலக்கிய வளர்ச்சியிலும், அதன் பெருமையினை ஐரோப்பிய நாடுகளில் அறிமுகப்படுத்திய வகையில் அவர்கள் ஆற்றியப் பணிகள் தமிழ்த் தொண்டெனவே போற்றிப் பாராட்டப்படுகின்றன. அவர்களின் அருமுயற்சிகளால், புகுத்தப்பட்ட கல்வியும், ஆங்கில இலக்கிய அறிமுகமும் அதன் வாயிலான உலக இலக்கியங்களின் போக்கையும் கொள்கைகளையும், ஆய்வுகளையும் அறிந்து கொள்ளும் வாய்ப்பும், அச்சு இயந்திர அறிமுகமும், எழுத்துச் சீரமைப்பும் நிகழாதிருந்தால், தமிழ் இன்று அடைந்திருக்கும் நவீனத்துவம், மாற்றம், வளர்ச்சி ஆகியவற்றைப் பெற்றிருக்குமா என்பது ஐயமே. எனவே தான், அடிமைப்படுத்திய வர்க்கத்தைச் சார்ந்தவர்களாக இருப்பினும், தமிழுக்குத் தன்னலங் கருதாது அவர்கள் செய்த சேவையை எண்ணித் தமிழ் இலக்கிய வரலாற்றில் 'ஐரோப்பியர் காலம்' என, ஒரு காலக் கட்டத்தை இடம் பெறச் செய்துள்ளோம். அவர்கள், தமிழின் தலைசிறந்த இலக்கியப் படைப்புக்களை ஐரோப்பிய மொழிகளில் மொழி பெயர்த்தமை, தமிழை உலக அரங்கில் அறிமுகப்படுத்திய முதன்மைப் பணியாகக் கருதப்படுகிறது. தொன்மை இலக்கியப் பணியாகக் கருதப்படுகிறது. தொன்மை இலக்கியப் பாதுகாப்பு, தொகுப்புப்பணி, ஆகியவற்றோடு உரைநடை வளர்ச்சிக்கு ஐரோப்பியர் ஆற்றியப் பணி மகத்தானது. ஆங்கிலக் கல்வியால், கற்ற ஒரு நடுத்தர வர்க்கத்தை உருவாக்கியது. இன்றைய இலக்கியப் படைப்புக்களும், நுகர்வுகளும், ஆய்வுகளும் இந்தப் படித்த நடுத்தர வர்க்கத்தையே மையமாகக் கொண்டு அமைந்துள்ளன. இத்தகையயோரது பங்களிப்பு தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு இன்றியமையாத ஒன்றாக அமைந்துள்ளது. இத்தகைய பணியினைத் - தொண்டினை, இன்றைய காலக்கட்டத்தில் ஆற்றக் கூடியவர்கள் அரிதாகவே காணப்படுகின்றனர்.

ஐரோப்பியர் கால இறுதி நிலையை ஒட்டியும், அதை அடுத்தும் சிலர் அம்முயற்சிகளில் ஈடுபட்டனர். சிலர் தமிழைப் பற்றியும், தமிழர்

பற்றியும், ஆங்கிலத்தில் நூல்கள் வெளியிட்டதோடு நின்றுவிட்டனர். சிலர், மேலை இலக்கியத் திறனாய்வுக் கொள்கைகளைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியதுடன் தம் பணியை முடித்துக் கொண்டனர்.

அறிவியல் வளர்ச்சியின் மேம்பாட்டினை நாள்தோறும் நடைமுறையில் அனுபவித்து வரும் இந்த நூற்றாண்டில், உலகிலுள்ளோரை இணைக்கும் - தொடர்புபடுத்தும் ஒரு சக்தியாக - ஆங்கிலம் செயல்பட்டு வருகிறது. இன்றையச் சூழலில், ஆங்கிலத்தைத் தவிர இன்னொரு மொழி அந்த இடத்தைப் பெறும் என்று சொல்ல இயலாது. எனவே ஒரு கண்டுபிடிப்பு, ஒரு படைப்பு, ஒரு செய்தி, ஆகிய எதுவாக இருந்தாலும், உலகளாவிய நிலையில் அது அறிமுகப்படுத்தப் படுவதற்கு அல்லது பரப்புவதற்கு ஆங்கிலத் துணை தவிர்க்க முடியாத ஒன்றாக அமைந்துள்ளது. எனவே, இந்த உண்மையை உணர்ந்து, தமிழில் இருப்பவற்றையும், தமிழைப்பற்றியும், தம்மால் இயன்ற அளவுக்கு அறிமுகக் கண்ணோட்டத்துடனும், ஆய்வுக் கண்ணோட்டத்துடனும், ஆங்கிலத்தில் நூலாக யாத்தனர். அவர்களுள், வி. கனகசபை பிள்ளை (The Tamils, Eighteen Hundred years ago-1904), கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி (The pandiya kingdom, 1929, Studies in Chola History and administrations, 1930), எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை (History of Tamil Literature, 1928), வி. ஆர். இராமச் சந்திர தீட்சிதர் (Studies in Tamil Literature and History, 1930), கே. என். சிவராஜ பிள்ளை (Agastia in Tamil Land, The Chronology of the early Tamils, 1932), ஜே. எம். சோமசுந்தரம் (Two thousand years of Tamil Literatue, 1959), எம். சீனிவாச ஐயங்கார் (The Tamil Studies, 1914), பி. டி. சீனிவாச ஐயங்கார் (History of the Tamils from the earliest time of 600 A.D, 1929), சுவாமி வேதாசலம் (மறைமலை அடிகளார்) (Ancient and Modern Tamil Poets, 1939) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்களுடைய நூல்களுடன், ஜே.வி. செல்லையாவின், பத்துப்பாட்டு ஆங்கில மொழிபெயர்ப்பு, வரதராஜ ஐயரின், தொல்காப்பியப் பொருளதிகார மொழிபெயர்ப்பு, வ.வே.சு. ஐயரின் திருக்குறள் மொழி பெயர்ப்பு முதலியவையும் கருத்தில் கொள்ள வேண்டியவை.

இதன் பின்னர் இவர்களது அடிச் சுவட்டைப் பின் பற்றி, ஆங்கிலத்திலோ, பிற மொழிகளிலோ, தமிழைப்பற்றி நூல் எழுதியோர் தொகை அருகியே வந்துள்ளது. எனவே, இந்நூல்களின் வாயிலாகத் தமிழைப் பற்றி நடைபெற்ற அறிமுகங்கள் பெரும்பாலும் நின்று விட்டன என்றே கூறலாம். இதனால், இந்திய இலக்கியங்களில், அல்லது உலக இலக்கியங்களில், தமிழ்த் தொடர்ப்பானச் செய்திகள் மேற் குறிப்பிட்டோரின் நூற்களில் கூறப்பட்டுள்ள தகவல்களுடனும் தரவுகளுடனும் முற்று பெற்ற நிலையில் உள்ளன. அதற்கு அப்பாற்பட்ட நிலையில், சாகித்திய அகதமி போன்ற நிறுவனங்கள் மூலம் பரிசு பெற்ற ஆங்கிலத்தில் அல்லது பிற இந்திய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட சில படைப்பு இலக்கியங்கள் மட்டுமே கிடைக்கின்றன. பிறிதில்லை.

தமிழறிஞர்களுள், பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், பேராசிரியர் அ. சிதம்பரநாதன், பேராசிரியர் இரா. பி. சேதுபிள்ளை போன்றோர் தம் ஆங்கிலப் புலமையால் வாயப்பு கிடைத்த இடங்களில் தமிழைப் பற்றி ஆங்கிலத்தில் சொற்பொழிவுகளும், கட்டுரைகளும் படைத்தனர்களே தவிர அதற்கு மேல், தமிழைப் பிறருக்குப் பரப்பும் பணியில் அவர்களும் முழுமையாக ஈடுபட்டதாகக் குறிப்பிட இயல்வில்லை. தமிழில் முனைவர் பட்ட ஆய்வுகள், தொடக்கக் காலத்தில், ஆங்கிலத்திலே தான் கொடுக்கப்பட வேண்டுமென்ற கட்டாய மிருந்தமையால், ஆங்கிலம் அறிந்து, அல்லது ஆங்கில ஆசிரியர் துணையுடன், ஆங்கிலத்தில் ஆய்வேடுகள் வழங்கப்பட்டுள்ளன. சில நூலாகவும் வெளி வந்துள்ளன. அவை ஓரளவுக்குத் தகவல்களாகத் திகழ்கின்றன. அவற்றிற்குப் பின்னர், இங்கிலாந்து போன்ற மேலை நாடுகளில், கல்வி கற்கும் வாய்ப்பு பெற்ற இலங்கையைச் சார்ந்த, பேராசிரியர் கைலாசபதி, பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை, பேராசிரியர் கா. சிவத்தம்பி போன்றோரின் ஆய்வுகளும் தமிழ்த் தொடர்பானத் தகவல் மூலங்களாகக் கிடைக்கின்றன. இவற்றைத்தவிர, தமிழ் இலக்கியங்களில் ஆய்வுக்குரிய தகவல் மூலங்களாகக் கிடைப்பவை தவத்திரு. சேவியர் தனிநாயக அடிகளாரின் ஆய்வுப் பணியினால் கிடைப்பவையே யாகும்.

ஐரோப்பியருக்குப் பின்னர், மேலை இலக்கியத் தொடர்பு பெருமளவில் நின்றே விட்டது எனலாம். ஆனால் அதைப் புதுப்பிக்கின்ற வகையில், மேலை நாட்டார்களைப் போன்ற பின்புலமும், பரந்து பட்ட அறிவும், உலகத் தொடர்பும் உடையவராகத் திகழ்ந்த ஒருவர் தனிநாயக அடிகளார் ஆவார். ஐரோப்பிய தமிழறிஞர்கள் விட்டுச் சென்ற தமிழ்ப் பணியில் - தமிழ் ஆய்வுப் பணியில் தொடர்ந்து முழுமையாக ஈடுபட்டார் தனிநாயக அடிகள் என்பதை அவரது ஆய்வுக் கட்டுரைகள், சொற்பொழிவுகள், நூல்கள் ஆகியவற்றைக் கூர்ந்து நோக்குவோருக்குப் புலப்படும்.

தனிநாயகம் அடிகளார் ஆய்வு அடிப்படைகள்

வணிகத் தொடர்போடு, அரசியல் தொடர்பை - ஆட்சியை நிரந்தரமாக்க முற்பட்ட ஐரோப்பியர், சமயத் தொடர்பு கொள்ள விழைந்தனர். அதற்காக அவர்களால் அனுப்பப்பட்டோ அல்லது - விருப்பப்பட்டோ, இந்தியத் துணைக் கண்டத்திற்குச் சமயம் பரப்ப வந்த சமயத் துறவிகளுள் பலர்; முற்றும் உணர்ந்த முழு ஞானிகள் - அறிவாளிகள், பன்மொழிப் புலவர்கள், தத்துவ மேதைகள், தொண்டுள்ளம் கொண்டவர்கள். எனவே தான், கால்டு வெல், போப், வீரமாமுனிவர் போன்ற பேரறிஞர்களைத் தமிழ் மொழி பெற முடிந்தது. அவர்களால் தமிழும் பயன் பெற்றது. இத்தகைய ஒரு பாரம்பரியத்தை - மரபைச் சார்ந்தவர்தான் தவத்திரு தனிநாயக அடிகளார்.

தமிழ், ஆங்கிலம் தவிர, பிரஞ்சு, ஜெர்மன், இத்தாலி, ஸ்பானிஷ், போர்த்துகேயம், ரஷ்யமொழி, இலத்தீன், எபிரேயம், கிரேக்கம், சமஸ்கிருதம், மலாய், சிங்களம் ஆகிய 14 மொழிகளிலும் புலமையுடையவர் அடிகளார். உரோமையில், உர்பன் குருமடத்தில் மாணவராகி, உர்பன் பல்கலைக் கழகத்தில், சமயவியலில் 1934 முதல் 1939 வரை கற்ற காலத்தில், 43 நாடுகளைச் சார்ந்த 250 மாணவர்களுடன் வாழ்ந்த காலத்தில் பெற்ற அனுபவங்களும், அறிவும், உலகளாவியச் சிந்தனையும் பின்புலங்களாகக் கொண்டவர். உலகின் பல பகுதிகளான தாய்லாந்து, கம்போதியா, வியட்நாம், பர்மா, இந்தோனேசியா, ஜப்பான், அமெரிக்கா, தென் அமெரிக்கா, சோவியத் ஒன்றகம், இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி, ஆஸ்திரியா, இத்தாலி, கிரேக்கநாடு, போர்த்துக்கல் ஆப்ரிக்கா முதலிய பல நாடுகளுக்குச் சென்ற அனுபவம் உடையவர். 'ஒன்றே உலகம்' எனும் பொதுப்பார்வையும் உலகளாவிய சிந்தனையையும் உடையவர். எனவே, ஐரோப்பிய கிறித்தவத் தமிழ்த் தொண்டர்களின் அணியின் தொடர்ச்சியாகத் திகழ்ந்தவர். அவர்கள் தத்துப் பிள்ளைகள். அடிகளார் தமிழ்த் தாயின் தவப்புதல்வர். எனவே, அவர்கள் உலக அரங்கில் தமிழை அரங்கேற்றியதோடு - அறிமுகப்படுத்தியதோடு நின்று விட்டார்கள். அடிகளார், தன் தாயின் பெருமையினைப் - புகழினைத் தரணிக்கு எடுத்துரைத்ததோடு நின்று விடாமல் தகுதியின் அடிப்படையில் தன் தாய் பெற வேண்டிய இடத்தையும் சிறப்பையும் பெறச் செய்வதற்காகச் சமயத் தொண்டைத் துறந்து, தமிழ் மொழித் தொண்டராக முழுமையாகத் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார்.

அடிகளார் தமிழ் உணர்வு

அடிகளாரின் வாழ்க்கை வரலாற்றைக் கூர்ந்து நோக்கும் பொழுது, காந்தியடிகளாருக்குத் தென் ஆப்ரிக்காவில் ஏற்பட்ட அனுபவம், விழிப்புணர்ச்சி, தேசப்பற்று, இந்திய விடுதலைப் போரில் ஈடுபடுத்தியதைப் போன்று, பெற்றோரால் சமயப்பணிக்கு அர்ப்பணிக்கப் பட்ட அடிகளாருக்கு, உரோமையில் தமிழ்ப்பற்று அரும்பி அது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆழ வேர் ஊன்றி, அருந்தமிழ்த் தொண்டாற்ற வழிகோலியுள்ளது. உரோமையில் கற்கும் காலத்தில், வீரமா முனிவர் கழகம் தொடங்கி, தமிழைப் பயின்று வந்த காலக் கட்டத்தில், பிற மொழிகளைத் தெரிந்து கொண்ட சூழலில், உலகளாவிய சிந்தனை உருவாகிய மனநிலையில் 'தேமதுரத் தமிழோசை உலகெங்கும் பரவும் வகைசெய்யும்' எண்ணம் அடிகளாருக்கு ஏற்பட்டுள்ளது. மேலும், உரோமையில் வாழ்ந்த காலத்தில் "அயல்நாடு செல்லும் தமிழ் மாணவர், தமிழ்ப் பயிற்சி மிக்குளரேல், எத்துணை உயரிய தமிழ்த் தொண்டு இயற்றுதல் கூடும் என்பது இனிதுணர்ந்தேன்" (அடிகளார்: 1961:20) என அடிகளாரே குறிப்பிடுகிறார். தனக்குப் போதிய தமிழ் அறிவு இல்லை என்பதை உணர்ந்தே முறையாகத் தமிழ்க் கற்க அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவராகச் சேர்ந்தார். அங்குப் பேராசிரியர்

தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், பேராசிரியர் அ. சிதம்பரநாதன் போன்றோரிடம் தமிழ் கற்கும் வாய்ப்பைப் பெற்றார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படிக்கும் பொழுது, 'தமிழ்க் கலைகளில் மூழ்கியிருந்த நான் அந்தக் காலத்திலேயே நம் ஒப்பற்ற இலக்கியத்தைப் பற்றி உலகு அறியச் செய்ய வேண்டும். ஒரு சிறிதாவது அதற்கு உழைக்க உறுதி பூண்டேன்.' (அழகரசன் 1984:15). என, அடிகளார் குறிப்பிடுவதிலிருந்தும், எத்தகைய ஓர் உணர்வோடும், நோக்கோடும் தமிழ்ப் பயின்றார் என்பதுவும், எத்தகைய கடமை உணர்வோடு தமிழ்ப் பணியை மேற்கொண்டார் என்பதுவும் புலப்படும்.

அடிகளார் தமிழ்ப்பணி

உயர்த்தனிச் செம்மொழியாகிய தமிழை உலகறியச் செய்வதற்காக, 1949 முதல் 1950-ஆம் ஆண்டுவரை ஈராண்டுகள், தமிழ்த் தூதுவராக உலக நாடுகளுக்குப் பயணம் சென்றார். சென்ற இடங்களிலெல்லாம். தமிழின் தொன்மைச் சிறப்பையும் பல்வகைச் செழுமையையும் உலக மக்களுக்கு வானொலி, தொலைக்காட்சி நேர் காணல் ஆகியவைகளின் மூலமும் சிறப்புச் சொற்பொழிவின் மூலமும், பல்கலைக் கழக விரிவுரைகளின் மூலமும் எடுத்துரைத்தார். இந்தியச் சிந்தனையில் முக்கியக் கூறாகிய தமிழ்ச்சிந்தனையைப் பற்றியே மிகுதியும் இயம்பினார். "இலத்தீன், கிரேக்க இலக்கியங்களில் காணப்படும் ஸ்டாயிக் சிந்தனைக் கூறுபாடுகளுடன் ஒத்தகாலத் தமிழ் இலக்கியத்தில் காணப்படும் சிந்தனைகளை ஒப்பிட்டுக் கூறினார். உரோமை ஸ்டாயிக் ஆசிரியர்கள் மக்களிடையே சமத்துவத்தை எடுத்தோதியதை நினைவு கூர்ந்ததோடு அதனை

> 'யாதும் ஊரே யாவரும் கேளிர்'

என்றும் புறநானூற்றுப் பாடலுடனும்,

> "யாதானும் நாடாமால் ஊராமல் என்னொருவன்
> சாந்துணையும் கல்லாத வாறு"

என்னும் குறட் பாவுடனும் ஒப்பிட்டுக் காட்டினார் (அமுதன் அடிகள்; 1993:53) 'ஒரே உலகம்' (One World) என்ற நூலை எழுதிய வெண்டல் வில்கி எனும் அமெரிக்க அரசியல் அறிஞர் பெருமளவில் போற்றிப் புகழப்படுகிறார்; ஆனால் அதற்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே 'ஒன்றே உலகம்' எனும் உயரிய மனப்பான்மையுடன் சிந்தித்துச் சொல்வடிவில் தமிழர்கள் உரைத்துள்ளனர் என்பதற்கு 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற வரிகளுடன் 'பெரிதே உலகம்; பேணுநர் பலரே' "எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே" எனும் புறநானூற்று வரிகளைச் சான்றாதாரங்களாக எடுத்துரைத்தார். அவரது தமிழ்த்தூதின் முக்கிய நோக்கம், தமிழ் ஒரு தொன்மைச் சிறப்பு வாயந்த செழுமையான மொழி என்பதை எடுத்துக் காட்டுவதுடன், தமிழர்களின்

உயரிய சிந்தனையையும், உலகளாவிய பார்வையையும் விளக்கிக் கூறுவதேயாகும்.

தம் உலகச் சுற்றுப் பயணங்களில் தெரிந்து கொண்ட பலவற்றின் அடிப்படையில் தமிழுக்கு உலக அரங்கில் நிலையன இடத்தைப் பெறச் செய்வதற்கு ஆற்ற வேண்டிய பணிகளைச் செயல்படுத்த முயன்றதின் விளைவே, அவர் தொடங்கிய தமிழ் அமைப்புகளும், ஆய்வு மன்றங்களும், இதழ்களும், ஆய்வுகளுமாகும்.

ஆய்வுப் பணிகள்

உலகப் பயணங்களின்போது தமிழ் ஆய்வாளர்களும், ஆர்வலர்களும், தமிழ் ஆராய்ச்சி இதழ் ஒன்று ஆங்கிலத்தில் வெளியிட வேண்டும் என்ற கருத்தை அடிகளாரிடம் வெளியிட்டதின் பயனாகவும், உலகில் பல்வேறு நாடுகளிலும் பணியாற்றிவரும் தமிழ் அறிஞர்களை ஒருங்கிணைத்துத் தமிழ் ஆராய்ச்சியை ஒருமுகப்படுத்தவும், வளப்படுத்தவும் 1952-இல் TAMIL CULTURE எனும் ஆங்கில இதழை அடிகளார் தொடங்கினார். இதுவே, அவரது ஆய்வுப் பணியின் முதல் நிலை. இதற்கு முன் அவர் ஆற்றிய சொற்பொழிவுகளும், கட்டுரைகளும், பேட்டிகளும் தமிழைப் பற்றிய அறிமுகங்களே.

இந்த நூற்றாண்டு, அறிவியல் வளர்ச்சியினால் ஏற்பட்டுள்ள பயன்களை அனுபவித்து வரும் அறிவியல் யுகம். எதையும் அறிவியல் ரீதியாகச் சிந்திப்பதும், அறிவியல் அடிப்படையில் நிரூபிப்பதுமான ஒரு காலக்கட்டம். எனவே தக்க சான்றாதாரங்களின்றி எந்த விதமானக் கருத்துக்களையும், ஆய்வு முடிவுகளையும் எடுத்துரைக்க இயலாது என்பதை அடிகளார் நன்கு அறிவார். எனவே ஆதார பூர்வமான ஆய்வுகளை மேற்கொண்டு, தமிழின் தனிப் பெருஞ்சிறப்புக்களை வெளிப்படுத்துவதோடு தமிழ் ஆய்வையும் வளப்படுத்த முற்பட்டார்.

1. இதழியல் வாயிலான ஆய்வுப் பணிகள்

அடிகளார் தமிழ் ஆய்வில் முழுமையாக ஈடுபடத் தொடங்கிய காலக் கட்டத்தில், தமிழ் ஆய்வு என்பது, பெரும்பாலும், இலக்கண, இலக்கிய ஆய்வுகளாகவும்; அவையும் தொகுத்தலும் விளக்குதலும் என்ற ஓர் அடிப்படையிலும் அமைந்திருந்தது. பண்பாடு, வரலாறு, சமூகவியல், மானிடவியல், நிலவியல், மொழியியல், ஒப்பியல், உளவியல் ஆகிய பல துறைகளைப் பின்புலமாகக் கொண்டோ, தொடர்பு படுத்தியோ ஆய்வுகள் நிகழ்த்தப்பட வில்லை. இத்துறைகளைப் பின்புலமாகக் கொண்டும், தொடர்புபடுத்தியும், மேலை நாட்டு ஆய்வுகள் செழுமையுற்றிருந்தமையை அடிகளார் நன்கறிவார். எனவே, இத்தகைய ஆய்வுகளை அறிமுகப்படுத்துவதின் மூலம், தமிழ் ஆய்வை நவீனப்படுத்த முற்பட்டார். தான் தொடங்கிய TAMIL CULTURE எனும் முத்திங்கள்

இதழில், தமிழ்ப் பண்பாடு, தமிழர் கல்வி நிலை, தமிழர்களின் சிந்தனைச் செழுமை பற்றிய கட்டுரைகளைச் சமகால மேலை இலக்கியத் திறனாய்வுக் கோட்பாடுகளுக்கேற்ப அடிகளாரே எழுதினார்.* மேலும் பலதுறையைச் சார்ந்த அறிஞர்களான சுனித் குமார் சட்டர்ஜி, சர் மார்ட்டிமர் வீலர், வான் ப்யூரர் ஹைமன் டோர்ப், எம். பி. எமனோ, ஜே. ஆர். மார், சி. ஜே. டீல், இ. சி. நோல்ட்டன், வி. எ. மக்காரென்கோ, ஆலிஸ்டர் லாம்ப், எம். எஸ். எச். தாம்ஸன், யு. ஆர். ஏரன் பெல்ஸ், ஆர்னோலேமான் ழான் பீலியோசா, எச். ஹீராஸ், எப். லெக்ரான், எல். பாஜு, எம். ஆந்திரனோவ், கமில் சுவலபில் ஆகியோரின் தமிழ்த் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளையும் இடம் பெறச் செய்தார். (அமுதன் அடிகள் 1993: 100 & 101)

அடிகளார் உரோமையில் மாணவராக இருந்த காலத்திலேயே, வீரமாமுனிவர் கழகம் தொடங்கியவர். பின்னர் 1984-இல் தூத்துக்குடியில் தமிழ் இலக்கியக் கழகம் தொடங்கினார். "அதனுடன் 'உயர்நிலை தமிழ் ஆராய்ச்சி கழகம்' ஒன்றினையும் நிறுவிட திட்டமிட் டிருந்தார்" (அமுதன் அடிகள் 1993:11) அது நிறைவேற வில்லை. ஆனால் தமிழ் இலக்கியக் கழகத்தின் மூலமாகத் தமது எம்.லிட். பட்ட ஆய்வேட்டையும், ஜே.ஜி. சுந்தரம் எழுதிய 'தேம்பாவணி ஆராய்ச்சி' எனும் நூலையும், பேராசிரியர் இரா. பி. சேதுபிள்ளை எழுதிய 'திருக்காவலூர்க் கோயில்' என்ற ஆய்வு நூலையும், ஜே. வி. செல்லையாவின், பத்துப் பாட்டின் ஆங்கில மொழி பெயர்ப்பையும், வெளியிட்டுத் தமிழ் ஆய்வுப் பணிக்கு ஊக்கம் கொடுத்தார். அதன் பின்னர் 1954-இல் சென்னையில் ஏ. சுப்பையா அவர்களது துணையுடன், தமிழ்ப் பண்பாட்டுக் கழகம் (Academy of Tamil Culture) நிறுவினார். 1955-ஆம் ஆண்டு முதல், இக்கழகத்தின் பொறுப்பில், Tamil Culture ஆங்கில இதழ் வெளிவரத் தொடங்கியது. 1966-ஆம் ஆண்டு வரையில் இவ்விதழ் வெளிவந்தது. இவ்விதழ் மூலம் ஏறத்தாழ பன்னிரெண்டு ஆண்டுகள் தமிழ் ஆய்வுக்குச் செய்த பணி அடிகளாரின் அரிய உழைப்பாலும் முயற்சியாலுமேயாகும்.

ஆய்வுக் கட்டுரைகள்

Tamil Culture எனும் ஆங்கில இதழ் தமிழ் ஆய்விற்கு வழங்கிய கொடையை மனதிற் கொண்டு, அவ்விதழ் நின்றமையால், தமிழ் ஆய்வில் ஏற்பட்ட தேக்கத்தை உணர்ந்த தமிழ் அறிஞர்கள், சென்னையில் 1968-இல் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டின் போது Journal of Tamil Studies எனும் ஒரு புதிய இதழைத் தொடங்குவதற்குத் தீர்மானித்தனர். 'இம்முயற்சிக்குப் பக்க பலமாக இருந்தவர் தனிநாயகம் அடிகளார்' (அமுதன் அடிகளார்: 1993:109) தனிநாயகம் அடிகளார் முதன்மை ஆசிரியராகப் பொறுப்பேற்றார். அடிகளாரின் பொறுப்பில் நான்கு இதழ்கள் வெளிவந்தன. இந்த இதழின் முதல் இதழிலேயே, 'இருபதாண்டுக் காலத் தமிழ் ஆய்வுகள்' எனும் தலைப்பில் அடிகளார் கட்டுரை எழுதினார். இதில் கடந்த இருபதாண்டு காலத்தில்

* அடிகளாரின் கட்டுரைகளின் தலைப்பைப் பின் இணைப்பில் பார்க்கவும்

(அடிகளார் தமிழ்த் தூதுப் பயணம் மேற் கொண்டு 1949 முதல் இந்த இதழ் தொடங்கப்பட்ட 1969 ஆம் ஆண்டு வரையிலான இருபது ஆண்டுகள்.) உலகின் பல்வேறு பகுதிகளிலுள்ள அறிஞர்களும் ஆராய்ச்சி நிறுவனங்களும், பல்கலைக் கழகங்களும், தமிழ் ஆய்வில் எத்தகைய கவனம் செலுத்தியுள்ளனர் என்பதைப் பற்றிய ஒரு மதிப்பீட்டை அடிகளார் இதில் விளக்கியுள்ளார்.

தொடக்க காலத்தில், தொகுப்பு நிலையில் தமிழ் இலக்கணமும், இலக்கியமும் ஆய்வுக்களமாக இருந்த நிலை மாறி, தமிழ்ச் சமூக வரலாறு, பண்பாடும் நாகரிகமும், பண்பாடும் மானுடவியலும், உளவியல், சமயம், கவின் கலைகள், மெய்யியல், மொழியியல், ஒப்பியல் என்ற பல துறைகளைத் தழுவியும், தொடர்பு படுத்தியும், தமிழ் ஆய்வு வளம் பெற்று வரும் நிலையின் பரிணாம வளர்ச்சியினை அடிகளார் விளக்கிக் காட்டியுள்ளார்.

மேலும் ஆய்வுத் தகவல்களாக முந்திய நூற்றாண்டுகளில், இந்தியவியல் இடம் பெற்றிருந்த அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில், சமஸ்கிருதம், பாலி, பிராகிருதம் ஆகியவையே கற்பிக்கப்பட்டு வந்தன. ஆனால், தற்பொழுது, பதினெட்டிற்கும் மேற்பட்ட அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில், தமிழ் கற்பிக்கப்படுவதைப் பட்டியலிட்டுக் காட்டுகின்றார் அடிகளார்.

இலண்டன், ஆக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ், இலைடன், சார்லஸ், உப்சாலா ஆகிய பல்கலைக் கழகங்களில் ஏற்கனவே, தமிழ்க்கல்வியும் ஆய்வும் இடம்பெற்றிருப்பினும் அவை இன்று வளர்ந்திருக்கும் நிலையையும் விளக்குகிறார். மேலும், அண்மைக்காலத்தல், மலாயா, ஹைடல்பெர்க், போன், ஸ்டாக்கோம் பல்கலைக் கழகங்களிலும் தமிழ் இடம்பெற்றிருப்பதையும் குறிப்பிடுகிறார். கிழக்கு ஐரோப்பிய நாடுகளில், தமிழ் ஆய்வை வளர்த்துவரும் கமில் சுவலபில், ஆர்னோ லெமாலன், கிளாஸோவ், ஆந்திரனோவ், பியட் கோர்ஸ்கி போன்ற தமிழ் ஆராய்ச்சி அறிஞர்களின் பணிகளையும் மதிப்பீடு செய்துள்ளார்.

இந்தியாவில் தமிழகத்திலும், பிறமாநிலப் பல்கலைக் கழகங்களிலும், இலங்கையில் பேராதனை, கொழும்பு, வித்யோதயா பல்கலைக் கழகங்களிலும், மலாயாப் பல்கலைக் கழகத்திலும் நடைபெற்று வரும் தமிழ் ஆய்வுகளைப் பற்றிய தகவல்களையும் தம் கட்டுரையில் கொடுத்துள்ளார்.

தமிழ் ஆய்வில், எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய பணிகளாகப் பல கருத்துக்களை அடிகளார் சுட்டிக்காட்டுகின்றார். தமிழ்ச் சமூகவியல் உலகச் சமூகவியலுக்கும், தமிழ் வரலாறு உலக வரலாற்றுக்கும், தமிழ் இலக்கியம் உலக இலக்கியத்திற்கும், தமிழ் இசை. உலக இசைக்கும், வளம் சேர்க்க வேண்டும். உலகப் பல்கலைக்

கழகங்களில் தமிழ் தனக்குரிய ஆய்வுகள் தமிழகத்தில் நிகழவேண்டும். வெளிநாட்டு அறிஞர்களுக்குத் தேவையான தமிழ்த் தொடர்பானத் தகவல்களை தரவுகளை, ஆதாரங்களைத் தமிழ்நாட்டு அறிஞர்களே தேடித் தரவேண்டுமென வலியுறுத்துகிறார். இக்கட்டுரை ஆய்வாளர்களுக்கு ஆய்வுத் தொடர்பான தகவல்களைப் பற்றியும், சேர்க்க வேண்டிய தரவுகள் பற்றியும் குறிப்பிடுவதோடு, ஆய்வுக்களங்களையும் அடையாளம் காட்டுவதாக அமைந்துள்ளது. மேலும், தமிழ் ஆய்வின் தற்கால நிலை, போக்கு, வளர்ச்சி போன்றவற்றைப் பற்றிய ஒரு மதிப்பீடாகவும் அமைந்துள்ளது. மொத்தத்தில், ஆய்வுத் தொடர்பாக எக்காலத்திலும் கூர்ந்து கவனிக்க வேண்டிய பார்வைக் கட்டுரையாகவும் (Reference Article) காணப் படுகிறது.

தொல்காப்பிய ஆய்வு

தொல்காப்பியத்தின் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டவர் அடிகளார். தொல்காப்பியம் இலக்கண நூல் மட்டுமல்ல, அது வாழ்க்கை நூல் என்பது அடிகளாரின் எண்ணம். அதன் அணி இலக்கணமும், இலக்கியத் திறனாய்வு முறைகளும், அடிகளாரைப் பெரிதும் கவர்ந்தவை. எனவே, தமது ஆய்வுக் கட்டுரைகளிலும், நூற்களிலும் தொல்காப்பியரின் கருத்துக்களைப் பெருமளவில் எடுத்துக் காட்டியிருப்பதைப் பார்க்க முடிகிறது.

Journal of Tamil Studies என்ற இதழில், தாம் அதிலிருந்த பொறுப்பை விலக்கிக் கொண்ட பின்பு 1972-இல் “தொல்காப்பியம் மிகப் பழைய ஆவணம்” எனும் தலைப்பில் ஓர் ஆய்வுக் கட்டுரையை எழுதினார்.

தொல்காப்பியத்தில் இடம் பெற்றுள்ள இலக்கிய வழக்குகள் பல, பிற்கால இலக்கியங்களில் இடம் பெறாமையால், தொல்காப்பியம் மிகப் பழையநூல் என்பது அடிகளார் துணிபு. மேலும், தொல்காப்பியர் செய்யுளியலில் கூறும் யாப்பு வகைகள் பல வழக்கிழந்து விட்டன. நீண்ட நெடுங்காலமாக வழக்கிலிருந்த சொற்கள் தொல்காப்பியர் காலத்திலியே வழக்கத்திலில்லாமையால், அத்தகைய சில சொற்களுக்குத் தொல்காப்பியர் பொருள் கூறவேண்டிய தேவையைச் சான்றுகளுடன் குறிப்பிடுகின்றார். மெய்ப்பாட்டியலில் இடம் பெற்றுள்ள கருத்துக்கள், இன்றைய உளவியல் கோட்பாட்டிற்கு எந்த வகையில் பொருந்திக் காணப்படுகிறது என்பதையும் நிறுவுகிறார்.

தொல்காப்பியம், நிலவியல், சமூகவியல், மானுடவியல், பண்பாட்டுச் சுற்றுப்புறச் சூழலியல், பண்பாட்டு மாற்றம் ஆகியவற்றின் கருவூலமாகவும் திகழ்கிறது என்பது அடிகளார்க் கருத்து. முதுமொழிகள், விடுகதைகள், மந்திரம், நகைச்சுவை, நாடகம், உரைநடை எனும் பல்வகை

இலக்கியங்களுக்குத் தொல்காப்பியத்தில் கூறப்படும் இலக்கணத்தை எடுத்துக் காட்டுகின்றார்.

தொல்காப்பிய அகத்திணையிலுள்ள கைக்கிளையும், பெருந்திணையும் பிற்காலத்தில சேர்க்கப்பட்டவையே என்பது அடிகளார் கருத்து. முதலில் நான்கு திணையும், அதன் பின்னர் பாலையைச் சேர்த்து ஐந்து திணைகளாக அமைக்கப்பட்டது. கைக்கிளையும் பெருந்திணையும் பின்னால் சேர்க்கப்பட்டன. பிறகு, புறம் ஏழுதிணைகளாக வகுக்கப் பட்டது. என்பது அடிகளார் கருத்து செய்யுளியலில் பல இலக்கிய வகைகளைத் தொகுத்துக் கூறியிருப்பினும் அவை புலவர்களின் கற்பனையையும் சிந்தனைகளையும் கட்டுப்படுத்தாது என்று அடிகளார் குறிப்பிடுகிறார்.

பக்தி, இசை, நாடகம் போன்றவற்றிற்கும் இலக்கணம் கூறும் நூல்கள் இருந்திருக்க வேண்டும். எனவே, தொல்காப்பியர் அவற்றை கூறாதிருந்திருக்கலாம், அல்லது அவர் கூறியவை அழிந்து போயிருக்கலாம் என எண்ணுகிறார். படியெடுத்தோர் செய்த பிழைகளின் காரணமாகவும், இடைக்காலத்தில் ஏற்பட்ட இடைச் செருகல்கள் காரணமாகவும், தொல்காப்பியத்தில் பாடபேதங்கள் உள்ளன. ஓலைச் சுவடிகள், அச்சு வடிவம் பெறும்போது இவ்வாறு நிகழ்வது இயல்பு என அடிகளார் சுட்டிக் காட்டுகின்றார். தொல்காப்பியப் பாயிரத்தில் இடம் பெற்றுள்ள 'ஐந்திறம்' பாணினிக்கு முந்தியது என்றும், தொல்காப்பியம் வடமொழி இலக்கணத்தைச் சார்ந்தது என்பது ஆதாரமற்ற கருத்து என்றும் அடிகளார் கருத்துத் தெரிவித்துள்ளார்.

தொல்காப்பியம் கூறும் திணைகள், திணைக்குரிய தொழில்கள், சமுதாயம் பகுப்புகள், திணைக்குரிய வாழ்க்கை முறை ஆகியவற்றை இன்றைய இலக்கியக் கொள்கைகளின் வாயிலாக மதிப்பீடு செய்வதற்கும் ஆய்வதற்கும் வாய்ப்புகள் பல இருப்பதையுஞ் சுட்டிக் காட்டுகின்றார். தொல்காப்பியத்தைப் பற்றிச் சிந்திப்போருக்கும், ஆய்வோருக்கும் இவ்வாய்வுக் கட்டுரை பெரிதும் பயனளிக்கும்.

அடிகளார் தான் தொடங்கி நடத்திய Tamil Culture என்ற இதழில் தொடர்ந்து 24 ஆய்வுக் கட்டுரைகள் எழுதினார். அவற்றுள் 'தமிழ்ப் பண்பாடு - நேற்று இன்று நாளை', 'இந்தியச் சிந்தனையும் உரோமை ஸ்டாயிக் சிந்தனையும்', 'தமிழ் இலக்கிய ஆய்வில் முன்னறிவோடு தொடர்புபடுத்தல்', 'தமிழ்ப்பண்பாடு நின்று நிலைத்தல், 'ஐரோப்பிய நூலகங்களில் தமிழ்க் கையெழுத்துப் படிகள்', 'தென் கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாட்டுத் தாக்கம்', 'தமிழில் அச்சேறிய முதல் நூல்கள்', 'திரு.வி.க. வின் எழுத்துக்களில் இயற்கையும் இயல்பும்' ஆகிய கட்டுரைகள் குறிப்பிடத்தக்கன. இவற்றில் சில ஏற்கனவே சொற்பொழிவில் இடம் பெற்றவையாக இருப்பினும், கட்டுரை வடிவம் கொடுக்கும் பொழுது ஆய்வுக் கட்டுரைக்குரிய சான்றாதாரங்களுடன் எழுதியுள்ளார்.

இந்தியச் சிந்தனையும் உரோமைஸ்டாயிக் சிந்தனையும்

உரோமைஸ்டாயிக் சிந்தனையும் எனும் கட்டுரையில் இந்தியச் சிந்தனையென்றால், அது சமஸ்கிருதத்தில் கூறப்பட்டுள்ள சிந்தனை மட்டும் அல்ல தமிழர் சிந்தனையும் சேர்ந்ததுதான் இந்தியச் சிந்தனையாகக் கருதப்படும் - கருதப்படவேண்டும். வடவரும், சமஸ்கிருதம் மட்டுமே அறிந்த வெளிநாட்டவரும் இதை மறந்து விட்டனர். தமிழர் சிந்தனையை உட்படுத்தாத ஒரு சிந்தனை இந்தியச் சிந்தனை ஆகாது என வாதிடுகிறார். மேலும், மேலை நாடுகளில் வளர்ந்துள்ள சிந்தனைகளுடன் தமிழர் சிந்தனைகளே ஒப்பிடத்தக்கத் தகுதியும் வளமும் உடையன என்று நிறுவுகிறார். உரோமையிலுள்ள ஸ்டாயிக் சிந்தனைகளுடன், சங்க இலக்கியங்களில் குறிப்பாகப் புறநானூற்றுப் பாடல்களிலும், திருக்குறளிலும் இடம்பெற்றுள்ள 'ஒன்றே உலகம்' எனும் கோட்பாடுகளை வெளிப்படுத்தும் கருத்துக்களை ஒப்பிட்டுக் காட்டுகிறார்.

முன்னறிவோடு தொடர்புபடுத்தல் - கொள்கை

1966 செப்டம்பர் Tamil Culture இதழில் வெளியான, 'தமிழ் இலக்கிய ஆய்வில் முன்னறிவோடு தொடர்பு படுத்தல்' (Apperception in Tamil Literary Studies) எனும் ஆய்வுக் கட்டுரை, ஓர் ஆய்வுக் கட்டுரை எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்குரிய சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது. முதலில் முன்னறிவோடு தொடர்பு படுத்தல் என்றால் என்ன என்பது பற்றிய விளக்கம் கொடுக்கிறார். அந்தக் கோட்பாட்டை அறிமுகப்படுத்திய ஜோகன் பிரீட்ரிச் ஹெர்பட் (Johann Friedrich Herbert) பற்றிய செய்திகள் அவர் அக்கொள்கையை உருவாக்கிய நிலை அதைக் கடைப்பிடித்தன்மை போன்றவற்றை விளக்குகிறார்.

முன்னர் அல்லது ஏற்கனவே தெரிந்து கொண்ட கருத்துகளினாலும், அனுபவங்களினாலும் புதிதாக ஏற்படக் கூடிய கருத்துக்களையும் அனுபவங்களையும் அடிப்படையாகக் கொண்டு ஆய்வதே இதன் நோக்கம். ஓர் இலக்கியத்தைப் படிக்கும் பொழுது ஏற்படும் பாதிப்பின் பிரதிபலிப்பினால் இதைத் தெரிந்து கொள்ளலாம். ஆனாலும், ஒரே கதையையோ ஒரே கதை மாந்தரையோ, ஒரே உவமையையோ படிக்கும் மனிதர்கள் மனத்தளவில் ஒருவருக் கொருவர் வேறுபட்டே காணப்படுவர். அவை அவர்களது முன் அனுபவத்தாலும், அறிவினாலும் அமையும். இக்கோட்பாட்டிற்கு உரிய எடுத்துக்காட்டாகப் பாரதியாரின் 'புகழ் மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு' என்ற பாடல் வரியை எடுத்துக் காட்டுகிறார். அது படிப்போர் ஒவ்வொருவரையும், அவர்களது முன் அனுபவத்திற்கும், அறிவிற்கும் கருத்திற்கும் ஏற்ப எவ்வாறு எழுச்சியூட்டும் என்பதை விளக்குகிறார்.

வரலாற்றுத் துறையின் முன்அறிவு உடையவன், பழைய சோழர்கால ஆட்சிச்சிறப்பு, கட்டிடக்கலை, சைவ சமயம்

செழித்தோங்கியது ஆகியவற்றைப் பற்றி நினைக்கலாம். திருக்குறளின் பெருமையை நினைக்கலாம். இப்படித் தனது அனுபவத்திற்கும் முன் அறிவிற்கும் ஏற்ப பாரதியார் கூறிய 'புகழ்' என்பது பற்றி நினைக்க வாய்ப்புண்டு என்பதைச் சுட்டுகிறார்.

மேலும், மேலை இலக்கியக் கொள்கைகள் ஓர் இலக்கியத்தை இலக்கியமாகப் படிப்பதற்கு எவ்வகையில் உதவுகிறது. என்பதையும் குறிப்பிட்டு, தமிழ் இலக்கியத்தை எவ்வாறு அணுகவேண்டும் என்பதையும் எடுத்துக்காட்டுகின்றார்.

ஓர் இலக்கியத்தை அணுகுவதற்கு இரு வழிகள் உள்ளன. ஒன்று, ஒரு கவிதையின் முக்கியமான தன்மைகளை ஆய்வது. இன்னொன்று, முன்னறிவோடு தொடர்பு படுத்தக்கூடிய, சமூகவியல், மானுடவியல் பின்புலங்களை ஆய்வது. மேற்குறிப்பிட்டவற்றின் அடிப்படையில் தமிழ் இலக்கியங்களை ஆயவேண்டியதின் அவசியத்தை வலியுறுத்துகிறார்.

தொடக்ககாலத் தமிழ் ஆய்வின் எல்லை எந்த அளவுக்கு இருந்தது என்பதற்குப் பழைய உரையாசிரியர்களின் உரைகளை மேற்கோள்களாகக் காட்டுகிறார். உரையாசிரியர் இலக்கணங்களின் விதிமுறைகளை விளக்கினர். ஒரு படைப்பின் சாரத்தைப் படித்து எளிமையாகவும், முழுமையாகவும் புரிந்து கொள்ளுவதற்குமுரிய வகையில் உரை எழுதினர். புரிய வைப்பதற்கு அதை ஒத்த, - அதற்கு இணையான எடுத்துக்காட்டுகளைச் சுட்டிக்காட்டி விளக்கினர். ஒரு வகையில் பழைய நிகண்டுகள் கொடுக்கும் தொடர்புடைய செய்திகளைப் போல ஒரு குறிப்பிட்ட அளவோடு தான் அவை இருந்தன. நிகண்டுகள் பட்டியலிட்டுக் குறிப்பிட்டன; உரையாசிரியர்கள் பட்டியலிடவில்லை. இரண்டும் ஒரே தன்மையையே கொண்டிருந்தன.

தொடக்ககால உரையாசிரியர்களைவிட அடியார்க்கு நல்லார் மேலும் வளர்ந்த நிலையை, வெளிப்படுத்துகிறார். கலைகளைப் பற்றியும் இளைஞர்களைப்பற்றியும் குறிப்பாக நாடகங்கள் அவை நிகழும் அரங்குகளைப் பற்றியும் பல்வேறு வகையான இசை கருவிகளைப் பற்றியும், இசைவாணர்களைப் பற்றியும் மிகவும் அதிகமானச் செய்திகளைத் தருகிறார். அவரது பல்வகைப்பட்ட அறிவையும், கருத்துக்களையும் நோக்கும் போது, ஓர் அறிவுக் களஞ்சியமாகத் திகழ்கிறார். பெரும்பாலும் உரையாசிரியர்கள், பெரிய இலக்கிய அறிவாளிகளாகவும், திறனாய்வுச் செய்யக் கூடிய சுடர்அறிவும், பரந்து பட்ட கல்வியும் உடையவர்களாகவே உள்ளனர்.

ஆனால், அவர்கள் காலத்தில், அவர்களுக்குக் கிடைத்ததரவுகளை ஆதாரமாகக்கொண்டு அவர்களது அறிவாற்றலுக்கும் பட்டறிவிற்கும் ஏற்ப மிகுதியானத் தகவல்களைச் சேகரித்துத்

தந்துள்ளனர். ஒரு தலை முறைக்கும் இன்னொரு தலைமுறைக்கும் இடையில், அறிவு நிலையிலும், அனுபவ நிலையிலும், அறிவியல் வளர்ச்சி நிலையிலும், பல்வேறு வகையனப் புதுப்பிரிவுகளின் தனிப்பட்ட வளர்ச்சி நிலையிலும் மிகுந்த இடைவெளிகள் உள்ளன. எனவே, உரையாசிரியர்கள் காலத்தில் ஓர் இலக்கியத்தைப் பற்றி விளக்குவதற்கோ, எடுத்துரைப்பதற்கோ மதிப்பீடு செய்வதற்கோ கிடைத்த தகவல்களை - வாயில்களை விட இன்று மிகுதியாகக் கிடைக்கின்றன. சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ள காவிரிப்பூம் பட்டினத்திலுள்ள யவனர்களைப் பற்றி அடியார்க்குநல்லார் சொன்ன செய்திகளைவிட, பட்டினப்பாலையில் இடம்பெற்றுள்ள அதே காவிரிப் பூம்பட்டினத்தைப் பற்றியும், யவனர் பற்றியும் நச்சினார்க்கினியர் அதிகமாகச் சொல்கிறார். இன்று அறிவியல் வளர்ச்சியினால் கிடைத்திருக்கும் வாயில்களினாலும், அவைமூலம் பல்தரப்பட்ட செய்திகள் மிகுதியாகக் கிடைப்பதாலும்; காவிரிப்பூம்பட்டினம் பற்றியும், யவனர் பற்றியும் புதிய பல செய்திகளை ஆதார பூர்வமாகச் சொல்ல இயலும். தனிப் பெருஞ் செம்மொழி என்று ஒரு தன்மை இன்று ஏற்பட்டிருக்கும் நிலை அன்று ஏற்பட வாய்ப்பிலை. இன்று தமிழை ஒரு செம்மொழியாக நோக்கி, உலகத்திலுள்ள பிற செம்மொழிகளோடு ஒப்பிட்டுப் பார்க்க முடிகிறது.

இன்று ஒவ்வொரு துறையிலும் பலப்பிரிவுகள், கிளைகள் மலர்ந்துள்ளன. அறிவு நிலையில் ஆழப்புலமையும் அகலப் புலமையும் மிகுதியாக வளர்ந்துள்ளன. எனவே, பழைய இலக்கியங்களைப் பற்றி எடுத்துரைப்பதற்கும், விளக்குவதற்கும், ஒப்பிடுவதற்கும், இன்றுள்ள அறிவியல் வளர்ச்சியில் பல வாய்ப்புக்கள் உள்ளன. பழைய உரையாசிரியர்கள், படைப்புக்களிலிருந்து சிலவற்றைக் கண்டு பிடித்தார்கள். அவர்கள் கண்டுபிடிப்பின் மறு கண்டு பிடிப்புகளாகவே இன்றுள்ள மதிப்பீடுகளும், ஆய்வுகளும் காணப் படுகின்றன.

நாம், பழமையைப் பார்க்கும் பொழுது நமக்குக் கிடைக்கும் ஒரு வியப்பு, ஒரு கிளுகிளுப்பு, ஒரு புத்துணர்வு, ஒரு புது அனுபவம், ஒரு பெருமை, எதிர்பார்க்க இயலாத செய்திகள் ஆகியவை உரையாசிரியர்களுக்குக் கிடைக்க வாய்ப்பில்லை. ஆகவேதான், இலக்கியங்கள் பற்றிய இன்றைய மதிப்பீடு, அறிவியல் வளர்ச்சியின் - சிந்தனை வளர்ச்சியின் பிரதிபலிப்பாக அமைந்திருக்கும் என்பது அடிகளார் கருத்து.

மேலும் மொழியியலின் துணைகொண்டு, மொழியின் பல்வகை அமைப்புகளை உருவவியல் அடிப்படையிலும், அமைப்பியல் அடிப் படையிலும், நடையியல் அடிப்படையிலும் வகைப்படுத்திப் பார்க்கும் வாய்ப்பு இன்று வளர்ந்து உள்ளது. எனவே, காலம் மாற மாற இலக்கியப் படைப்புக்கள் பற்றிய கருத்துகள் கணிப்புக்கள், மதிப்பீடுகள்,

ஆய்வுகள், கொள்கைகள் மாறுவதற்கு வாய்ப்புக்கள் மிகுதி என்பது அடிகளார் கருத்து.

மேற்குறிப்பிட்ட ஆய்வுக் கட்டுரையின் பின்பகுதியில், வளர்ந்து வரும் மொழியியல் பற்றிய விழிப்புணர்ச்சியைத் தமிழ்த் திறனாய்வாளர்கள் பெற வேண்டுமென வற்புறுத்துவதோடு, நடையியலின் பல்வகைப் பிரிவுகளையும், அவற்றின் தன்மைகளையும் தமிழ்ச் செய்யுளிலிருந்து பல எடுத்துக்காட்டுகளை எடுத்தாண்டு விளக்கியுள்ளார்.

அடிகளார் தமிழில் வெளியிட்ட முதல்நூல்

முதலில் அச்சேறிய தமிழ் நூல்பற்றிப் பல கருத்துக்கள் உள்ளன, ஒவ்வொருவரும் ஒவ்வொரு நூலைக் குறிப்பிடுகின்றனர். சிலர் ஆண்டைக் குறிப்பிட்டுள்ளனர். சிலர் நூலின் பெயரை மட்டும் குறித்துள்ளனர். ஆனால், அவர்கள் குறிப்பிடும் ஆண்டுகளுக்கெல்லாம் முன்னதாக அச்சேறிய தமிழ்நூல் பற்றி 1958 சூலையில் வெளியான Tamil Culture எனும் இதழில், 'தமிழில் அச்சேறிய முதல்நூல்' (First Book Printed in Tamil) எனும் தலைப்பில் ஓர் ஆய்வுக் கட்டுரையை அடிகளார் எழுதினார்.

இக்கால வரலாற்றில் தமிழ் நாட்டுடன் முதலில் தொடர்பு கொண்டவர்கள் போர்த்துக்கீசியர். போர்த்துக்கீசிலிருந்து வந்த குருக்களும், பிரபுக்களும் தமிழைக் கற்றனர். "இக்குருக்களே முதன் முதல் தமிழ் நூல்களை அச்சிடுவதற்குத் தமிழ் அச்சுப் பொறிகள் இயற்றிப் பதினாறாம் நூற்றாண்டிலேயே தமிழ் நூல்களை அச்சிட்டனர்" என்பதைத் தம் ஆய்வுக் கட்டுரையில் நிறுவுகிறார். போர்த்துக்கீசியம் சென்ற அடிகளார் இந்த உண்மையை அறிவதற்காகவே இரண்டு மூன்று முறை அங்குள்ள லிஸ்பான் நகருக்குச் சென்றுள்ளார். அங்குத் தமிழ் நாட்டைப் பற்றிய பழைய அறிக்கைகளைப் படித்த பொழுது, தமிழில் அச்சேறிய நூல்கள் பற்றிய தகவல் கிடைத்திருக்கிறது. அதில், 'Museu Etnologico' எனும் பொருட்காட்சி நிலையத்தில் 1554-ஆம் ஆண்டு அச்சிடப்பெற்ற நூல் ஒன்றைப் பார்த்தார் அடிகளார். இது 1948-இல் 'போர்த்துகீசிய நூல்கள் அச்சேறிய வரலாறு' எனும் நூலின் வாயிலாகப் பொதுமக்கள் பார்வைக்கு வந்துள்ளது. இந்தத் தகவலின் பேரில் 1954-இல் லிஸ்பானில், அந்த நூலை அடிகளார் பார்வையிட்டார். அதன்படி, "Cartilha" எனும் அந்த நூல் லிஸ்பானில் 1554-இல் அச்சிடப்பட்டுள்ளது. இந்நூலில் தமிழ் எழுத்துக்கள் கையாளப்படாமல் உரோமருடைய எழுத்துக்கள் தமிழ் ஒலிகளைக் குறிப்பதற்குக் கையாளப் பெற்றிருக்கின்றன. இப்பிரதி ஒன்றே இப்பொழுது உலகிலுள்ளது என்று அடிகளார் குறிப்பிடுகிறார். இதில் 36 பக்கங்கள் உள்ளன. கத்தோலிக்க கிறித்தவ சமயத்தின் வழிபாட்டு முறைகளும், செபங்களும் இதில் அடங்கியுள்ளன. தமிழ்ச் சொற்களை உரோம எழுத்துக்களில் அச்சிட்டு

அவற்றின் உச்சரிப்பையும் பொருளையும் போர்த்துக்கீசிய மொழியில் ஒவ்வொரு வரிக்கும் இடையே அச்சிட்டிருக்கின்றனர். இந்நூலினை இயற்றுவதற்கு அப்பொழுது போர்த்துக்கல்லிலிருந்த தமிழ் பேசும் இந்தியர் மூவர் துணை செய்தனர் என்றும், இந்நூலினை மேற்பார்வை செய்து செப்பனிட்டவர், இலங்கையில் கத்தோலிக்க மறையைப் போதித்த ஜோவாம் விலா கொண்டே (Joam de Villa conde) என்பவர் என்றும் நூலின் முடிவுரையில் கூறப்பட்டுளது. "இந்திய மொழிகளுக்குள்ளும் கிழக்கு ஆசிய மொழிகளுக்குள்ளும் அச்சுக்கண்ட முதல் மொழி தமிழ் மொழி" (அடிகளார்:1966:175) என்பது அடிகளார் துணிபு.

தமிழில் இரண்டாவது அச்சேறிய நூல் 'தம்பிரான் வணக்கம்' (Doctrina Christamen Linguna Malaur Ṭamul). இது 1577-ஆம் ஆண்டு பெப்ரவரி 20-ஆம் நாள் கேரளாவிலுள்ள கொல்லம் எனும் இடத்தில் அச்சிடப்பட்டுள்ளது. மொத்தம் 16 பக்கங்கள் உள்ளன. இதில் கிறித்தவ செபங்களே இடம் பெற்றள்ளன. 1952-இல், ஹாவர்ட் பல்கலைக் கழக நூலகச் செய்திமலரில் அச்சிடப்படுவதற்கு முன்னர் இதைப் பற்றிய செய்தியை அறிஞர்கள் அறியாதிருந்தனர். இச் செய்தி மலரின் நகலை ஜி.டப்ளியூ. காட்ரல் (G.W. Cottrel Jr) எனும் ஹாவர்ட் பல்கலைக்கழக நூலகரிடமிருந்து அடிகளார் பெற்றுள்ளார். இந்தியாவிலுள்ள ஒரு மொழியில் அச்சிடப்பட்டதாகக் கிடைத்த நூல்களுள் இந்த நூல் தான் முதலாவதாக உள்ளது என்றும், இந்தியாவிலுள்ள மொழியில் எவ்வாறு அச்சிடுகின்றனர் என்பதற்கும், இந்தியாவின் அச்சின் தன்மையையும் தரத்தையும் நிர்ணயிப்பதற்கும் இந்நூலை ஓர் எடுத்துக்காட்டாக அம்மலரில் வெளியிட்டுள்ளனர் என்றும் அடிகளார் குறிப்பிடுகின்றார்.

இந்நூலின் ஒரு படி, இந்தியாவிலிருந்து உரோமைக்கு அனுப்பப்பட்டிருந்தது அதை உரோமில், தவத்திரு. பெட்ரோ. டி பொனஸ்கோ (Father Pedro de Fonesco) என்பவர் 1579 நவம்பர் மாதம் பெற்றுள்ளார். இந்தப்படி 1773 வரையிலும், சியனா (Seina) விலுள்ள இயேசு சபையினரின் பாதுகாப்பிலும், அதன்பிறகு, வியன்னாவிலும் இருந்திருக்கிறது. பின்னர், ஐரோப்பிய புத்தக விற்பனை நிலையங்களுக்கும், அமெரிக்க புத்தக விற்பனை நிலையங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. இலண்டனிலுள்ள வில்லியம் செ. ராபின்சன்ஸ் நிறுவனத்திடமிருந்து 1951-இல் ஹாவர்ட் பல்கலைக்கழக நூல் நிலையம் இதை வாங்கியுள்ளது.

1579-இல் கொச்சியில் அச்சிடப்பெற்ற 'கிரீசித்தியானி வணக்கம்' (Doctrina Christam) எனும் நூலைத் தமிழிலுள்ள மூன்றாவது நூலாக அடிகளார் குறிப்பிடுகிறார். இது மொத்தம் 120 பக்கங்கள் கொண்டது.

தமிழில் அச்சேறிய நான்காவது நூலாக அடிகளார், 1586-இல் அச்சிடப்பட்டதாகக் கருதப்படும் ஒரு நூலைப் பற்றிய செய்தியைக்

குறிப்பிடுகிறார். இந்த நூலின் தலைப்புப் பொருந்திய அட்டைப் பகுதியும், முன்னுரைப் பகுதியும், இல்லை. இதை வத்திகான் நூல் நிலையத்தில் அடிகளார் கண்டெடுத்தார். எனவே வெளியிடப்பட்ட ஆண்டைத் துல்லியமாக வரையறுக்க இயலவில்லை என்றும், இருப்பினும் 1587 ஆம் ஆண்டு கிறிஸ்து உயிர்த்தெழும் நாளைப் பற்றிக் குறிப்பிடுவதிலிருந்தும் நூலின் ஆசிரியர் ஸ்பானிஷ் மொழியில் எழுதிய முன்னுரையில் கூறும் செய்திகளிலிருந்தும் நூல் 1586-இல் அச்சிடப்பட்டிருக்க வேண்டுமென்பது அடிகளார் எண்ணம். இது 669 பக்கங்களைக் கொண்ட ஒரு பெரிய நூல்.

பதினாறாம் நூற்றாண்டில் கத்தோலிக்கக் குருக்கள் தமிழ் அச்சகங்களைத் தென்னிந்தியாவில், கொச்சிக்கு அண்மையிலுள்ள அம்பலக் காட்டிலும், கொல்லத்திலும், புன்னைக் காயலிலும் நிறுவினர். அவற்றின் வாயிலாக மூன்று நூல்களாயினும் அச்சிட்டிருக்க வேண்டுமென அடிகளார் கருதுகிறார். அவற்றில் இரண்டை மட்டுமே தமிழ் ஆராய்ச்சியாளர்கள் அறிந்திருந்தனர் என்று குறிப்பிடுகிறார் "திருத் தொண்டர் திருமலர்" (Flos Sanctorum) எனும் மூன்றாவது நூலைப்பற்றிய செய்தி அறிந்திருந்தும் அதையாரும் பார்த்திருக்க வாய்ப்பில்லை என்கின்றார். அந்த நூல்தான் வத்திகான் நூல் நிலையத்தில் தாம் கண்டெடுத்த நூல் என்று குறிப்பிடுகிறார். இவ்வாறு தமிழில் முதலில் அச்சேறிய நான்கு நூல்களைத் தம் ஆய்வின்மூலம் தமிழ் அறிஞர்களுக்கு அறிமுகப்படுத்துகிறார். இவை பற்றிய செய்திகள் புதுமையாகவும் உள்ளன. இந்திய மொழிகளில் ஆரம்ப கால வெளியீடுகளாகத் தமிழ் நூல்கள் வெளியிடப்பட்ட சிறப்பினை வெளிப்படுத்துவதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.

மேலும் இவ்வாய்வுக் கட்டுரையின் மூலம் பல கருத்துக்களையும் புதிய செய்திகளையும் குறிப்பிடுகிறார். பொதுவாக, இந்தியாவிற்கு வந்த சமயக் குருக்கள், மதத்தைப் பரப்புவதையும் அதற்கான பிரச்சாரத்தையும் குறிகோளாகக் கொண்டிருந்தாலும், கல்வியின்மூலம், மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி சமுதாய மாற்றங்களுக்கும், மறு மலர்ச்சிக்கும் வித்திட்டமையையும்; மொழியைக் கற்று, அதன் பெருமையை வெளிப்படுத்தியமையையும், மொழி மேம்பாட்டிற்காக ஆற்றிய பணிகளையும் குறைவாக மதிப்பிட முடியாது என்பது அடிகளார் கருத்து. பதினாறாம் நூற்றாண்டில் வந்த ஐரோப்பிய குருக்கள், கல்வியைக் கொடுப்பதையும், அச்சுக் கலையை அறிமுகப் படுத்துவதையும் மையக் கருத்தாகக் கொண்டு செயல்பட்டனர் என்பது, தொடக்க காலத்திலிருந்து அவர்களின் பணிகளைக் கூர்ந்து கவனிக்கும் பொழுது புலப்படும் உண்மையாகும் என்கிறார் அடிகளார்.

தொடக்ககால முன்னோடிகளில் ஒருவரான ஹென்றிக்ஸ் (1520-1800) என்பவர், தமிழ் மொழியை அறிவியல் அடிப்படையில் கற்க வேண்டிய முறைகளைத் தொடங்கியுள்ளார். 1560-இலேயே,

மன்னாரிலோ, புன்னைக் காயலிலோ, ஒரு தமிழ்ப் பல்கலைக் கழகம் தொடங்க வேண்டும் என்ற அவரது கருத்தையும் அடிகளார் வெளியிட்டுள்ளார்.

அச்சு இயந்திர அறிமுகம் இந்தியாவில், கல்வியிலும், சமுதாய மாற்றத்திலும் முக்கியமான பங்கைப் பெற்றுள்ளமையை மறக்க இயலாது. இயேசு சபையைச் சார்ந்த ஒரு குருவானவர் ஐரோப்பாவிலிருந்து, இலத்தீன் அச்சுக்களைக் கொண்டு வந்து 1556-இல் கோவாவில் ஓர் அச்சகத்தை நிறுவினார். இந்தச் செய்தியை 1952-இல் வெளியான, ஹாவர்ட் பல்கலைக் கழக நூலகச் செய்தி மலரிலிருந்து அறிந்தாகக் குறிப்பிடுகிறார் (Genge Schurhammes and G.W. Cottrell "The First Printing in Indian Character po.147-160-Harward Library Bulletin vol. VI no.2, Spring 1952) கோவாவிலுள்ள அச்சகத்தில், இலத்தீன் போர்ச்சுகீசியம் ஆகியவையே அச்சிடப் பெற்றன. ஆனால் இந்தியாவில் கோவாவில், அச்சகம் நிறுவுவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே, லிஸ்பானில் முதல் தமிழ் நூல் அச்சிடப்பட்டது.

இவ்வாறு அச்சக அறிமுகத்தால் மொழியும் மக்களும் அடைந்த பயன்களையும் கட்டுரையில் எடுத்துரைக்கிறார்.

இந்தியச் சிந்தனை

அடிகளார் 1957 சனவரி இதழில் "தொடக்க கால இந்தியச் சிந்தனை" (A Seminal Period of Indian Thought) எனும் ஆய்வுக் கட்டுரையில், இந்தியச் சிந்தனை யென்றால், சமஸ்கிருதத்தின் வாயிலான ஆரிய சமயம் சார்ந்த சிந்தனைகளே என்று சொல்லப்படுகிறது. இது எந்த வகையில் தவறானது என்பதையும் இந்தியச் சிந்தனையென்றால், தமிழ் வழியிலானத் திராவிடர் சிந்தனையே என்றும் எடுத்துரைக்கிறார் அடிகளார்.

இந்தியச் சிந்தனையின் தொடக்க காலமாக, கி.மு. ஆறாம் நூற்றாண்டை வரையறை செய்கின்றனர். இந்தக் காலக் கட்டத்தில் தான் மரபுவழி நம்பிக்கைகளையும், சமயக் கருத்துக்களையும் பற்றி வினவத் தொடங்கினர். எனவே, இந்தியச் சிந்தனையின் தொடக்கமாக இக்காலம் கருதப்படுகிறது.

இந்த நூற்றாண்டில் இந்தியாவில் காணப்பட்ட சிந்தனைகளைப் பற்றி ஆய்ந்தவர்களில், சார்லஸ் எலியட் (Charles Eliot) குறிப்பிடத்தக்கவர். சார்லஸ், தனது **இந்து சமயமும் பௌத்தமும்** என்ற நூலில், பொதுவாக இந்தியச் சமயம் என்றால், அது ஆரியர்களின் சமயம் வாயிலாக வந்த சமயங்களே என்று சொல்லப்படுகிறது. வட நாட்டிலிருந்து இந்தியாவின் தென்பகுதி வரையிலும் சென்ற ஆரிய சமயம், திராவிட நாகரிகம் பண்பாட்டோடு தொடர்பு கொண்டமையால், மாறுதல் அடைந்தது. ஆனால், இந்தியச் சமயம் என்றால் அது திராவிடர் சமயமே. ஏனென்றால், ஆரியர் இந்தியாவிற்கு வந்து குடியேறியவர்கள்.

இந்தியாவின் பல பகுதிகளை ஆக்ரமித்தவர்கள். திராவிடர்கள் சமயம், இந்தியச் சமயமாக பரிணமித்தது. ஆரிய சமயத்தாக்கத்தால் சில மாற்றத்தையும் பெற்றது. எனவே, இந்தியச் சமயம் என்றால், அது திராவிடச் சமயமே. மேலும், சமயம் என்பது ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பைச் சார்ந்தது. ஆரியர்களின் நிலப்பரப்புக்களாகிய, கிரீஸ், பெள்ஷியா போன்ற இடங்களின் சமயம், இந்தியச் சமயம் ஆகாது. இந்திய சமய வழிச்சிந்தனை என்றால், ஆரிச சமய வழிச் சிந்தனை இந்தியச் சிந்தனை ஆகாது. திராவிடச் சிந்தனையே இந்தியச் சிந்தனை என்று குறிப்பிடுகிறார். சார்லஸ் குறிப்பிடும் கருத்துக்களையும், ஹெயின்ரிச் சிம்மர் **(Heinrich Zimmer), "இந்தியத் தத்துவங்கள்"** எனும் நூலில் கூறும் இது போன்ற கருத்துக்களையும் ஆதாரங்களாகக் காட்டி, திராவிடச் சிந்தனையே இந்தியச் சிந்தனை என அடிகளார் நிறுவுகிறார்.

கிரேக்கத்திற்குச் சார்கரட்டீஸ், பிளேட்டோ என்பது போல், இந்தியா என்றால், மகாவீரர் புத்தர் என்பதோடு பட்டியல் நின்று விடாமல் திருவள்ளுவரும் இடம் பெறவேண்டும். அதுதான், இந்தியச் சிந்தனையாளர்களின் முழுமை பெற்ற பட்டியல் என்பது அடிளார் கருத்து

பண்டைத் தமிழரின் கல்வி

1957அக்டோபர் திங்களில், இவ்விதழில் அடிகளார் "கல்வியாளர்களாகப் பண்டைத் தமிழ்ப் புலவர்கள்" எனும் தலைப்பில் எழுதிய ஆய்வுக் கட்டுரையிலும் மக்களுக்கு அறிவுறுத்தும் நிலையில் எவ்வாறு தத்துவ அறிஞர்களாகத் தமிழ்ப்புலவர்கள் திகழ்ந்தார்கள் என்பதை விளக்குகிறார்.

திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை எழுந்த காலக்கட்டத்திலுள்ள கவிஞர்கள், சமயக் கருத்துக்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களாகவும், தத்துவ அறிஞர்களாகவும் திகழ்ந்தார்கள். இந்தக் காலக் கட்டத்தில் கவிஞன் மறை தத்துவப் போதகனாகத் திகழ்ந்தான். ஆனால், வட- இந்தியாவிலுள்ளதைப் போல, மதக்குருக்களாக அவர்கள் சமயக் கருத்துக்களையோ, தத்துவங்களையோ வழங்கவில்லை. சமூக நீதிக்கும், சமத்துவத்திற்கும், உண்மைக்கும் சிறப்பிடம் கொடுத்த, கீப்ரு தீர்க்கத் தரிசிகளைப் போல் திகழ்ந்தனர்.

ஔவையாரின் சமூகநீதி உணர்வுகளையும் எடுத்துக்காட்டி, கீரிஸின் தொன்மைக் கவிதையின் தன்மையும் காலமும் எவ்வாறிருந்ததோ, அதைப்போன்றே தமிழ்க் கவிதைகள் இருந்தன என்று ஒப்பிட்டுக் காட்டுகிறார். மேலும், வடநாட்டின், 'மனு' கூறும் அறக் கருத்துக்களுக்கும், தத்துவங்களுக்கும் மாறுபட்ட நிலையில் 'குறள்' கருத்துக்கள் அமைந்துள்ளன என்பதற்கு, ஆல்பிரட் ஸிவிட்சர்,

'இந்தியச் சிந்தனைகள்' எனும் நூலில் குறிப்பிடும் கருத்துக்களைச் சான்றாகக் கூறுகிறார். மனுவின் விதிமுறைகள், ஒருசார்பாகப் பிராமணீயத்தைக் கொண்டுள்ளது. உலகத்தின் நிலையில்லாத் தன்மையைக் கூறி உலக வாழ்விலிருந்து விடுபடும் மார்க்கங்களை வலியுறுத்துகிறது. ஆனால், மனுவிற்கு நான்கு நூற்றாண்டிற்கு முந்திய நூற்றாண்டைச் சார்ந்த, திருக்குறள், உலக வாழ்க்கைக்கே முக்கியத்துவம் கொடுக்கிறது. உலக வாழ்விலிருந்து விடுபடுவது என்பது, திருக்குறளைப் பொறுத்த வரையில், வெகு தூரத்திலிருக்கும் வானத்தில் காணப்படும் மேகத்தைப் போல்தான் உள்ளது என்று ஸிவிட்சர் குறிப்பிடுகிறார் அடிகளார், தன் வாதத்திற்கு இதைச் சான்றாதாரமாகக் காட்டுகிறார்.

மேலும், 'உண்டாலம்ம! உலகம்' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலின் கருத்தை விளக்கி, பண்டைத் தமிழரின் மனநிலையும், சமூக நீதியும், அறவுரைகளும் எவ்வாறு மேம்பட்டிருந்தன என்பதை எடுத்துரைக்கிறார்.

தமிழிலக்கியத்தில் தத்துவம்

மேற்குறிப்பிட்ட கட்டுரைகளின் தொடர்ச்சியாக, 1958-அம் ஆண்டு சனவரி இதழில் "சங்க இலக்கியத்தில் காணப்படும் தத்துவ வளர்ச்சி" எனும் ஆய்வுக் கட்டுரையை எழுதினார்.

தொடக்க காலத்தலிருந்த, இயற்கை ஈடுபாடு, கலை உணர்வு, கலைநுகர்வு ஆகியவை அரசியல்-சமூகச் சூழலினால் ஏற்பட்ட மாற்றங்களால், பாதிப்புக்குள்ளான இலக்கியப் படைப்பாளர்கள், மக்களுக்கு அறக் கருத்துக்களை அறிவுறுத்தியமையையும், தத்துவக் கோட்பாடுகள் உருவாகியமையையும் படிப்படியான வளர்ச்சி நிலையாக அடிகளார் எடுத்துரைக்கிறார்.

உலக வரலாற்றை நோக்கும் பொழுது, தொடக்க காலத்தில், சமுதாயத்தின் எல்லா நிலைகளிலும், கலைகளும், பண்பாட்டுக் கூறுகளும் தலைமை தாங்கின. பின்னர் ஏற்பட்ட சமூக-அரசியல் மாற்றங்களின் விளைவாக அவை, பொது மக்களிடமிருந்து விடைபெறும் சூழல் ஏற்பட்டது. உரோம நாட்டுச் சக்கரவர்த்திகளின் இராணுவ வீரர்கள், மகதாவிலிருந்த கலைஞர்களையும், மராட்டத்திலுள்ள கைவினை வல்லுநர்களையும், அவந்தியிலுள்ள கொல்லர்களையும், கொலை செய்த வரலாறு, கலைகளும், பண்பாட்டுக் கூறுகளும், ஒதுக்கப்பட்ட - ஒடுக்கப்பட்ட நிலையை எடுத்துக்காட்டுகிறது. எனவே, கலைக் கூடங்களிலும், காட்சி அரங்கங்களிலும், வணிகச் சந்தையிலும் அவை அடைக்கலம் புகவேண்டிய கட்டாயச் சூழலை எடுத்துக் காட்டுகிறது. அதன் பின்னர் ஏற்பட்ட சமூக மாற்றத்தின் விளைவாக உருவாகிய அமைதியின்மை அதை முறைபடுத்த எழுந்த சமூக அறிவுறுத்தல்கள். அதன் வளர்ந்த நிலையான தத்துவக் கருத்துக்களின் செல்வாக்கு ஆகியவற்றை எடுத்துக் காட்டுகிறார் அடிகளார்.

கலையும், பண்பாட்டுக் கூறுகளும் கோலோச்சியக் காலக் கட்டத்தில், தமிழ் இலக்கியம் எந்த வகையான மேம்பாட்டு நிலையில் இருந்தது என்பதற்குச் சங்க இலக்கியங்களிலிருந்து பல அகச் சான்றுகளைக் காட்டுகின்றார்.

கிராமங்களில் பொழுதுபோக்கிற்காகப் பயன்படுத்தப்பட்ட கலைகள், நகரங்களில், எத்தகைய பண்பட்ட கலைநுணுக்கங்களுடன் மேம்பட்டிருந்தன என்பதற்குச் சிலப்பதிகாரச் செய்திகளைச் சான்றுகளாக எடுத்துக் காட்டுகின்றார். ஐந்து வயதில் முறையாக நாட்டியம் கற்று ஏழு வயதில் அரங்கேறிய மாதவியின் வாழ்க்கை, அந்தக் காலத் தமிழ்ச் சமூகத்தின் கலை நுகர்ச்சியையும் கலை வளர்ச்சியையும், கலையின் சமூகச் செல்வாக்கையும் எடுத்துக் காட்டுகின்றது. மாதவியின் அரங்கேற்றத்தில் கூறப்படும், இசைக் கருவிகளின் - இசையின், இசைவல்லுநர்களின் விரிவான விளக்கங்களும் செய்திகளும், தற்கால அறிஞர்களாலும், விளக்க முடியாதவைகளாக, அவர்கள் அறிவிற்கும் அனுபவத்திற்கு எட்டாத நிலையிலும் அமைந்துள்ள ஒரு பெருஞ்சிறப்பே, பண்டைத் தமிழர்களின் மிக உன்னதமான கலைத் தன்மைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு என்பதை விளக்குகிறார். பதினெட்டாம் நூற்றாண்டில், கெய்டன் (Hayden) கண்டுபிடித்த இசைத் தொடர்பான கண்டுபிடிப்புக்கள் தமிழர்களுக்குப் புதியவை அல்ல என்று, கருணாமிருத சாகரம் என்ற தனது இசை நூலில் இசைஞானி தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் குறிப்பிட்டுள்ளார். இதை எடுத்துக்காட்டி, தமிழர்களின் இசையறிவை விளக்குகிறார் அடிகளார். கலை அம்சத்தின் செல்வாக்கு குறைந்த காலத்தில், கவிஞன், சமூகத்திற்கு அறிவுறுத்துபவனாகத் திகழ்கிறான். படிப்படியானச் சமூக மாற்றங்களினாலும் வளர்ச்சியினாலும், கவிஞர்கள் கையிலிருந்து அப்பணி, தத்துவ அறிஞர்களிடம் சென்றது. ஆனால், சமூக வளர்ச்சி நிலையிலும், தமிழ் கவிஞர்கள் இப்பணியைத் தாமே மேற்கொண்டனர் என்பதற்குப் பல சான்றுகளைக் காட்டுகின்றார். இது உலகத் தத்துவ வரலாற்றில் மாறுபட்ட புதுமையான ஒன்று என வாதிடுகின்றார்.

தமிழ் இலக்கியங்கள் காட்டும் தத்துவங்களைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது, மணிமேகலையின் 27-ஆவது காதையில் இடம்பெறும் தத்துவம் தொடர்பானச் செய்திகளை எடுத்துக்காட்டித் தமிழ்ப் புலவர்களின் தத்துவப் புலமையை வெளிப்படுத்துகிறார். இதற்கு, எஸ். கிருஷ்ணசாமி அய்யங்காரின் **மணிமேகலையும், அதன் வரலாற்றுப் பின்னணியும்** என்ற நூலிலிருந்து பல மேற்கோள்களைக் காட்டுகின்றார். மணிமேகலையில் சொல்லப்படும், தத்துவங்கள், இந்தியாவிலுள்ள வேதங்களில் கூறப்பட்டுள்ளவற்றிற்கும் அதற்கு அப்பாற்பட்ட நிலையில் கூறப்பட்டுள்ளவற்றிற்கும் மேலான ஓர் இந்திய தத்துவமாகத் திகழ்கின்றன என்று குறிப்பிடுகிறார் அடிகளார். அன்றைய சமயத் தத்துவ ஞானிகள், காஞ்சி, உறையூர், மதுரை, வஞ்சிபோன்ற

நகரங்களுக்குச் சென்றுள்ளனர். அறவண வடிகள், காவிரிப்பூம்பட்டினம் காஞ்சி, வஞ்சி, மணிபல்லவம், வடநாடு ஆகியவற்றிற்குச் சென்றுள்ளமையை எடுத்துக்காட்டுகின்றார். காஞ்சிபுரம், ஒரு காலத்தில், தமிழ்ப் பௌத்தத்திற்கு ஒரு மையமாக இருந்தது என்றும், அங்கிருந்து உலக நாடுகளுக்குப் பௌத்தம் பரப்பப்பட்டது என்றும் கூறுகிறார். அதற்குச் சார்லஸ் எலியட் எழுதிய **பௌத்தமும் இந்து மதமும்** என்ற நூலிலிருந்தும், எம். எஸ். வேங்கடசாமி எழுதிய **பௌத்தமும் தமிழும்** என்ற நூலிலிருந்தும் பலச் சான்றாதாரங்களைக் காட்டுகிறார்.

தமிழில் புலவர்களால், வெளியிடப்பட்ட தத்துவப்பார்வை அல்லது அணுகுமுறை, உலகப் பொதுமை நோக்கில், 'மனித நேயம்' என்பதையே குறிக்கோளாகக் கொண்டிருந்தது. இதற்குத் திருக்குறளை எடுத்துக் காட்டுகின்றார்.

நீண்ட நெடுங்காலத்திற்கு முன்னர், இலங்கையிலுள்ள புவனைக்கா (Bhuvanaika) நீதிமன்றத்தில், சமயங்களின் தத்துவங்களைப் பற்றி வாதிடும் பொழுது பிராஜோம். டி. வில்லா காண்டே (Farjoam De Vila Conde) என்ற பிரஞ்சு நாட்டைச் சார்ந்த ஒரு சமயக் குருவானவர், தனது சமயத் தத்துவத்திற்கு ஓர் ஆதாரமாகத் திருக்குறளின் கருத்துக்களைச் சான்றாகக் காட்டி வாதிட்டமையைப் பெர்நவ் டி குயிரோஸ் (Fernao De Queyroz) என்பவர் எழுதிய **இலங்கை முற்றுகை** எனும் நூலிலிருந்து எடுத்துக்காட்டுகிறார். அதில், குயிரோஸ், உங்களிடமிருக்கும் ஒரு நூல், தீய எண்ணத்தால் உங்களிடமிருந்தே மறைக்கப்பட்டிருக்கும் நூல், மேலிப்பூரில்* (Melipur) வாழ்ந்த வலுயர்* (Valuer) என்பவர் எழுதியுள்ளார். இவர் புனித தாமஸ் என்பவரது சம காலத்தவர். அந்த நூலில், ஒரு மனிதனின் வீழ்ச்சிக்குரிய காரணங்களையும், அவற்றிலிருந்து மீள்வதற்கான வழியையும், அவன் மனிதனாகச் செயல்படுவதற்குரிய அறிவுரைகளையும் (திருக்குறள்) வெளிப்படுத்துகிறது என்று குறிப்பிடுகிறார். இக்கருத்தை அடிகளார் குறிப்பிடுவதின் நோக்கம், ஒரு வெளிநாட்டுக்காரர், ஒரு குறிப்பிட்ட சமயத்தைச் சார்ந்தவர், இதில் காட்டிய ஈடுபாடு, எத்தகையது என்பதைச் சுட்டுவதற்கு மட்டுமே.

வீரமாமுனிவர், திருக்குறளின் பெரும்பான்மைப் பகுதிகளையும், இலத்தீனில் மொழி பெயர்த்து செனேகா (Seneeca) உடன் ஒப்பிட்டிருப்பதையும் எடுத்துரைக்கிறார்.

திருக்குறளின் பெருமைகளை உலக அறிஞர்களிடையே அறிமுகப்படுத்தியவர்களுடன், டாக்டர் ஆல்பர்ட் ஸ்வெயிட்சர் (Dr. Albert Schweitzer) தலையாயவர். **'இந்தியச் சிந்தனையும் அதன் வளர்ச்சியும்'** (Indian Thoughts and its Development) என்ற தமது நூலில்,

* நூலில் இவ்வாறு தான் குறிக்கப்பட்டுள்ளது.

திருக்குறளைப் பற்றிக் குறிப்பிடும்போது. "உலகிலுள்ள இலக்கியங்களில் மிக அரிதாகக் கிடைக்கக்கூடிய அறக் கருத்துக்கள் மலிந்த ஒரு கலைக் களஞ்சியம்" என்று சுட்டுகிறார். மேலும் ஸ்வெயிட்சர், 72-ஆவது குறளை எடுத்துக்காட்டி, "கல்வி அறிவினாலும், கேள்வி அறிவினாலும், நல்லவர்கள் தொடர்பாலும், அன்பு, நட்பு, இரக்கம், உதவி முதலிய நற்பண்புகளை ஒரு மனிதன் பெற்று, ஓர் இலட்சிய மனிதனாக எவ்வாறு வாழமுடியும், என்பதை மிகத் தெளிவாக வள்ளுவர் காட்டுகிறார்" என்று கூறுவதையும் எடுத்துக் காட்டி உலகளாவிய நிலையில் வள்ளுவரின் தத்துவங்கள் எவ்வளவு சிறப்புப் பெற்றுள்ளன என்று விளக்குகிறார் அடிகளார்.

டாக்டர் ஜி.யு. போப், தனது தொடக்க கால கட்டுரைகளில், கிரேக்கத்திலும், இலத்தீனிலும் காணப்படும் தத்துவங்களுடன் குறள் எவ்வாறு ஒத்துப் போகிறது என்பதை விளக்குகிறார். திருக்குறள் ஒட்டுமொத்தமான ஒரு சமுதாயத்தின் நீதி நூலாகவும் குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள தனிமனிதனின் ஒழுகலாறுகளை வரையறுப்பதாகவும் அமைந்தது. எனவே, அதோடு தம்மபதத்தை ஒப்பிட்டுக் கூற இயலாது. ஏனெனில், தம்மபதம் துறவு வாழ்க்கையையும், நிர்வாண நிலைக்கச் செல்வதையுமே கூறுகிறது.

திருவள்ளுவர், அவரது சமகாலச் சமயங்களையும் சமஸ்கிருதம், பாலி போன்றமொழிகளையும் நன்கு தெரிந்திருந்தார் எனவே, அவற்றிலுள்ள கருத்துக்களில், ஒத்த செய்திகள், உவமைகள் போன்றவை இடம் பெற வாய்ப்புள்ளது என்கிறார் அடிகளார். திருக்குறளில் இடம்பெற்றுள்ள சமயம் பற்றிய பொதுமைக் கருத்துக்களைச் சுட்டிக் காட்டி பல சமயத்தவரும் வள்ளுவரைத் தங்கள் சமயத்தைச் சார்ந்தவர் என்று குறிப்பிடுவதையும் எடுத்துரைக்கிறார்.

பிளேட்டோவும், அரிஸ்டாட்டிலும் தத்துவார்த்த நிலையில் அடைந்த வளர்ச்சியையும், பக்குவத்தையும் வள்ளுவர் ஏற்கனவே அடைந்து உள்ளமை, அக்காலத் தமிழ்ச் சமுதாயத்தின் பண்பட்டத் தன்மையைக் காட்டுகின்றனது. சங்க காலத்திலேயே தமிழ்க் கவிஞர்கள் தத்துவ நிலையில் வியக்கத்தக்க வகையில் முதிர்ச்சியும் சிறப்பும் பெற்றிருந்தனர் என்பதே அடிகளாரின் முடிவு.

•

அடிகளாரின் சொந்த முயற்சியால் தொடங்கப்பட்ட Tamil Culture என்ற இதழ் அவராலே நடத்தப்பட்ட காலத்திலும் அதன்பின்னர் தமிழ்ப் பண்பாட்டுக் கழகத்தின் பொறுப்பில் நடத்தப்பட்டபோதும், அடிகளாரால் எழுதப்பட்ட மொத்த ஆய்வுக் கட்டுரைகள் 24. அதன் பின்னர், அடிகளாரின் பேராதரவுடனும், முயற்சியாலும், உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் சார்பில் Journal of Tamil Studies என்னும் இதழில், இரண்டு கட்டுரைகளும் எழுதினார். இவற்றில் பெரும்பான்மையும், சங்க இலக்கியத்தின் பெருமையை உலகிற்கு எடுத்துக் காட்டவேண்டும்

என்பதையும், உலகிலுள்ள உன்னதமான நாகரிகமும், பண்பாடும் உள்ளவர்களுள் தமிழர்களும் முக்கியமானவர்கள் என்பதையும், உலகிலுள்ள தலை சிறந்த சிந்தனையாளர்களுள் தமிழர்களும் அடங்குவர் என்பதையும், இந்தியத் துணைக்கண்டம் தொடர்பான எதுவாக இருந்தாலும், அதில் தமிழ் மரபிற்கும் பண்பாட்டிற்கும், இன்ன பிறவற்றிற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்பதையும், தொல்காப்பியம் தமிழர்களின் விலை மதிக்க முடியாத சொத்து என்பதையும் எடுத்துக் காட்டுவதையே மையமாகக் கொள்கிறார். இவை தவிர, அடிகளாரின் 'ஐரோப்பிய நூலகங்களில் தமிழ்க் கையெழுத்துப் படிகள்', 'தமிழ் ஆய்விற்கான துணைநூற்கள் ஆகிய நூற்கள்', ஆய்வாளர்களுக் குரிய பார்வைக் கையேடுகள் போல் பயன்படத்தக்கவை.

மேற்குறிப்பிட்ட இரு ஆங்கில இதழ்களிலும், அடிகளார், உலகளாவிய நிலையிலுள்ள தமிழ் ஆய்வறிஞர்களையும், தமிழகத்தைச் சார்ந்த தமிழ் அறிஞர்களையும் ஆய்வுக்கட்டுரைகள் பல எழுத ஊக்குவித்தார். பன்மொழிப்புலமையும், பல்துறை அறிவும் பெற்ற தலை சிறந்த மேலைநாட்டு ஆய்வாளர்கள் பலரை இவ்விதழ் மூலம், தமிழ் இலக்கிய ஆய்வு உலகிற்கு அறிமுகப்படுத்தினார். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள், எம்.பி. எமனோ, ஜே.ஆர். மார், இ.சி. நோல்டன், பிலியோசா, எம். ஆந்திரனோவ், கபில் சுவலபில் ஆகியோராவர். இவர்கள் நிரந்தரமாக - நீண்ட நெடுங்காலமாக தமிழ் ஆய்விற்கானப் பங்களிப்பைக் கணிசமான அளவில் வழங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் ஆய்வியல் வரலாற்றில், அடிகளார் ஒரு திருப்பு முனையாகத் திகழ்ந்ததற்கு அடிப்படை அமைத்தது, இதழ்கள் மூலம் அவர் செய்த ஆய்வுப்பணிகளே. தொகுப்புப் பணியிலேயே தேங்கிக் கிடந்த தமிழ் ஆய்வு உலகத்தை, உலகோடு ஒட்ட ஒழுகும், அறிவியல் அடிப்படையிலான நவீன இலக்கியக் கோட்பாட்டு ரீதியிலான உலக நீரோட்டத்திற்கே கொண்டு சென்றவர்களுள் அடிகளார் மிக முக்கியமானவர் என்பதற்கு உரைகல் அவரது இதழ்கள்.

'தனிமரம் தோப்பாகாது' என்பதுபோல, தனிமரங்களாக, அம்மரத்தின் கீழ் ஒதுங்குகின்றவர்களுக்கு மட்டுமே, ஆய்வு நிழல் வழங்கிய சூழல் மாறி, பல்வகை மரம் நிறைந்த, மணம் வீசும் தமிழ் ஆய்வுச் சோலையை அடிகளார் அவர் தொடங்கிய இதழ்கள் மூலம் உருவாக்கினார். அச்சோலையில் எல்லா வகை மரங்களுமுண்டு, எல்லா ஊர் மரங்களும் உண்டு. எல்லா நாட்டு மரங்களும் உண்டு. மொத்தத்தில் அது எல்லோர் கண்ணிலும்படுத் தண்ணிழல் தரும் ஆய்வுச் சோலையாகக் காட்சி அளித்து.

இவ்விதழ்கள் மூலம், முதலில் தமிழ் ஆய்வின் பரப்பளவை விரிவுபடுத்தினார். தமிழ் ஆய்வை உலக அளவில் ஒருங்கிணைத்தார்,

தமிழ் ஆய்வைப் பொதுமைப்படுத்தினார். தமிழ் ஆய்விற்குப் பல நாட்டவர் பங்களிப்பைப் பெறச் செய்தார். தமிழ் ஆய்வில் பல்துறை ஆய்வை அறிமுகப்படுத்தி நவீனப்படுத்தினார். உலகளாவிய நிலையில் செல்வாக்குப் பெற்ற நவீன இலக்கியக் கோட்பாடுகளை அறிமுகப் படுத்தினார். எல்லாவற்றிற்கும் மேலாகத் தமிழ் ஆய்வுக்காக, ஒரு பொது அரங்கத்தை அமைத்துக் கொடுத்தார்.

பிற ஆய்வுக் கட்டுரைகள்

தாம் தொடங்கிய இதழ்களில் மட்டுமல்லாமல் பிற இதழ்களிலும், கருத்தரங்குகளிலும் தமிழ் ஆய்வுக் கட்டுரைகள் பல வழங்கியுள்ளார் அவற்றுள், 'தமிழில் நீதி இலக்கியங்களின் காலம்', 'தமிழ் வணிகம்' (உலகத் தமிழ் மாநாட்டு விழாமலர்), 'வெளிநாடுகளில் தமிழ் ஆய்வுகள்' (கருத்தரங்கம், கோலாலம்பூர் 1968), 'தமிழ்ப் பண்பாடும் சமயமும்' (சமூகமும் சமயமும் இதழ், 1975), 'தமிழ் ஆய்வுகள்' (தந்தை செல்வா நினைவு நிலையம், யாழ்ப்பாணம், 1980), 'சங்க இலக்கியத்தின் சிறப்பியல்பு' (சத்தியவேத பாதுகாவலன்), 'தமிழின் வளர்ச்சி' (சத்திய வேத பாதுகாவலன்), 'மலரும் மாலையும்' (தமிழ் ஓசை, 1952), 'தமிழ்ச் செல்வங்கள்' (கல்கி, திபாவளி மலர், 1956), 'திருக்குறளும் கிரேக்க ஒழுக்க இயலும்' (கலைப் பூங்கா, 1961), 'கல்கியின் வரலாற்ற நாவல்கள்' (எழுத்தாளர் கல்கி, 1966), 'சங்க இலக்கியத்தில் விரிவாகும் ஆளுமையின் இயல்பு (ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு மலர், மதுரை 1981), 'வீராமாமுனிவர், தமிழ் ஆராய்ச்சிக்குப் பங்களிப்பு செய்த ஐரோப்பியரில் தலைமகன்' (வீரகேசரி, 1980) ஆகிய கட்டுரைகள், தமிழ் ஆய்வை வளப்படுத்தும் வகையிலான அரிய ஆய்வுகள்.

2. சொற்பொழிவுகளின் வாயிலான ஆய்வுப் பணிகள்

அடிகளார், தமிழ்த் தூதுவராக மேற்கொண்ட இரண்டு உலகப் பயணங்களின் உள் நோக்கம், தமிழை அறியாதாருக்கு அறிமுகப் படுத்துவதேயாகும். எனவே, அவைகள் அறிமுகவுரைகளாகவே,- தமிழின் சிறப்பினை மட்டும் எடுத்து இயம்பும் தன்மையினவாகவே உள்ளன. "இந்நாடுகளில் நான் ஆற்றிய விரிவுரைகளில் பெரும்பாலும், தமிழைப் பற்றிய சில பொதுக் குறிப்புக்களே அமைந்துள்ளன. தமிழைப் பற்றி ஏதேனும் அறியார்க்கு ஆராய்ச்சியுரை நிகழ்த்துதற்கு இடமின்று. தமிழ் மொழியின் வியத்தகு இயல்புகளையும், தமிழரின் இயற்கை ஈடுபாட்டினையும், ஐந்திணை இலக்கணத்தையும், மலர் மாலைகளை நம் முன்னோர் கையாண்ட முறைகளையும் எடுத்துக் கூறினேன்" (அடிகளார் 15&16) என்று அவரே குறிப்பிடுகின்றார்.

ஆனால் சொர்ணம்பாள் நினைவு அறக்கட்டளைச் சார்பில் 1961-இல் "தமிழரின் மனிதநேய நோக்கங்கள்" என்ற தலைப்பிலும் 1967-இல் "திருவள்ளுவர்" என்ற தலைப்பிலும், 1980-இல், தந்தை செல்வா, நினைவு அறக்கட்டளைச் சார்பாக, "தமிழில் ஆய்வுகள்" எனும்

தலைப்பிலும் ஆற்றிய சொற்பொழிவுகள் அடிகளாரது தமிழியியல் ஆய்வில் முக்கிய பங்கு வகிப்பவை.

நீரோடைகளாக - வாய்க்கால்களாக அவரது ஆய்வுக் கட்டுரைகள் அமைந்தன. ஆய்வு நூல்கள் பேராறாகத் தென்படுகின்றன. தமிழ் ஆய்வு நிலப்பரப்பினை அவை வளப்படுத்தின.

3. தமிழ் நூல்கள் வாயிலான ஆய்வுப்பணிகள்

அடிகளார் எழுதிய முதல் நூலாக, 'தமிழ்த்தூது' கருதப்படுகிறது (அமுதன் அடிகள் 1993:133) தனது உலகப் பயணம் முடிந்தபின்னர் எழுதிய 'தமிழ்த்தூது' என்ற கட்டுரையும், சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகம் யாழ்ப்பாணத்தில் நடத்திய தமிழ்த் திருவிழாவில் அடிகள் உரையாற்றிய 'சங்க இலக்கியத்தின் சிறப்பு' என்ற கட்டுரையும், 'தமிழ் ஓசை'யில் எழுதிய 'மலரும் மாலையும்' என்ற கட்டுரையும், சத்தியவேத பாதுகாவலன் எனும் இதழில் எழுதிய தமிழின் வளர்ச்சி, (நூலில் செந்தமிழ் வளர்ச்சி என பெயர் மாற்றம்பெற்றது) என்ற கட்டுரையும் தொகுத்து 'தமிழ்த்தூது' எனும் நூலை வெளியிட்டார்.

சங்க இலக்கியங்களின் சிறப்புக்களுள் 'ஒன்றே உலகம்' எனும் உயரிய மனப்பான்மை பரவியிருப்பது அடிகளாரின் மனதைப் பெரிதும் கவர்ந்த ஒன்று (அமுதன் அடிகள் 1993:137). இதன் அடிப்படையில் 'ஒன்றே உலகம்' என்ற தலைப்பில் ஒரு நூலை வெளியிட்டார். இதில், பற்பல காலங்களில், அவர் சுற்றுப் பயணம் செய்தபொழுது எழுதப் பட்டவைகளான 21 கட்டுரைகள் அடங்கியுள்ளன. 'சுற்றுச் செலவுக் கலை' எனும் தலைப்பிலான முதற் கட்டுரையைத் தவிர ஏனைய இருபது கட்டுரைகளும், தாம் பயணம் சென்ற நாடுகளான, தாய்லாந்து, கம்போதியா, வியட்நாம், பர்மா, இந்தோனேசியா, ஜப்பான், ஐக்கிய அமெரிக்கா, தென் அமெரிக்கா, சோவியத் ஒன்றகம், இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி, ஆஸ்திரியா, இத்தாலி, வத்திக்கான், கிரேக்க நாடு, போர்த்துக்கல், ஸ்கண்டி நேவிய நாடுகளான டென்மார்க், நார்வே, சுவீடன், பின்லாந்து ஆகிய ஐரோப்பாவின் சிறு நாடுகள் ஆகியவை பற்றி எழுதப்பட்டவை.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அடிகளார் 'திருவள்ளுவர்' எனும் தலைப்பில் நிகழ்த்திய சொர்ணம்பாள் அறக்கட்டளைச் சொற்பொழிவு நூலாக வெளியிடப்பட்டுள்ளது.

அடிகளார் ஆங்கிலத்தில், மூன்று நூல்களை எழுதியுள்ளார். அதில் ஒரு நூல், உரோமை நகரில் குருத்துவப் பயிற்சியை முடித்த பின்னர், சமய ஆராய்ச்சி செய்து, கார்த்தேஜ் மறை மாநிலக் குருகுலம் (The Carthagenian Clergy) எனும் தலைப்பில் ஆய்வு செய்தது. அதைப் பின்னர் நூலாக வெளியிட்டார். இது, தமிழ் மீது ஈடுபாடு கொண்டு, தமிழ்ப் பணியாற்றுவதற்கு முன்னர், சமயப் பணியாற்றுகின்ற பொழுது வெளியிடப்பட்டது. இதற்கும் தமிழ் ஆய்விற்கும் தொடர்பில்லை.

தமிழ் ஆர்வத்தின் காரணமாக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், மாணவராகச் சேர்ந்து படிக்கும் பொழுது கொடுக்கப்பட்ட ஆய்வேடு "Nature in Ancient Tamil Poetry" எனும் தலைப்பிலானது. இதையே தமிழ் இலக்கியக் கழகத்தின் சார்பில் 1952-இல் நூலாக வெளியிட்டார்.

இலண்டன் பல்கலைக் கழகத்தின் கல்வித் துறையில் 1955 முதல் 1957 வரையில் தாம் ஆய்வு செய்த, 'பழந்தமிழ் இலக்கியத்தில் கல்விச் சிந்தனைகள்' (Educational Thought in Ancient Tamil Literature) எனும் ஆய்வேட்டை நூலாக வெளியிட்டார்.

மேற் குறிப்பிட்ட நூல்களைத் தவிர, **தமிழியல் நூல்கள் ஆய்வடங்கல்** (A Reference Guide to Tamil Studies: Books) என்ற நூலையும், **தமிழ்ப் பண்பாடும் நாகரிகமும்** (Tamil Culture and Civilization) என்ற நூலையும், வெளி நாடுகளில் தமிழ்க் கல்வி (Tamil Studies Abroad) என்ற நூலையும் ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டார். இவை மூன்றும் தொகுப்பு நூல்கள்.

தமிழ்த்தூது

அடிகளார் முதலில் வெளியிட்ட **தமிழ்த்தூது** எனும் நூல், நான்கு பதிப்புகள் வெளிவந்துள்ளது. முதல் இரண்டு பதிப்புகளிலிருந்து வேறுபட்ட நிலையில், 'தமிழ்த்தூது', 'சங்க இலக்கியத்தின் சிறப்பு' ஆகிய இரண்டு கட்டுரைகளை மட்டுமே கொண்டு மூன்றாம் பதிப்பு வெளிவந்தது. முதல் இரண்டு பதிப்புகளிலும் இடம் பெற்றிருந்த, செந்தமிழ் வளர்ச்சி எனும் கட்டுரையைத் தவிர்த்து, 'தமிழரும் அவர்தம் கவின் கலைகளும்', 'தமிழ்கூறும் நல்லுலகம்' ஆகிய இரு புதிய கட்டுரைகளைச் சேர்த்து "திருத்திய மூன்றாம் பதிப்பு" என்று குறிக்கப்பட்டு, 1961-இல் நான்காவது பதிப்பு வெளி வந்தது. 'தமிழ்த்தூது' எனும் பெயர்தாங்கி, பதிப்பகத்தின் பெயரோ, நூல்வெளிவந்த ஆண்டு பற்றிய குறிப்போ இல்லாமல் அடிகளாரின் பெயரில், ஒருநூல் வெளிவந்தது (அமுதன் அடிகள் 1998:143) என்றும் மூன்றாம் பதிப்பைப் பற்றி அமுதன் அடிகளார் சுட்டுகிறார்.

இரண்டு ஆண்டுகளாக (1949-1950) அடிகளார் மேற்கொண்ட உலகப் பயணத்தின் விளைவாக எழுதப்பட்ட நூல் இது. உலகின் பல்வேறு பகுதியில் வாழ்ந்து வரும் தமிழர்களைப் பற்றிய செய்தியையும், தமிழ் பற்றிய தகவல்களையும்; பண்பாட்டிலும், நாகரிகத்திலும், பழக்க வழக்கங்களிலும், கவின் கலைகளிலும், தமிழோடும், தமிழரோடும் தொடர்புடைய உலக நாடுகளையும், மக்களையும், மொழிகளையும் பற்றிய செய்திகளையும்; தமிழ் ஆய்வு செய்வதற்குரிய, வாயில்களையும் அதற்குரிய களங்களையும், ஒப்பியல் ஆய்வுகள் செய்வதற்குரிய வாய்ப்புக்களையும், தமிழைப் பரப்புவதற்கு உரிய கருத்துக்களையும் இந்நூலில் கூறுகிறார் அடிகளார்.

இந்நூல், அவரது பின்னைய நூல்களுக்கும், பின்னர் நிகழ்த்திய ஆய்வுகளுக்கும் ஒரு பின்புலமாகத் திகழ்கிறது. உலகப் பயணத்தின் போது, பெரும்பாலான உலக நாடுகளில் தமிழைப் பற்றித் தெரிந்திராத நிலையை அறிந்த அடிகளார், அதற்கான முயற்சிகளில் ஈடுபடுவதற்குரிய முதல் தளமாக இந்நூலை எழுதியுள்ளார்.

'தமிழ் மொழி, நாடு, இனம் ஆகிய இவை மூன்றின் மாண்பை ஒப்பு நோக்கி அறிந்து அதனைத் தமக்கிசைந்த அளவு பிறர்க்குக் கூற விரும்பும் முயற்சி' (அடிகளார்: 1961:1) என நூலின் தொடக்கத்திலேயே அடிகளார் குறிப்பிடுகிறார். இக்காலக்கட்டத்தில் இது இன்றியமையாத ஒன்று என்பதே அடிகளாரின் துணிபு. 'இதற்குக் காரணம், இந்தியாவைப் பற்றியும், அதன் தொன்மைச் சிறப்பினைப் பற்றியும் தெரிந்து கொள்ள விழையும் மேலை நாட்டார், சமஸ்கிருதத்தை மட்டும் கற்று அதன்வாயிலான செய்திகளை மட்டுமே இந்திய நாட்டைப் பற்றிய செய்திகளாகக் கொண்டுள்ளனர். தமிழ் மொழியின் சிறப்பியல்பைச் சரியான முறையில் மேலை நாட்டவருக்கு எடுத்து இயம்பவில்லை. மேலை நாடுகளில் வெளிவந்துள்ள இந்திய இலக்கிய வரலாற்று நூல்களில் தமிழிலக்கியத்தைப் பற்றிய கருத்துச் சிறதேனும் இல்லை, ஒரு சொல்லேனும் இல்லை. இந்திய நாட்டில் இந்தியக் கலைஞரால், யாக்கம் பெற்ற இலக்கிய வரலாற்று நூல்களிலும், தமிழுக்குத் தகுந்த இடமும் புகழும் அளிக்கப்படவில்லை. இந்தியக் குடியரசின் முதல் அமைச்சர் திரு. நேரு தாமும், தம் நூல்களில், தென்னாட்டிற்குச் சிறிதளவே இடம் ஈர்ந்துள்ளார் "இந்திய வரலாறு தென்னாட்டின் உறைவிடம் காணும்" என்றும், "தென்னாட்டில் மிகு பழைமை வாய்ந்த பொருள்களும் மக்களும் உண்டு" என்று மட்டும் கூறி மேலே செல்கின்றார். இந்நூலாசியர்கள், இம்மொழியின் சிறப்பு இயல்பை, இம்மக்கள் உலகிற்கு ஈந்த இலக்கியத்தின் தனித் தன்மையை, அவர்களின் பனுவல்களைப் புரட்டிப் புரட்டிப் பார்க்கினும் காண்டல் அரிது' (அடிகளார் 1961:203)

"இந்திய வரலாற்று நூல்களை எடுத்து நோக்குமின்! **Discovery of India** என்றும், **History of Indian Literature** என்றும் பலபடப் புனைந்து வெளிவரும் ஏடுகளை விரித்துப்பார்மின்! மாக்ஸ்முல்லர், வின்றாவிட்ஸ் போன்றவர் முதலாகப் பலரும், வடமொழி இலக்கியத்தின் பெருமையையே விரித்துக் கூறுவர். இந்திய இலக்கியங்களின் வரலாற்றிலே தமிழ் இலக்கியத்தைப் பற்றியோ, திராவிட நாகரிகத்தைப் பற்றியோ, ஒரு சொல்லேனும், ஒரு குறிப்பேனும், ஒரு கருத்தேனும், காணக்கிடையா. இந்தியப் பண்பு இந்திய நாகரிகம், இந்தியக் கலைகள், இந்திய மொழிகள் என அவர் மொழிவனவெல்லாம், திராவிடப்பண்பு, திராவிட நாகரிகம், திராவிடக் கலைகள், திராவிட மொழிகள் இவற்றையே, அடிப்படையாகக் கொண்டவை. ஆயினும் பல்லாண்டு களாக, நடுநிலை கடந்தோர் பலர், இவ்வுண்மையை மறைத்தும், திரித்தும், ஒழித்தும் நூல்கள் யாத்தமையின் இன்று இவ்வுண்மையை எடுத்துக்

கூறுவதும், மக்கள் மனத்தில் ஐயம் விளைப்பதாக இருக்கின்றது" (மேலது:28&29) என்று அடிகளார் மிகவும் வருந்துகிறார். அவரது நூல்களில், பல இடங்களில் இக்கருத்தை மீண்டும் மீண்டும் கூறியுள்ளார். **'பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை'** எனும் தனது ஆய்வு நூலிலும் பல இடங்களில் இதைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

தமிழின் பெருமை புறக்கணிக்கப்பட்டிருப்பதை உலகப் பயணத்தின்போது ஏற்பட்ட பட்டறிவினாலும், உலகிலுள்ள பல நூல்களைக் கற்றதன் வாயிலாகவும் அறிந்த அடிகளார்; இதை நினைத்துப் பெரிதும் வருந்தியிருக்கிறார் என்பதுவும், இது மிக ஆழமாக அவரது அடி மனத்தில் பதிந்திருந்தது என்பதுவும், அவரது தமிழ்ப் பணிகளைக் கூர்ந்து நோக்குவோருக்குப் புலப்படும்.

இந்நூலை முழுமையான ஓர் ஆய்வு நூலாகக் கருத இயலாது. ஆனாலும் தமிழ் ஆய்விற்குரிய மூலங்களையும், அவை தொடர்பானத் தகவல்களையும், வாயில்களையும், களங்களையும் அடையாளங்காட்டும் ஒரு கருவி நூலாகத் திகழ்கிறது. அடிகளாரின் ஆய்வுபணியின் தொடக்க நிலை முயற்சியாக இந்நூலைக் கொள்வதோடு, ஆய்வாளர்களுக்குரிய ஒரு பார்வை நூலாகக் கருதும் வகையிலும் இது அமைந்துள்ளது.

உலகளாவிய நிலையில் ஆய்வு செய்வதற்குரிய பல தகவல்களைத் தருகிறார். 'ஜப்பானிய மொழி திராவிட மொழிகளுடன் தொடர்புடைய மொழியன்று. ஆயினும், தமிழைப்போல ஒட்டு நிலை வகுப்பினைச் சார்ந்தது. ஜப்பானியச் செய்யுட்களில், இறைச்சி போன்ற சில பண்புகள் உள. நம் சங்க இலக்கிய அகப் பாடல்களின் உரையாசிரியர், அப்பாடல்களுக்குக் கொளு எழுதியிருப்பது போல, ஜப்பானியப் பாடல்களுக்கும், கொளு எழுதியுள்ளனர். சிறப்பாக ஜப்பானிய இலக்கியத்தில் 'தங்கா' எனப்படும் செய்யுள், முப்பத் தோரசைகளைப் பேரெல்லையாகக் கொண்டு, நம் குறுந்தொகைச் செய்யுட்களைப் போல, கருத்திலும், கொளுவிலும், இனிது விளங்குகின்றது (அடிகளார் : 1961:9) என்று அடிகளார் ஜப்பானிய மொழி பற்றிக் குறிப்பிட்ட தகவல், ஜப்பானிய மொழிக்கும், பண் பாட்டிற்கும் தமிழ் மொழிக்கும் பண்பாட்டிற்கும் இடையிலான தொடர்பு பற்றிப் பல ஆய்வுகளுக்கு வழிகோலியது என்பதைக் கண்கூடாகப் பார்க்க முடிகிறது. உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் சார்பில் 1995 சனவரித் திங்களில் (பகுதி 1, எண் 1) எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின்போது, வெளியிடப்பட்ட ATR NEWS LETTER எனும் இதழில் வெளியாகியிருக்கும் 'Tamil and Dravidian studies in Japan' எனும் கட்டுரையைப் படிக்கும்பொழுது இரு மொழிகளுக்கும் இடையிலான ஆய்வு இன்று எந்த அளவுக்கு வளர்ந்துள்ளது என்பது புலப்படுகிறது. மேலும், அடிகளாரால் தொடங்கப்பட்ட, உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் தலைவராக, ஜப்பானியராக நொபரு கரஷிமா (Noboru Karashima) பணியாற்றும் வாய்ப்பும் The Japan Society for South

Indian Studies என்ற ஓர் ஆய்வுத் தொடர்பு நிறுவனம் 1976-இல் ஜப்பானில் நிறுவப்பட்டிருப்பதுவும், அடிகளார் அமைத்துக் கொடுத்த அடிப்படையின் மேல்கட்டப்பட்ட கட்டடங்களாகவே திகழ்கின்றன.

சாவகம், சுமத்திரா, இந்தோனேஷியா போன்ற கீழ்த்திசை நாடுகளில் தமிழ்ப் பண்பாடு மிகவும் பழமையான காலத்திலேயே பரவியது. 'சாவகம், சுமத்திரா போன்ற இடங்களில், இரண்டாம் நூற்றாண்டுக்கு முன்னரே தமிழ் மக்கள் குடியேறி இருக்கவேண்டும் என்பது கெல்டோன் போன்ற அறிஞர்கள் கருத்து' (அடிகளார் 1961:116) இன்றும் சுமத்திராவில் வாழ்ந்துவரும் 'கரோபட்டாக்' எனும் வகுப்பினரின் உட்பிரிவினராயிருக்கும் சிம்பிரிங் என்போர். தம்மைச் 'சோளியர்', 'சேரர்', 'பாண்டியர்', 'கலிங்கர்' என்று வகுத்திருக்கின்றனர். மேலும் 'சாவகத்தில் எழுப்பப் பெற்றிருக்கும், "பிரம்பானான்" எனும் கோயில், சைவசித்தாந்தத் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட கோயில் என்பர். அதே போன்று "தியங்" சமவெளியில் உள்ள கோயில்கள் பலவும் "பனத்தரான்" கோயிலும், கணபதி, அகத்தியருடைய கணக்கற்ற சிலைகளும், திராவிடத் தென்னிந்திய மக்களின் கட்டச் சிற்பக்கலைகளை ஒட்டியே அமைக்கப் பெற்றவை" (மேலது) என்று கூறுகிறார்.

தமிழ்நாட்டுடன் கொண்ட வணிகத் தொடர்பினால் பல தமிழ்ச் சொற்கள், திரிந்தும் மருவியும் வழங்குகின்றன. 'கப்பல்' என்பதைக் 'கபல்' என்கின்றனர். வேறு சில தமிழ்ச் சொற்களான 'வாடை', 'சுக்கு', 'இஞ்சி', 'கொத்துமல்லி', 'குதிரை', 'கூடை', 'பெட்டி', 'பிட்டு' ஆகியவை வழக்கிலுள்ளன. 'தாலி' என்ற சொல்லைக் 'கொடி' என்ற பொருளிலும் பயன்படுத்துகின்றனர். 'அம்மா', 'அக்கா', 'மாமா', 'தம்பி' போன்ற உறவுச் சொற்களும் பேச்சு வழக்கிலுள்ளன என்று குறிப்பிடுகிறார் அடிகளார்.

வியட்நாமின் துரானிலுள்ள பழம் பொருட்காட்சியில் மிக அழகான நந்திகள் காணப்படுகின்றன. வியட்நாமின் பல மாவட்டங்களிலும் சிவலிங்கம் அமைந்த கோயில்கள் உள்ளன. அங்குச் சுவர்கள் மீது செதுக்கப் பெற்றிருக்கும் மகாபாரதம், இராமாயணம் ஆகியவை பற்றிய வரலாற்றுச் செய்திகள், பலவும் உள்ளன. கட்டடங்கள், சிலைகள், யானை உருவங்கள் ஆகியவை பல்லவருடைய கட்டடச் சிற்ப முறைகளைக் காட்டுவனவாக அமைந்துள்ளன என்று கூறுகிறார்.

கம்போதியாவின் அரண்மனையில் நடைபெற்றுவந்த நாட்டியக்கலை பரத நாட்டியக் கலையுடன் ஒப்பிட்டுப் பார்க்கத் தக்கது. தைலாந்தில் சிறப்பாகத் தமிழ்ப் பாக்களைத் தை மன்னரின் முடி சூட்டு விழாவில் பாடி வருகின்றனர். பாங்கொக்கு நகரில், இந்து சமயப் பிராமணர் எனப்படுபவர் இருக்கும் கோயில்களில், தம் மன்னர் முடிசூட்டு விழாவில் பாடல்களாகப் பாடப்படும் "ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதியை" என்ற பாட்டைத் தமிழ் என்று

தெரியாது ஏடுகளில் பாதுகாத்து வைத்துள்ளனர். திருப்பாவை, திருவெம்பாவைத் திருநாட்களைத் தை மக்கள் முன்பு கொண்டாடி வந்திருக்கின்றனர். இன்றும், திருப்பாவை, திருவெம்பாவைத் திருநாளை அப்பிராமணர்கள் கொண்டாடி வருகின்றனர். அங்குள்ள அவர்களது கோயில் அமைப்பும் வழிபாடும் தென்னிந்திய கோயில் அமைப்புக்களையும், வழிபாட்டு முறையினையும், தழுவி அமைந்துள்ளதாக அவர்களின் அரசகுரு குறிப்பிடுவதாக அடிகளார் கூறுகின்றார்.

தை மொழியிலிருக்கும் இராமாயணம் பெரும்பாலும் கம்ப இராமாயணத்தையே தழுவி இருப்பதாகப் பியானுமன் எனும் அறிஞர் கூறியதையும் சுட்டுகிறார். அந்த அறிஞர் கூற்றுப்படி தைமொழியில், தமிழைப் போல், 'ஐ', 'அன்' விகுதிகளைக் கொண்ட சொற்கள் பல உள்ளதாக அடிகளார் கருதுகிறார். தை நாட்டில், சிற்பம் கற்பிக்கும் இத்தாலிய சிற்பி ஒருவரின் கருத்தின்படி, தை நாட்டின் வெண்கலப் படிவங்கள் பல்லவர், சோழர் காலத்துத் தமிழ் நாட்டுப் படிவங்களைப் போன்றவையென்பது அடிகளார் எண்ணம்.

ஓர்பியஸ் (Orpheus) எனும் கிரேக்கர், தம் யாழை வாசித்த பொழுது, கொடிய விலங்குகளும், அவ்விசையால் ஈரக்கப்பட்டன என, மேல் நாட்டில் பல கதைகள் வழங்குகின்றன. அங்குக் கூறப்படும் ஒரு கதைக்கு ஈடாகத் தமிழ் இலக்கியத்தில் பல கதைகள் இடம் பெற்றுள்ளன. ஆணவம் மிகுந்த இராவணன் கையிலாய மலையைத் தூக்கிக் கை நைந்து சாமகானம் பாடி இரக்கம் பெற்ற கதை, அகத்தியர் யாழை மீட்டியதால் அரக்கன் உள்ளம் உருகிய கதை, கண்ணனின் இசை, ஆகிய பல ஒப்புமைகளைக் காட்டுகிறார் அடிகளார்.

சேக்ஸ்பியரின் இசையைப்பற்றிக் கூறும் "Music hath Charms to Soothe the Savage beast" எனும் வரிகளை மெல்லிசையின் வல்லமைக்கு உலக மாந்தர் மேற்கோளாகக் காட்டுவது வழக்கம். ஆனால், சங்க இலக்கியத்திலும் அதன் பின்னர் உள்ள தமிழ் இலக்கியங்களிலும் இசையின் வல்லமையைப் பற்றிப் பல செய்திகள் உள்ளன. யானை இசைக்கு வயப்படும் என்பதற்குக் கலித்தொகை,

> "காழ்வரை நில்லாக் கடுங்களிற் றொருத்தல்
> யாழ்வரைத் தங்கி யாங்கு"

எனும் வரிகளை எடுத்துக் காட்டி விளக்குகிறார். மேலும் பெருங்கதையில், மதங்கொண்ட யானையை உதயணன் யாழை மீட்டி அடக்கினான் என்ற செய்தி இடம் பெற்றுள்ளமையையும் சுட்டுகிறார்.

பிரௌனிங் எனும் ஆங்கிலக் கவிஞர், Pippa Passes எனும் கவிதையில், பெண் ஒருத்தியின் பாடலைக் கேட்டு கொடுமை செய்வோர் தம் தீந்தொழிலை விட்டனர் என்று கூறப்படுகிறது. அதைப்போல் பொருநராற்றுப் படையில், பாலை யாழின் இசையைக் கேட்டு கொடிய

கள்வர், தம் கையிலுள்ள கொலைக் கருவிகளைத் துறந்து, மனம் திருந்தி வாழ்ந்தனர்.

"ஆறலைக் கள்வர் படைவிட அருளின்
மாறுதலைப் பெயர்க்கும் மருவின் பாலை"

இதே போல், அகநானூற்றிலும், தினைக் கொல்லையைக் காக்கும் ஒரு பெண் பரண்மேல் நின்று குறிஞ்சிப் பண்ணைப் பாடிக் கொண்டிருந்த பொழுது, தினைக் கதிரை உண்பதற்காக வந்த யானை ஒன்று, ஒரு பெண்ணின் இசையில் மயங்கிப் பசியை மறந்து தூங்கி விட்டது என்ற செய்தியுள்ளது என்று ஒப்புமையைக் குறிப்பிடுகிறார். அவற்றைப் பற்றிய ஒப்பாய்வு, ஆய்வு நிலையில் சிந்திப்பதற்கும் வழிவகுக்கும் என அடிகளார் நம்பினார்.

திருக்குறளில், 'அகர முதல' என்று தொடங்கும் முதல் பாடலுக்கு ஒப்புமையாகக் கிறித்தவர்களின், விவிலிய நூலில் இடம் பெற்றுள்ள 'நானே அகரமாயிருக்கிறேன்' எனும் கருத்தையும், இதைப் போன்ற இன்னும் பல ஒப்புமைக் கருத்துக்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும் வாய்ப்புள்ளது என அடிகளார் குறிப்பிடுகிறார்.

பேராறுகளின் கரைகளிலே நாகரிகங்கள் வளர்ந்ததாக வரலாறு கூறுகிறது. தெம்ஸ், சீன், தைபர், நைல் முதலிய ஆறுகளைப் பற்றி வரலாற்றில் அந்நாடுகளின் நாகரிகத்தின் பின்புலமாக இருந்தமையைச் சிறப்பித்துக் கூறப்படுகிறது. வையை பற்றியும், காவிரி பற்றியும் இந்தக் கண்ணோட்டத்துடன் ஆய்வதற்கு நிறைய மூலங்கள், செய்திகள் உள்ளன எனக் கூறுகிறார்.

ஒப்புமைகளைச் சுட்டிக் காட்டுவதுபோல வேற்றுமைகளையும் சுட்டிக் காட்டுகின்றார். நாட்டின் சிறப்பு இயல்புகளைச் செய்யுளில் விரித்துக் கூறும் தமிழ்ப் புலவர், சந்தேசம் என்னும் முறையில், பறவைகளையும், முகில்களையும், தூது போக்கினார் அல்லர். மாறாக மக்களையே மக்களைக் கொண்டு ஆற்றுப்படுத்தும், அரும்பெரும் முறைகளையே பயன்படுத்தியுள்ளனர். தமிழ் நாட்டின் மலைகளும், ஆறுகளும் தேவகணங்களுடனோ, பிற உலகங்களுடனோ, தொடர்புடையனவாகக் கூறப்பட்டிருப்பதைச் சங்க இலக்கியத்தில் காணப்து மிக அரிது. தமிழ் நாட்டு அரசரோ, பிறரோ தேவகுல அவதாரங்கள் என்று கூறப்படவில்லை. பழந்தமிழ்ப் புலவர்களின் பாடல்கள் யதார்த்த தன்மையை உடையனவாகவே திகழ்கின்றன. இந்தச் சிறப்பைப்பற்றி ஆய்வதற்கான வாய்ப்புக்கள் பல உள்ளதை அடிகளார் குறிப்பிடுகிறார்.

ஆங்கிலத்தில் Tolerence என்பதைத் தமிழில் 'கண்ணோட்டம்' அல்லது 'பொறை' என வழங்கலாம். சமயப் பொறைக்கு, இலண்டன் மாநகரிலிருக்கும், ஹைட் இளமரக்கா முனை (Hyde Park Corner) எனும்

இடத்தை மேலை நாட்டார் பெருமையாகச் சுட்டிக்காட்டுவர். அங்குப் பல்வேறு அரசியல் கட்சியினர், சமயப் பிரிவினர், கொள்கை வேறு பாட்டினர் தத்தம் கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு உண்டு. ஆனால், ஏறத்தாழ 1800 ஆண்டுகளுக்கு முன்னர்த் தமிழ் நாட்டுச் சமயவாதிகள், தத்தம் கொடிகளை நிறுவி, தத்தம் சமயக் கருத்துக்களை வெளியிடுவதற்கு வாய்ப்பு இருந்தமையை அடிகளார் எடுத்துக்காட்டுகிறார்.

இலத்தீன் மொழி மேலை நாட்டுச் சமயங்களின் மொழியாய் விளங்கி வந்தது. சமஸ்கிருதத்தில் இந்தியாவின் சமயங்களைப் பற்றிய நூல்கள் எழுதப்பட்டுள்ளன. ஆனால், தமிழ் இலக்கியத்தில் சிறந்து விளங்கும், பல்வேறு சமய இலக்கியங்களைப்போல, வேறு எம் மொழியிலும் இல்லை என்பது அடிகளார் துணிபு. சைவரும், வைணவரும், பௌத்தரும், சமணரும், மகம்மதியரும், கிறித்தவர்களும் ஒருங்கே இலக்கிய உரிமை பாராட்டக் கூட்டிய மொழி தமிழ் மொழி என்பது அவரது கருத்து. பெரியபுராணம், கம்பராமாயணம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, சீறாப்புராணம், தேம்பாவணி, இரட்சணிய யாத்திரிகம் போன்ற காப்பியங்களுக்கு ஒப்பாய், பல்வேறு சமயங்களுக்குரிய நுல்கள் தமிழ் மொழியிலிருப்பது போல், வேறு எந்த மொழியிலும் இல்லை. ஆங்கிலம் வணிகத்தின் மொழி என்றும், இலத்தீன் சட்டத்தின் மொழி என்றும், கிரேக்கம் இசையின் மொழி என்றும், ஜெர்மன் தத்துவத்தின் மொழி என்றும், இத்தாலியம் காதலின் மொழி என்றும் கூறுவது போல் தமிழைப் பக்தியின் மொழி என்று கூறுவதே பொருத்தம் என்கிறார் அடிகளார்.

'இவ்வாறு சங்க இலக்கியத்தின் - தமிழ் இலக்கியத்தின் சிறப்பியல்புகளைப் பல்வேறு முறைகளில் ஆய்வதற்கு இடமுண்டு. பண்டைக் கால இலக்கியச் செல்வங்களை எடுத்து நோக்கும் பொழுது. நம் முன்னோர் கொண்டொழுகிய வாழ்க்கையமைப்பின் சிறப்பில்புகளை ஆராயும் பொழுது, அவர்களது இயற்கை ஈடுபாடு, அழகோடு இரண்டறக் கலத்தல், தூய கொள்கைகள், வாழ்க்கையின் மேலான குறிக்கோள்கள், நீதியும், ஒழுக்கமும் ஒருங்கமைந்த உயர்ந்த அரசியல் அமைப்பு முறைகள் இவை அனைத்தையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்' (அடிகளார் 1961:48) என்பது அடிகளார் வேண்டுகோள்.

இந்நூலில், மேலும், அடிகளார், 'இன்று நம் தமிழ் நாட்டிற்கு வேண்டுபவர் யாரெனில், ஆன்றமைந்தடங்கிய கொள்கைச் சான்றோராகிய ஆராய்ச்சியாளர் பலரே. நான் உலகின் பல்வேறு நாடுகட்குச் சென்றதின் பயனாகவும், பிறமொழிகளையும் அவற்றின் இலக்கியங்களையும் ஒருவாறு கற்றதின் பயனாகவும், தமிழ் இலக்கியம், தமிழ்ப்பண்பு, தமிழர்கள், தமிழ் வரலாறு முதலியவற்றை உலகில் எவ்வளவிற்குப் பரப்பவேண்டுமென்று, ஒரு சிறிது உணர்ந்துள்ளேன். ஹோமரின் ஒடிசியையும் இலியதையும் (Iliad) மக்கள் போற்றுவதைப்

போல் இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்தை - ஒப்புயர்வற்ற முத்தமிழ்த் தொடர்நிலைச் செய்யுளை உலகம் போற்றுமாறு நாம் செய்தல் வேண்டும். கன்பூசியஸ், செனக்கா முதலாய நீதி நூல் ஆசிரியர்களை உலக மாந்தர் எங்ஙனம் அறிந்து படிக்கின்றனரோ, அங்ஙனமே திருவள்ளுவரையும், அவர்கள் அறிந்து படிக்குமாறு, நாம் செய்தல் வேண்டும். சாபோ, எலிசபெத், பிரௌனிங், சேக்ஸ்பியர் முதலானோரின் காதற் பாக்களை மக்கள் காதலித்துப் படித்து இன்புறுவதே போல் நம் அகத்துறை இலக்கிய நூல்களையும் அன்னார் படித்து இன்புறும் புதிய நாள் உதிக்க வேண்டும். உலக இலக்கியத்திரட்டு (World Classics) என்னும் பெருந்தொகை நூல்களில், நம் இலக்கிய நூல்களும் இடம் பெறும் பெருமை அடைவித்தல் வேண்டும். மேற்றிசைக் கண்ணும் கீழ்த்திசைக் கண்ணுமுள்ள பல்கலைக் கழகங்கள், தமிழ்க் கலைகளின் தனித் தன்மையை உலகிற்கு உணர்த்துமாறு செய்வித்தல் வேண்டும்' (மேலது:49&50) என்று குறிப்பிடுகிறார்.

எனவே, இந்நூலின்கண் கொடுத்திருக்கும் தொடர்புச் செய்திகளையும், ஒப்புமைக் கூறுகளையும், தமிழின் தனிப்பெரும் சிறப்புக்களைப் பற்றிய செய்திகளையும், மேற்குறிப்பிட்ட அவரது வேண்டு கோள்களையும் நோக்கும் பொழுது, அடிகளார் இந்நூலை யாத்ததின் நோக்கமே, இது தமிழ் ஆய்வின் களமாக, மூலத் தகவல்களைத் தரும் வாயிலாக அமைய வேண்டும் என்பதேயாகும். எனவே இந்நூலின் மூலம் தமிழ் ஆய்வுக்கு அடியெடுத்துக் கொடுத்துள்ளார் எனினும் பொருந்தும்.

ஒன்றே உலகம்

சங்க இலக்கியச் சிறப்பியல்புகளுள், அடிகளாரின் கருத்தைப் பெரிதும் கவர்ந்தது, 'ஒன்றே உலகம்' என்ற தமிழரின் உயரிய மனப்பான்மையாகும். வெண்டல் வில்கி எனும் அரசியல் அறிஞன் எழுதி வெளியிட்ட 'ஒரே உலகம்' எனும் நூலைப் பெரிதும் பாராட்டுகின்றனர். அதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே, 'வருங் காலத்தில் நம் சிந்தனை உலகப்பொது நோக்கில் எங்கணும் பரவவேண்டும்' என்ற அவரது கருத்தைத் தமிழர்கள் வெளியிட்டுள்ளனர், என்ற செய்தியினை உலக நாடுகளுக்குத் தெரிவிக்க வேண்டும் என்பது அடிகளாரின் பேரவா. எனவே, தாம் சுற்றுப்பயணம் மேற்கொண்ட நாடுகளைப்பற்றி எழுதிய நூலின் தலைப்பை 'ஒன்றே உலகம்' என்று அமைத்துக் கொண்டார். இது அவர் எழுதிய இரண்டாவது நூல்.

இந்நூல், இரண்டு பதிப்புக்கள் வெளி வந்துள்ளது. முதற்பதிப்பு மார்ச்சு 1966-இல் பாரி நிலையத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது. இரண்டாம் பதிப்பு, 1974-இல் தேநோபிலி ஆராய்ச்சி நிலையத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழின் சிறப்பியல்புகளைப் பிற நாட்டவர்களுக்கு எடுத்துரைக்க மேற்கொண்ட அவரது உலகப் பயணத்தின் போது, தமிழர்

குடியிருக்கும் நாடுகளுக்குச் சென்றார். பழந்தமிழ் நூல்களையும், கையெழுத்துப் பிரதிகளையும், தமிழாய்வில் ஈடுபட்டிருக்கும் தமிழறிஞர்களையும் பார்க்கும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. எனவே, பயணம் முடிந்து வந்தபின்னர் அவைகளைப் பற்றி எழுத முற்பட்டார். பழைய நூல்களைத் தேடிக் கண்டுபிடித்தமை பற்றியும், தமிழ்ப் பண்பாட்டுத் தொடர்பாகப் பார்த்த இடங்களைப் பற்றியும், தமிழர்கள் குடியேறி வாழும் நாடுகளைப் பற்றியும், தமிழ் ஆய்வு நடைபெறும் இடங்களைப் பற்றியும் இந்நூலில் தகவல் கொடுப்பதின் நோக்கமே, அதைப் பற்றி ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்ற தூண்டுதலை ஏற்படுத்துவதற்காகத் தான், என்பது புலப்படும்.

தமிழ் ஆய்விற்குரிய வகையில், தமிழ் தொடர்பான பல செய்திகளையும், தமிழர் பண்பாடு, கலை ஆகியவை தொடர்பான பல தகவல்களையும் குறிப்பிடுகிறார். அவை, இதற்கு முந்திய நூலான 'தமிழ்த்தூது' எனும் நூலிலும் இடம் பெற்றுள்ளன. அதற்கும் இதற்கும் வேறுபாடு என்ன வென்றால், இதில் அந்நாட்டையும், மக்களையும் பற்றிக் குறிப்பிடும் போது அவற்றோடு தொடர்புபடுத்திக் கூறியுள்ளமை யேயாகும். இவற்றைத் தவிர, தமிழர்களின் பொது அறிவை வளப்படுத்தும் வகையில் தாம் பயணம் செய்த நாடுகளைப் பற்றிய தகவல்களாகப் பலவற்றைத் தருகிறார். இவை, காலப்போக்கில், சமூகவியல் அடிப்படையிலோ, மானுடவியல் அடிப்படையிலோ, வரலாற்றின் அடிப்படையிலோ, பண்பாட்டின் அடிப்படையிலோ, தொடர்புபடுத்தி ஆய்வு செய்வதற்குரிய வாய்ப்பை நல்கும் என்ற நோக்கத்தில் கொடுத்துள்ளார் எனினும் பொருந்தும்.

கம்போதியா நாட்டைப்பற்றிக் குறிப்பிடும் போது, அது இந்தியாவுடன், எப்பொழுது எந்த வகையில் தொடர்பு கொண்டிருந்தது என்பதை விளக்குகிறார். கிமேரரெனும் இனத்தவர் கம்போதியாவை ஆண்ட ஒன்பதாம், பத்தாம் நூற்றாண்டில்தான் அது உயர்ந்த நிலையை அடைந்திருந்தது. இவர்களது ஆட்சி, தென் இந்தோச் சீனாவிலிருந்து, பர்மா வரையிலும் பரவியிருந்தது. இவ்வரசு புகழ்பெற்று விளங்கிய காலத்தில் பெரு நகர்களையும், பல கோயில்களையும் நிறுவினர். மேகொங் பேராற்றின் பரப்புநிலத்தில், "அங்கோர்" எனும் மாபெரும் நகரை உருவாக்கினர். கிமேருடைய பண்பாட்டிற்கும் கலைகளுக்கும் இந்தியப் பண்பாடும், கலைகளுமே அடிப்படையாக இருந்தன. கிறித்துவ சகாப்தத்தின் முதல் நூற்றாண்டிலேயே, பொதுவாக இந்தியாவுடனும், சிறப்பாகத் தென்னிந்தியாவுடனும் தென்கிழக்கு ஆசிய நாடுகள் யாவும் தொடர்பு கொண்டிருந்தன. இந்திய மக்களுள், சிறப்பாகத் தமிழ் வணிகரும் கப்பலோட்டிகளும் இந்நாடுகளுக்குச் சென்று பண்டமாற்று வணிகம் செய்து வந்தனர். இவ்வணிகர் சென்ற துறைமுகங்களில்

* அமுதன் அடிகள் எழுதிய 'தனிநாயகம் அடிகளார்' எனும் நூலில், 1963 - என்று குறிக்கப்பட்டுள்ளது (பக்: 149)

குடியேறி, தம் இல்லங்களையும், கோயில்களையும் நிறுவினர். இந்நாட்டவரும் வெளிநாட்டுத் தொடர்பை வரவேற்றனர். இந்திய சமயங்களாகிய சைவத்தையும், வைணவத்தையும், புத்த மதத்தையும் போதிக்கும் சமயத் தலைவர்களை வரவேற்றனர். இந்திய வானநூல், கணிதம், சிற்பம் இலக்கியம் முதலிய கலைகளைக் கற்றறிந்தனர். அரசர்தம் மாளிகைகளிலும் கோயில்களிலும் பிராமனணரைக் குருக்களாகவும், அமைச்சராகவும் அமர்த்தினர்.

ஒன்பதாம் நூற்றாண்டில் சிறப்புற்று மிளிர்ந்த கிமேர்அரசு பதினைந்தாம் பதினாறாம் நூற்றாண்டில் ஆதிக்கம் ஒழிந்தது. கிமேரர் தம் தலைநகரைத் துறந்து கம்போதியாவின் கிழக்கு மாவட்டங்களில் குடியேறினர். பத்து இலட்சம் மக்கள் வாழ்ந்த மாநகர் பாழடைந்தது. அங்குள்ள உலோகச் செல்வங்கள் கள்வர்களால் கவரப்பட்டன. மரங்கள் வளரும் அடர்ந்த காடு, மாளிகைகளையும் கோயில்களையும் மூடின. அங்கோரெனும் தலை நகர்ப் பெயரின் நினைவுதானும், இந்நாட்டு மக்களுடன் மங்கிய ஒரு தூர நினைவாகவேயிருந்தது. மேல் நாட்டினரும் அதனைப் பற்றிய யாதொரு செய்தியையும் அறிந்திலர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் கம்போதியாவில் பிரயாணம் செய்த இரு கத்தோலிக்க பிரெஞ்சுக் குருமார், இப்பாழாகிய பெரு நகர்களைக் கண்டு வியப்படைந்தனர். அதன் மாண்பையும், பரப்பையுங் கண்ட அக்குருமார், பேரரசராகிய மகா அலெக்ஸாண்டரால் கட்டபெற்ற நகராக இருக்க வேண்டுமென்று கருதினர். அவர்களுக்குப் பின், தாவர இயல் அறிஞர் ஹென்றி மூகோ (Henri Mouhot) என்பவர் மரஞ் செடி கொடி பற்றி ஆராயுங்காலத்தில், காட்டிலுள்ள இந்நகரைக் கண்டார். பிரெஞ்சு நாட்டின் கீழ்த்திசை ஆராய்ச்சிக் குழுவினர், கம்போதியாவின் இப்பழைய நகரையும் கட்டடங்களையும் சிறந்த முறையில், சீரமைத்துப் பாதுகாத்து வருகின்றனர். தம் உலகச் சுற்றுப் பயணத்தின் போது இந்நகரைப் பார்த்து அடிகளார் பெரும் வியப்புற்றிருக்கிறார்.

'கம்போதியாவின் கட்டடங்களில் முதன் முதல் அங்கோர் வாட்டையே பார்க்கச் சென்றேன். "அங்கோர்" என்னுஞ் சொல் 'நகர்', 'நகரம்' என்னுஞ் சொல்லின் திரிபு 'நகர்' என்பது வடமொழிச் சொல்லென்று பொதுவாகக் கருதப்படுகின்றது. ஆயினும் அச்சொல் வடமொழியொழிந்த ஏனைய இந்தோ - ஐரோப்பிய மொழிகளில் இல்லாமையாலும், திராவிடர் நகரங்களை அமைப்பதில் பண்டு சிறந்து விளங்கியதாலும், 'நகர்' என்னும் சொல் திராவிட மொழிக்கே பண்டு தொட்டு உரிய சொல் என்று கருதுவதற்கு ஆதாரங்கள் சில உள....... அங்குள்ள மாளிகையின் பல பகுதிகளை இணைக்கும் நீண்ட கூடங்களின் சுவர்களில், இராமாயணம், பாரதம், விஷ்ணுபுராணம் முதலிய இந்தியக் காப்பியங்களிலுள்ள கதைகள் செதுக்கப் பெற்றுள்ளன. திருமால் பாற்கடலைக் கடைந்து அமுதம் எடுக்கும் கதையும் திருமாலின் வரலாறுகளும், இரண்டாம் சூரிய வர்மன்

(கி.பி.1113 - 1150) எனும் அரசனின் பெருமையைக் காட்டுவதற்காக அங்கு வரையப்பட்டுள்ளன. .... அங்கோர் வாட்டைப் பார்த்தபின் "அங்கோர் தொம்" (Angkor Thom) அல்லது "பெருநகர்" என்று பொருள்படும் பழைய நகரைப் பார்க்கச் சென்றேன். இதுவே கிமேரர் பேரரசிற்குப் பன்முறை தலைநகராக விளங்கிய நகர் .... கிமேரருடைய கலைகள் அனைத்தும், திருமறைக் கலைகளாகவே அமைந்திருந்தன. ஒவ்வோர் அரசனும் தன் பக்தியைக் காட்டுவதற்குப் புதுக் கோயில்களைக் கட்டி வந்தான். அத்துடன் அரசரே திருமாலின் அவதாரமாகக் கருதப்பட்டதால், தம்முடைய தெய்வீக அரசத் தன்மையைப் புகட்டுவதற்காகவும், தாம் இறந்த பின் தம்முடைய தெய்வீகத் தன்மையும், புகழும் குடிகொள்வதற் காகவும், அரசர் பெரிய கோயில்களைக் கட்டினர். .... அரசத் தெய்வத் தன்மை தங்குவதற்காக மேருமலை போன்ற தோற்றமுடைய செய்குன்றங்களைக் கட்டி அவற்றின் உச்சியில் இலிங்கங்களை அமைத்து வழிபட்டு வந்தனர். மேருமலையின் கொள்கை கிமேரரின் கட்டடக் கலைக்கு அடிப்படைக் கொள்கையாக அமைந்தது.

கிமேரர் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு சமயங்களைத் தழுவி வந்தனர். சைமும், வைணவமும் அரச குடும்பங்களில் பலகாலமாகத் தழுவப்பெற்று வந்த சமயங்கள். பிற்காலத்தில், மகாயான புத்தமும், ஈனயான புத்தமும் அரச குடும்பத்திலும், பாமர மக்களிடமும் பரவி வந்தன .... கம்போதியாவின் கட்டடச் சிற்பக் கலைகளின் சின்னங்களைப் பார்க்கும் பொழுது, அவை தமிழ் நாட்டுக் கலைகளை எங்ஙனம் தழுவியவையெனும் வினா எழுவது இயல்பு. அங்கோரின் பெருமையும் பல்லவர், சோழரின் பெருமையும் ஒரே காலத்தவை. அங்கோர் வாட்டின் கோபுரங்களையும் கட்டட அமைப்புக்களையும், திருமாலின் உருவங்களையும், யானைப் பீடத்தையும் ஆராயும் பொழுது, மாமல்லபுரம், காஞ்சிபுரம் ஆகிய இடங்களிலுள்ள கட்டடச் சிற்பக் கலையைக் கிமேரர் அறிந்திருக்க வேண்டுமென்ற நம்பிக்கை உறுதியாக உண்டாகிறது.........

.... அங்கோரை நிறுவிய கிமேரரின் வழித்தோன்றல்களைக் கண்டு பேச வேண்டுமென்று, அவர்கள் வாழும் சில சிற்றூர்களுக்குச் சென்றேன். பிரஞ்சு மொழி சிறிதறிந்த சிலருடன் உரையாடலானேன். ஆனால் அவர்கள் தாராளமாக பேசவில்லை. தம்மொழியில் குதிரையை "மா" வென்றும், கப்பலைக் "கப்பால்" என்றும் கூறுவதாகத் தெரிவித்தனர். .... அங்கோரைப் பற்றிய பல செய்திகள் இன்னும் நமக்கு மறைந்தே இருக்கின்றன. அவற்றைக் கண்டுபிடிப்பது அறிஞரின் கடமை (அடிகளார் 1966:23-27) என்று கம்போதியா ஆண்ட கிமேரரால் நிறுவப்பட்ட 'அங்கோர்' நகரைப் பற்றியும், அக்கால மன்னர் பற்றியும் குறிப்பிடுகிறார். இவை கம்போதியாவின் பழமையையும், வரலாற்றையும் தெரிவிப்பதற்குள்ள பொது அறிவுச் செய்திகளைாக இருப்பினும், இந்தியாவோடுள்ள அவர்கள் தொடர்பையும், தமிழகக் கலைகளை அவர்கள் பின்பற்றியமைக்கானச் சுவடுகள் இருப்பதையும் அடிகளார்

கோடிட்டுக் காட்டுவதின் நோக்கம். மேலும் இவைபற்றி ஆய்வதற்கு வழிகோலும் என்ற நம்பிக்கையில்தான்.

வியட்நாம் நாட்டைப் பற்றிப் பொதுவாகச் சொல்ல வந்த அடிகளார், 'சைகோன் மாநகரினுள் தமிழ் மக்களின் தொகையைக் கண்ட நான் வியந்தேன். பிரெஞ்சுகாரர் புதுவையில் ஒரு காலத்தில் ஆட்சி புரிந்து வந்ததால், வியட்நாமில் தென் இந்தியத் தமிழர் பலர், பிரெஞ்சு ஆட்சித் தொடர்பின் பயனாக ஆட்சி துறையிலும் வணிகத் துறையிலும், உயர்ந்த பதவிகளிலிருந்து வந்தனர். முஸ்லிம் மக்கள் பலரும் செட்டி நாட்டு வணிகர் பலரும், புதுவைத் தொடர்புள்ள தமிழ்க் கத்தோலிக்கர் பலரும், சைகோனில் நான் சென்ற காலத்தில் வசித்து வந்தனர். தமிழ்பேசும் கத்தோலிக்கருக்கெனத் கோயிலும் சைகோனில் இருக்கின்றது. அங்குள்ள தமிழ்க் கழகத்தின் சார்பில் நகரத்தார் எழுப்பிய கோயில் மண்டபம் ஒன்றில், தமிழர் வேற்று நாட்டில் பரப்பிய பண்பாட்டு இயல்புகளைப் பற்றி உரை நிகழ்த்தினேன்.

ஏனைய கீழ்த்திசை நாடுகளை விட, இன்று வியட்நாம் என்று அழைக்கப்படும் நாடு தமிழ்ப் பண்பாட்டையும், தமிழ்க்கலைகளையும் பண்டு மிகுதியாக வரவேற்றது. தாக் கூவப்பா என்னும் இடைநீரிநிலைப் பரப்பின் வழியாகத்தான் தென்னிந்திய மாலுமிகள் இந்தோசீனக் கடலைக் கடந்து சம்பா என்று அழைக்கப்படும் வியட்நாமின் பகுதிக்குச் சென்றனர். அங்கு, ஒன்பதாம் பத்தாம் நூற்றாண்டுகளில், வாழ்ந்த மக்கள் தமிழ் மக்கள் வருகையால் மகிழ்ந்து, தமிழ் மக்களின் கட்டடக் கலை, சிற்பக் கலைகளில் ஈடுபட்டனர். இன்று போநகர் என்று அழைக்கப்படும் குன்றின்மேல் உள்ள கட்டங்களைப் பார்த்தால். அவை மாமல்லபுரத்தின் சிற்பக்கலை வழியாகத் தோன்றிய கட்டடங்கள் என்பது நன்கு புலனாகும். மீஷான் எனப்படும் இடத்திலிருக்கும் இடிந்த கட்டடங்களைப் பார்த்தாலும், அவை பல்லவ மன்னர் காலத்தில் இழைத்த கோயில்களின் பான்மையைக் காட்டுகின்றன. நாத்திராங், சைகோன், துரான் போன்ற இடங்களிலுள்ள பழம் பொருட்காட்சிச் சாலைகளை ஆராய்ந்தால் அங்கிருக்கும் சிலைகளிலிருந்து இந்திய நடனக்கலை, சமயம், சிற்பம், கட்டடம் ஆகியவை எத்துணை அளவிற்கு இவ்விடத்தில் பரவியிருந்தன என்பதை ஒருவாறு மதிப்பிட முடியும் (மேலது, 29&30) என்று தமிழர் தமிழ்க் கலை தொடர்பானப் பல செய்திகளைக் குறிப்பிடுகிறார்.

இந்தோனீசியத் தீவுகளிலே முதன்மை பெற்றது சாவகம் (ஜாவா) இத்தீவையே பழைய இந்திய நூல்கள் “சுவர்ண பூமி” அல்லது “செம்பொன் நாடு” என்று அழைக்கின்றனர். தொன்று தொட்டே இத்தீவு இந்தியப் பண்பாட்டைப் பெற்றிருந்தது. கி.பி. முதல் இரண்டாம் நூற்றாண்டுகளிலே தமிழ் நாட்டிலிருந்து கப்பலோட்டிகளும் வணிகரும் அங்குச் சென்றிருக்க வேண்டுமென்பது ஆராய்ச்சியாளர்களின் துணிபு. மணிமேகலைக் காப்பியத்திலிருந்தும், இந்தோனீசியாவில் காணப்பெறும்

சமஸ்கிருத தமிழ்க் கல்வெட்டுக்களிலிருந்தும் இக்குடியேற்றம் பற்றி அறிய முடிகிறது' என்கிறார் அடிகளார்.

சோவியத் ஒன்றகத்தைப் பற்றிய பொதுவானப் பல செய்திகளைக் கூறும் அடிகளார், அங்குத் தமிழ் ஆராய்ச்சி நிகழ்த்தப் படுவதைப்பற்றியத் தகவல்களையும் குறிப்பிடுகிறார். 'கீழ்த்திசைக் கலைகளின் இருபத்தைந்தாவது மாநாடு மாஸ்கோ பல்கலைக் கழகத்தில் சிறப்புற நடைபெற்றது. அங்கு வந்திருந்த அறிஞர்கள் பலரை நான் அவர்களின் நூல்களின் மூலம் அறிந்திருந்தேன். ஆயினும், பலருடன் நேரில் தமிழ் ஆராய்ச்சித் துறைகளைப் பற்றி உரையாட அம்மாநாடு வாய்ப்பு அளித்தது. கிழக்கு ஜெர்மனியிலிருந்து அங்கு வந்திருந்த டாக்டர். லேமான் (Lehmann) என்பவர், தென்னிந்தியாவிலுள்ள சீர்காழியில் ஏழாண்டுகள் வாழ்ந்தவர். இன்று மார்ட்டின் லூதர் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பாடம் நடத்துகின்றார். தாயுமானவரின் பாடல்களையும் தேவாரங்களையும் வேறு பல தமிழ்ச் செய்யுட்களையும் ஜெர்மன் மொழியில் மொழி பெயர்த்தவர். தென்னிந்தியாவிலுள்ள தரங்கம் பாடிக் கிறிஸ்துவக் குழுவினரின் வரலாற்றைப் பற்றிப் பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியிருக்கின்றார்.

.... ரஷ்யாவில் தமிழாராய்ச்சி செய்யும் தமிழறிஞர் நால்வரை நேரில் கண்டு பெரிதும் மகிழ்ந்தேன். கண்ணன் எனத் தம்மை அழைத்துக் கொள்ளும் கிளாசோ (Glasso) என்பவர் திருக்குறளையும் சிலப்பதிகாரத்தையும் ரஷ்ய மொழியில் மொழிபெயர்த்துள்ளார். அந்துரோநோய் என்பவர் தென்னிந்தியாவின் சென்னை மாநிலத்திலும் ஓராண்டு வாழ்ந்தவர். தமிழ் இலக்கண நூலொன்றை ரஷ்ய மொழியில் எழுதியிருக்கின்றார். பியாதி கோர்ஸ்கி என்பவர் தேவாரம் திருவாய்மொழி ஆகியவற்றைப் பற்றி எழுதிக் கொண்டு வருகின்றார். லெனின் கிராடு பல்கலைக் கழகத்தில் சிறந்து விளங்குபவர் "செம்பியன்" (Rudin) என்பவர் இவர் பன்மொழிப் புலவர் (மேலது : 90 & 91) என அடிகளார் குறிப்பிடும் செய்திகள் தமிழ் ஆராய்ச்சி செய்வோருக்குரிய தகவல்களாக அமையும் வகையில் உள்ளன.

பிரான்சு நாட்டிற்கும், தமிழ் நாட்டிற்கும் பல நூற்றாண்டு களாகத் தொடர்பு உள்ளமையும், அதன் வாயிலாகத் தமிழ்க்கலை அங்கு எவ்வாறு பரவியிருக்கின்றது என்பதையும் சுட்டுகின்றார். பிரான்சு நாட்டார் இந்தியாவிற்கு வந்தபின்னர் புதுவையைத் தமது தலைநகராக அமைத்துக் கொண்டனர். அதன்பிறகு, பிரான்சு நாட்டார் பலர் தமிழ் மொழியைக் கற்றிருக்கின்றனர். அதோடு, தமிழ் மொழியைப் பிரான்சு நாட்டில் கற்பதற்கு வழிவகுத்துள்ளனர். தமிழ் நூல்களைப் பாரீஸ் நகரின் நூல்நிலையங்களில் சேர்த்து வைத்துள்ளனர். பூர்ணோப் (Bournobb), ஆரியேல் (Ariel) என்ற இருவரும், தமிழுக்கு அருந்தொண்டாற்றிய பிரான்சு அறிஞர்கள் ஆவர். இந்த நூற்றாண்டைச் சார்ந்த, வான்சோன், பிலொக், பீலியோசா மெல் போன்றவர்கள் தமிழ்

ஆராய்ச்சியில் ஈடுபட்ட தமிழ் அறிஞர்கள் ஆவார்கள் என அடிகளார் குறிப்பிடுகிறார்.

கீழ்த்திசை மக்களைப் பயிற்றுவிப்பதற்காகச் சிறப்பான கல்விக் கழகம் ஒன்று பாரீஸில் உள்ளது. அக்கல்விக் கழகத்தின், நூல்நிலையத்தில் பல பழைய தமிழ் நூல்களும், மொழிபெயர்ப்பு நூல்களும் இருக்கின்றன. தேசிய நூல் நிலையத்தில் (Bibliotheque National), ஏறக்குறைய ஆயிரம் பழைய தமிழ் ஏடுகளும் கையெழுத்துப் பிரதிகளும் உள்ளன. இவற்றுள் சில இந்தியாவிலேயே கிடைக்கப் பெறாதவை. பண்டைக் காலத்தில் முதல் முதல் ஐரோப்பியர் இயற்றிய இலக்கணங்களும் கையெழுத்துப் பிரதிகளும் இந்நூல் நிலையத்தில் இருப்பதாக அடிகளார் குறிப்பிடுகிறார்.

'மேலும் தமிழ் தொடர்பானச் செய்திகளைச் சொல்லும் போது, "அங்கிருக்கும் தமிழ் நூல்களின் பட்டியலைப் படித்த பொழுது தற்காலம் அச்சிடப் பெறாத நூல்கள் சிலவற்றின் தலைப்பைக் கண்டேன். **மாணிக்கவாசகர் பிள்ளைத் தமிழ், சரளிப் புத்தகம், புதுச்சேரி அம்மன் பிள்ளைத் தமிழ்** போன்ற நூல்கள் அங்கு உள. எதிர்பாராத இடங்களிலும், நூற்கூடங்களிலும், தமிழ் ஏடுகளைக் கண்டுள்ளேன். சில ஆண்டுகளுக்கு முன் பாரீஸ் மாநகரில் ஒரு ஐரோப்பியப் பெண்மணி தமிழ் ஏடுகள் சிலவற்றை விலைக்கு விற்க முயன்றதாக அறிந்தேன். மேலும் நெப்போலிய மன்னர் தம்முடைய நூற்கூடத்தில் கம்பராமாயண ஏடு ஒன்றை வைத்திருந்ததாகவும், அஃது இப்பொழுது "பொன்றையின் புளோ" நூற்கூடத்தில் இருத்தல் வேண்டும் என்றும் பிரான்சு அறிஞர் ஒருவர் எனக்குக் கூறினார். நெப்போலிய மன்னர் நூற்கூடத்ததில் அத்தகைய ஓர் ஏடு இருப்பின் அச்செய்தி வியப்பை உண்டாக்கத் தேவையில்லை. ஏனெனில் அவர் கீழ்த்திசை நாடுகளுடைய இலக்கியங்களை அறிவதற்குப் பெரிதும் முயன்றவர். அவருடைய நூற்கூட நூல்களைப் பொன்றையின் புளோவில் நன் பார்வையிட்டபொழுது இந்திய நாட்டின் மரங்கள், பறவைகள் பற்றிய நூல்களையும் அங்குக் கண்டேன். இவற்றையெல்லாம் நன்றாக ஆராய்ந்து பார்க்க வேண்டுவது தமிழ் அறிஞர்கள் கடமை' (மேலது : 124) என்று அடிகளார் குறிப்பிடுகிறார்.

இத்தாலி நாட்டைப்பற்றி அடிகளார் பல பொதுச் செய்திகளை முதலில் கூறும் பொழுதுகூட மொழி ஆய்வாளருக்குப் பயன்படும் வகையில், இத்தாலி மொழி பற்றிய செய்திகளையும் குறிப்பிடுகின்றார்.

இத்தாலி, ஸ்பெயின், போர்த்துக்கல் ஆசிய நாடுகளை ஐரோப்பாவின் "இலத்தீன் நாடுகள் என்று பெயரிடுவது வழக்கம். அவை ஐரோப்பாவின் தென்பாகத்தில் இருப்பதுடன் அவற்றின் மக்களும் இலத்தீன் இனத்தைச் சார்ந்தவர்கள். அவர்கள் மொழிகளும் இலத்தீன் மொழிப் பிரிவைச் சார்ந்தவை.

உரோமைப் பேரரசின் காலத்தில், இலத்தீன் மொழி, இத்தாலியிலும் ஐரோப்பாவின் பல நாடுகளிலும் பரவிற்று. பண்டைத் திராவிட மொழி, தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம் எனத் திரிந்தது போல், பிரெஞ்சு மொழியும் இஸ்பானியமும், போர்த்துக்கீசிய மொழியும், இத்தாலிய மொழியும் இலத்தீன் மொழியின் திரிபுகள். பொதுமக்கள் உரையாடி வந்த கொடும் இலத்தீனிலிருந்து கி.பி. ஒன்பது, பத்தாம் நூற்றாண்டுகளில், இத்தாலிய மொழியும் அதன் உறவு மொழிகளும் தோன்றின. பதின் மூன்றாம் நூற்றாண்டில் இத்தாலிய மொழி இலக்கிய மொழியாகச் செய்யுளில் பயன்படுத்தப்பட்டு, நல்லிசைப் புலவர் தாந்தே (Dante) போன்றவர்களாலும் சீர்படுத்தப்பட்டுச் சிறப்புற்று இக்கால ஐரோப்பிய மொழிகளுள் சிறந்ததோர் மொழியாக விளங்குகின்றது என்று இத்தாலி மொழியின் வரலாற்றை மொழி ஆய்வாளர்களுக்குப் பயன்படும் வகையில் எடுத்துரைக்கிறார்.

இத்தாலியுடன், தமிழ் மொழி, இலக்கியம், கலை தொடர்பானச் செய்திகள் ஆகியவற்றையும் குறிப்பிடுகின்றார். புதுச்சேரியின் அருகில் இருக்கும், அரிக்காமேடு எனுமிடத்தில் அகழ்வாராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்த பழைய ரோமருடைய சட்டங்களைப் பற்றியும், நாணயங்களைப் பற்றியும் குறிப்பிடுவதோடு சங்க இலக்கியங்களில் யவனர் பற்றிய செய்திகள் இடம்பெற்றிருப்பதையும் விளக்குகிறார். முற்காலத்தில் யவனப் போர் வீரர்கள் பலர் தமிழ்வேந்தரின் மெய்க்காப்பளராகவும், ஊரின் காப்பாளராகவும் பணியாற்றியமையையும் எடுத்துக் காட்டுகின்றார்.

தென் இந்தியாவைப் பற்றி முதன் முதல் எழுதியுள்ள மேல் நாட்டாருள், இத்தாலிய நாட்டாராகிய பிளினியும் ஒருவர். இடைக் காலத்தில் தமிழ் நாட்டைப் பற்றி எழுதியுள்ள மார்க்கோ போலோவும் இத்தாலிய நாட்டைச் சார்ந்தவர். இவர்களோடு இத்தாலியரான வீரமாமுனிவரைப் பற்றிக் குறிப்பிட்டு இத்தாலியோடு தமிழுக்குள்ள தொடர்பை விளக்கிக் குறிப்பிடுகிறார் அடிகளார்.

வத்திக்கான் நகரைப் பற்றிக் குறிப்பிடும்போது, அங்குள்ள நூல் நிலையத்தில் கிடைத்த நூற்களின் வாயிலாகத் தமிழில் முதலில் அச்சேறிய நூலைப் பற்றியச் செய்தி கிடைத்ததை விரிவாகக் கூறுகிறார். அந்நூலகத்தில் அவர் மேற்கொண்ட ஆய்வினால் இந்திய மொழிகளில் அச்சுகண்ட முதல் மொழி தமிழ்மொழி எனும் உண்மையினை அடிகளார் கண்டறிந்தார். அதோடு, அவ்வச்சகங்களால் அச்சடிக்கப்பட்ட நூல்களுள், தமிழ் ஆராய்ச்சியாளர்கள் அறிந்திராதிருந்த நூலாகிய **திருத்தொண்டர் திருமலர்** எனும் மூன்றாவது நூலைப்பற்றிய செய்தியையும் முதன் முறையாகத் தம் அரும்முயற்சிகளினால் தெரிந்து கொண்டார். அதே நூல் நிலையத்தில் பதினேழாம் நூற்றாண்டில் அச்சிடப்பெற்று, பிறர் அறியாதிருந்த தமிழ் - போர்த்துக்கீசிய அகராதியின் அச்சுப் பிரதியையும் அடிகளார் கண்டு பிடித்தார்.

இதைப்போல் ஏனைய ஐரோப்பிய நூல்நிலையங்களிலும், சில அரிய தமிழ் நூல்கள் இருப்பதற்கு வாய்ப்புளது என்றும் சுட்டிக் காட்டுகிறார்.

அடிகளார் போர்த்துக்கல்லில் தங்கிய பொழுது, தமிழ் நாட்டைப் பற்றிய சில பழைய அறிக்கைகளைப் படித்ததின் விளைவாக, இரு பழைய தமிழ் நூல்களைப் பார்வையிட்டார். ஒரு நூல் பதினாறாம் நூற்றாண்டில், கத்தோலிக்க மதக்குரு எழுதிய தமிழ் இலக்கணக் கையெழுத்துப் படி. இதுவே, ஐரோப்பியர் ஒருவரால் எழுதப்பட்ட முதல் இலக்கண நூல் என்பது அடிகளார் கருத்து. இந்நூலில் அடங்கிய எடுத்துக்காட்டுக்கள் சிலவற்றிலிருந்து, இந்நூல் தமிழ் நாட்டில் பண்டைக் கொற்கையிருந்த இடத்திற்கு அண்மையிலுள்ள புன்னைக் காயலில் கத்தோலிக்கக் குருவால் போர்த்துக்கீசிய மொழியில் இயற்றப்பெற்ற தமிழ் இலக்கணநூல் என்று குறிப்பிடுகிறார். எனவே, போர்த்துக்கல் பயணம், தன் ஆய்வுக்கு எந்த வகையில் பயன்பட்டது என்பதை வெளியிடுகிறார்.

டென்மார்க்கில் கோப்பன்ஹாகனில் இருக்கும் அரசியல் நூல் நிலையத்தில், தமிழ் நூல்கள் பல இருப்பதாக அடிகளார் குறிப்பிடுகிறார். தேனியர் (Danes) தரங்கம்பாடி முதலிய தென்னிந்தியத் துறைமுகங்களில் இருந்த காலத்தில் அந்நூல்களை டென்மார்க்கிற்கு அனுப்பியிருக்க வேண்டும். குடந்தையில் அச்சிடப்பெற்ற **கண்டிராசன் நொண்டிச் சிந்து** எனும் நூல் அங்குள்ளதாக அடிகளார் குறிப்பிடுகிறார்.

மொரிசியஸில் ஒரு லட்சத்திற்கு மேல் தமிழர்கள் இருப்பதாகக் கூறும் அடிகளார், தமிழர் பற்றி மேலும் பல செய்திகளையும் குறிப்பிடுகிறார். பிரெஞ்சுப் பண்பும், ஆங்கிலப் பண்பும் தமிழ்ப் பண்பும் கலந்த நிலையிலேயே அங்குள்ள தமிழர்கள் காணப்படுகின்றனர். தமிழ் இனத்தவர் பிரெஞ்சு மொழியைத் தமது வீட்டு மொழியாகக் கையாண்டு வருகின்றனர்.

ஏறக்குறைய இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் புதுவையிலிருந்தும், தஞ்சாவூரிலிருந்தும் சென்று குடியேறியுள்ளனர். பிரெஞ்சு மக்கள் ஆட்சி புரிந்த காலத்தில், கைத்திறம் படைத்த பல வேலையாட்களை அழைத்துச் சென்றனர். தஞ்சாவூர் வீதி, திருச்சிராப்பள்ளி வீதி, என்று போர்ட் லூயிசிருக்கும் வீதிகளில் ஒரு காலத்தில் தமிழ் பேசும் மக்களே வாழ்ந்து வந்தனர். 1810-ஆம் ஆண்டு ஆங்கிலயேர் மொரிசியஸ் தீவினைக் கைப்பற்றியதும், மொரீசியஸ் குடிமக்கள் கையொப்பமிட்ட பதவிப் பிரமாணத்தில் சவிரிமுத்து, சின்னத்தம்பி, துரைச்சாமி என்று பலர் தமிழிலேயே கையொப்ப மிட்டிருப்பதை அடிகளார் பார்வையிட்டுள்ளார்.

மொரிசியஸ் மக்களிடம் பிரெஞ்ச - ஆங்கிலம் கலந்த திசைமொழி ஒன்று வழங்கி வருகிறது. இதனைக் கிரையோல் (Creole) என்று கூறுகின்றனர். இத்தகைய மொழி அட்லாண்டிக் தீவுகளில்

இருக்கும் திசை மொழிகளுடன் ஒப்பிடத்தக்கது. இக்கலப்பு மொழியில், பீர்க்கங்காய், முருங்கை, கருவேப்பிலை, கொத்தமல்லி, தோழன், கேள்வி போன்ற தமிழ்ச் சொற்களும் இடம் பெற்றுள்ளன.

மொரீசியஸ் 1861-ஆம் ஆண்டு வெளியிட்ட பிரெஞ்சு செய்தித்தாள்களில் தமிழ் அச்சுக்களைக் கொணட தமிழ் விளம்பரங் களைப் பதிப்பித்துள்ளனர். 1868-இல் ஒரு தமிழ்ச் செய்தித்தாளைப் பதிப்பித்துள்ளார்கள். இவ்வாறு மொரிசியஸ் தமிழர்களைப் பற்றிய பல செய்திகளைத் தகவலுக்காகவும், அது பற்றி ஆய விழைவோருக்குத் தரவுகளாகவும் தந்திருக்கிறார் அடிகளார்.

இந்நூலைக் கூர்ந்து நோக்கும்போது அடிகளார் மேற்கொண்ட உலகப் பயணத்தைப் பற்றி - சென்ற நாடுகளைப்பற்றிச் சொல்வது போல் அமைந்திருந்தாலும், சென்ற இடங்களில், தமிழ் தொடர்பான செய்திகளைச் சேகரிப்பதற்கு அவர் எடுத்துக் கொண்ட முயற்சியையும், ஓர் ஆய்வாளனுக்குரிய முக்கியத் தகுதியான - பணியான உண்மையை நாடுதல் (Persuit of Truth) என்பதனைக் கடைபிடித்திருப்பதையும் கண்டு கொள்ள முடியும்.

ஆய்வு நூல்கள்

அறிவியல் அடிப்படையில் சிந்திப்பதும், அறிவியல் பூர்வமாக ஆய்வுகளை மேற்கொள்வதும், ஏற்றுக் கொள்ளத்தக்க உண்மைகளை ஆய்வு முடிவுகளாக வெளியிடுவதும் இன்றையக் காலக் கட்டத்தின் கட்டாயம். இதைத் தம் தொடர்புகளாலும் பட்டறிவினாலும் அறிந்து உணர்ந்தவர் அடிகளார். எனவே, தான் எடுத்துரைக்கும் அல்லது நிலைப்படுத்தும் கருத்துக்கள் அல்லது முடிவுகள் ஒத்துக் கொள்ளத்தக்க வகையில் அமைய வேண்டுமென்பதில் அடிகளார் மிகவும் கவனமாக இருந்தார். அதற்கேற்ப தம் ஆய்வுகளை மேற்கொண்டார்.

அறிவியல் விழிப்புணர்ச்சி பெற்ற இன்றைய சூழலில் ஆய்வியல் நெறிமுறைகள் சில அறிவியல் அணுகுமுறைகளில் - அடிப்படைகளில் அமைக்கப்பட்டுள்ளன. அவை முறையே

1. கூர்ந்து நோக்கல் (OBSERVATION)
2. கருதுகோள் (HYPOTHESIS)
3. சோதனை (TEST OR EXAM)
4. முடிவு (RESULT OR FINDINGS)

ஒரு பொருளை, ஒரு நிகழ்ச்சியை ஒரு காட்சியை, ஒரு படைப்பை, இதைப் போன்ற ஒன்றை அல்லது எல்லோர் கவனத்தைக் கவரும் பார்வையில் படும் ஏதாவது ஒன்றைப் பார்க்கும் அனைவரும்

ஒரே கண்ணோட்டத்துடன் பார்க்கிறார்கள் என்று சொல்ல இயலாது. எல்லோருக்கும் ஒரே அனுபவம் எற்பட்டிருக்கும் என்றும் கூற முடியாது. கவனிப்பிலும் கூர்ந்து கவனிப்போருக்குச் சில புலப்படும். அதனால் கூர்ந்து கவனிப்போருக்கே, அதைப் பற்றிய ஒரு பிரச்சனை (Problem) ஏற்படும் அல்லது கிடைக்கும். நியூட்டனுக்கு மரத்திலிருந்து கீழே நிலத்தில் விழுந்த ஆப்பிள் பிரச்சனையானது. கலிலியோவிற்கு, தேவ ஆலயத்தில் தொங்கிக்கொண்டு காற்றில் அசைந்த விளக்கு பிரச்சனையானது. இவை அவர்களின் கூர்ந்து கவனிப்பின் (Observation) விளைவாக ஏற்பட்டவை.

பிரச்சனை ஏற்பட்ட பின்னரும், அதைப் பிரச்சனையாகக் கொள்வோரும், அதைக் கண்டு கொள்ளாதிருப்போருமுண்டு. பிரச்சனையை அடையாளங் கண்ட பின்னரும் கூட, அது சிலருக்குத் தான் பிரச்சனையாகிறது. அத்தகையோர்தான், அதைப்பற்றி மேலும் சிந்திக்கின்றனர். அதைப்பற்றிய பல விதமான வினாக்கள் அல்லது ஐயங்கள் எழுகின்றன. ஐயங்கள் அல்லது யூகங்கள் ஒரு கருதுகோளை (Hypothesis) உருவாக்குகின்றது.

கருதுகோளுக்கு விடைகாணும் முயற்சிகளை ஆய்வு என்று குறிப்பிடுகின்றோம். இவ்வாய்வு அறிவியலின் அடிப்படையிலான ஒன்றாக அமையா விட்டால், அவற்றால் ஏற்படும் முடிவுகள் உண்மையின் அடிப்படையில் அமையாது. அவை உலகளாவிய நிலையில் ஒத்துக் கொள்ளும் ஒரு கோட்பாடாகவோ கொள்கையாகவோ மலராது. எனவே, ஒரு வரையறுத்த நெறிமுறையில் (Systematic Analysis) ஆய்வுகள் அமைய வேண்டுமென்பது ஆய்வில் பின்பற்றப் படவேண்டிய ஒரு முக்கியமான விதியாக உள்ளது.

இத்தகைய ஆய்வு நெறிமுறைகளைப் பின்பற்றி, தம் ஆய்வுகளைத் தமிழ் இலக்கியத்தில் மேற்கொண்டவர்களில் கே. கைலாசபதி, ஆ. வேலுபிள்ளை, க. சிவத்தம்பி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். அடிகளாரும் அதற்கு விதிவிலக்கல்ல. அடிகளார் மேற்கொண்ட ஆய்வுகள் அனைத்தும் அறிவியல் அணுகுமுறையிலான இவ்வாய்வுகளையே முழுமையாகப் பின்பற்றியவை.

பழந்தமிழ் இலக்கியத்தில் : இயற்கை

அடிகளார் 1947-ஆம் ஆண்டு, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழில் முதுகலை பட்டம் பெற்றபின்னர், அங்கேயே முனைவர் முன்னிலைப் (எம்.லிட்.) பட்டத்திற்காகப் "பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை" எனும் தலைப்பில் ஆய்வு செய்யத் தொடங்கினார். ஆய்வு நெறியாளராக இருந்தவர் பேராசிரியர் அ. சிதம்பரநாதன் அவர்கள். இதுவே அவரது, தமிழ் இலக்கியம் பற்றிய முழுமையான முதல் ஆய்வாகக் கருதப்படுகிறது. இவ்வாய்வேடு Nature

in Ancient Tamil Poetry எனும் தலைப்பில், அடிகளாரே நிறுவிய தமிழ் இலக்கியக் கழகத்தால் வெளியிடப்பெற்றது. இந்நூலின் மறுபதிப்புக்கள் Nature Poetry in Tamil - The Classical Period என்றும், Landscape and Poetry - A Study of Nature in Classical Tamil Poetry என்றும் இருவேறு தலைப்புக்களில் வெளிவந்தன. இவரது பழந்தமிழ் இலக்கியம் பற்றிய இவ்வாய்வு, இவ்வாறு தலைப்புக்கள் மாற்றப்பட்டு மறுபதிப்புக்களாக வருவதற்குரிய சரியான காரணங்கள் தெரியவில்லை. அடிகளாரே மாற்றினாரா, அல்லது பதிப்பித்தோர் மாற்றினரா என்பது புலப்பட வில்லை. ஆனால், ஒவ்வொரு பதிப்புக்களிலும், பல புதிய கருத்துக்கள் சொல்லப்பட்டுள்ளன. சில பழைய கருத்துக்கள் விடப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, 1963-இல் சிங்கப்பூரில், பண்பாட்டு அமைச்சரகத்தின் சார்பில் வெளியான Nature Poetry in Tamil - A Classical Period என்ற தலைப்பிலான நூலில் அடிகளாரின் முன்னுரையில், அகத்தியரைப் பற்றி ஆய்வதற்கு வீணாகப் பக்கங்களை ஒதுக்குவதை நிறுத்திவிட்டு, உருப்படியாகத் தொல்காப்பியத்தைப் பற்றிய ஆய்வை மேற்கொள்வது புத்திசாலித்தனமானது. எனது ஆய்வு, "சங்க காலத்தில் செடிகொடிகள்", 'சங்க இலக்கியத்தில் விலங்கினங்கள்' என்பன போல அமையாது (ப:XV) என்று கூறும் கருத்துக்கள் 1966-இல், ஆசிய பதிப்பகத்தாரால், Landscape and Poetry - A Study of Nature in Classical Tamil Poetry எனும் தலைப்பிலான மறுபதிப்பில் இடம் பெறவில்லை. இவை போல பல கருத்துக்கள் விடப்பட்டுள்ளன.

முன்னுரையின் இறுதியில் இவ்வாய்வில் கூறப்படும் தாவர இனங்களைப் பற்றிய செய்திகள் பர்ரோ, எமனோ என்பவர்களது திராவிட மொழிகளின் அகரமுதலி அகராதியின் (Dravidian Etynological Dictionary) அடிப்படையிலானவை, என்ற கருத்தைப் புதிதாகச் சேர்த்துள்ளார். இதைப்போன்ற சில கருத்துக்கள் பின்னைய பதிப்பில் இடம் பெற்றுள்ளன.

முதற் பதிப்பு வந்தபின்னர், அடிகளாரின் கருத்துக்கள், எதையும் பாசம் பற்று ஆகியவற்றோடேயே பார்க்கும் பார்வையிலேயே பார்த்துப் பழக்கப்பட்ட தமிழ் இலக்கிய வாதிகள் மத்தியில், பிரச்சனைக்கும் எதிர்ப்பிற்குரியவையாக இருந்திருக்கலாம். அதனால், சர்ச்சைக்குரிய என்பதைவிட ஆட்சேபனைக்குரியவற்றை அடிகளார், மறுபதிப்பில் தவிர்க்க நினைத்திருக்கலாம். பின் பதிப்பில் விடப்பட்டிருக்கும் கருத்துக்களைப் பார்க்கும் பொழுது இவ்வாறே எண்ணத் தோன்றுகிறது. சேர்க்கப்பட்டிருக்கும் புதிய கருத்துக்கள் அல்லது செய்திகள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் கூட, சிலர் அவற்றிற்கு உரிமை கொண்டிருக்கலாம், அல்லது வினவியிருக்கலாம். எனவே, அவற்றை ஆதாரங்களுடன் குறிப்பிட்டிருக்கும் நோக்கத்தைப் பார்க்கும்போது இந்த வகையில்தான் எண்ணத் தோன்றுகிறது.

தலைப்பு மாற்றத்தைப் பார்க்கும் பொழுது, அவரது சிந்தனையின் வளர்ச்சிக்குப்பின்னர், அல்லது அந்த நூலின் கருத்துகளின்

மிகுந்திருக்கும் செய்திகளின் அடிப்படையில், அல்லது, அதை ஒட்டியத் தலைப்புகள் நூல்வடிவில் வந்தமையினால், அவற்றிலிருந்து வேறுபடுத்தும் வகையில், அல்லது, எத்தகையத் தலைப்பைக் கொடுத்தால், அது பிறரைக் கவரும் என்ற வகையிலோ, அமைந்திருக்கலாம் என்று கருதத் தோன்றுகிறது.

இயற்கைப் பற்றிய ஆய்வுகளின் வேறுபாடுகள்

அடிகளாரின் Nature in Ancient Tamil Poetry எனும் நூல் 1952-இல் வெளியாகியுள்ளது. அதற்கு ஐந்து ஆண்டுகளுக்குப்பின்னர், பேராசிரியர் மு. வரதராசனாரின் The Treatment of Nature in Sangam Literature என்ற நூல் 1957 மே மாதம் வெளிவந்துள்ளது. இரண்டு நூல்களும், 'சங்க இலக்கியத்தில் இயற்கை' எனும் ஒரே வகையானத் தலைப்பிலான செய்திகளைச் சொல்வனபோல அமைந்துள்ளன. தலைப்பைப் பொறுத்த வரை அதிகமான வேறுபாடுகள் இல்லாதனவாக அமைந்து உள்ளன. தமிழ் இலக்கியத்தைப் பொறுத்த வரையில் தொன்மை (Ancient) என்றால் அது சங்க காலத்தையே சுட்டும். எனவே, 'Ancient Tamil Poetry' என்பதற்கும் Sangam Literature என்பதற்கும் வேறுபாடு பார்க்க இயலாத வகையிலுள்ளது. சர்ச்சைக்குரிய நிலையிலுள்ளமையால், Ancient Tamil Poetry என்பதற்குப் பதிலாக, Nature Poetry in Tamil - என்று பொதுத் தலைப்பைப் பொதுவாகக் குறிப்பிட்டபின்னர் The Classical Period என்பதை உள்பிரிவாக அமைத்திருப்பாரோ என்று எண்ணத் தோன்றுகிறது. அதன்பின்னர் 1966-இல் வெளியிட்ட இதே நூலின் மறு பதிப்பில் Landscape and Poetry என்று, பொதுவானத் தலைப்பினைக் கொடுத்தமை, தம் ஆய்வு முடிவுகளின் தன்மையை மனதிற்கொண்டு அமைக்கப்பட்டதாகவோ, அல்லது, உலகிலுள்ள பல மொழிகளில் வந்த நூல்களில் 'இலக்கியத்தில் இயற்கை' அல்லது 'கவிதையில் இயற்கை' என்று அமைந்திருந்தமையால், இயற்கையாக அமைந்துள்ள நிலத்தின் அடிப்படையில் எவ்வாறு கவிதைகள் புனையப்பட்டிருக்கின்றன - என்று புதுமையை, வியப்புக்குரிய ஒன்றை உலகிற்கு உணர்த்தும் வகையில் - விழைவில் இத்தகைய தலைப்பை அமைத்திருக்கலாம் என்றும் எண்ணத் தோன்றுகிறது.

பேராசிரியர் மு. வரதராசனாரின் **சங்க இலக்கியத்தில் இயற்கை** எனும் நூல் பற்றியும் அடிகளாரின் நூல் பற்றியும், இவ்விரண்டையும் முழுமையாகப் படிக்காதவர்கள் தவறான செய்திகளைப் பரப்பி வருகின்றனர். இதற்குக் காரணம் என்னவென்றால், தமிழகத்தில், அரசியலிலும், இலக்கியத்திலும், தலைவர்களுக்குத் தொண்டர்கள் என்பதைவிட பக்தர்களே மிகுந்துள்ளனர். எனவே, பேராசிரியர் மு.வ.-வின் பக்தர்கள், மு.வ.-வைப் பின்பற்றியே அடிகளார் ஆய்வு செய்தார் என்றும், மு.வ.வை விரும்பாதவர்கள் தனிநாயகம் அடிகளார் நூலின் கருத்துக்களையே மு.வ. எழுதியுள்ளார் என்றும்

கூறி வருகின்றனர். முன்னர் சுட்டிக் காட்டியதுபோல், தலைப்பு நிலையில் ஒற்றுமையும் தொடர்பும், அதோடு இயற்கை எனும் ஒரே பொருளிலும், ஒரே இலக்கியத்திலும் (சங்க இலக்கியம்) ஆய்வு அமைந்திருப்பதால், ஒரே சான்றுகள் இரண்டு நூற்களிலும் இடம் பெற்றுள்ளன. இவற்றைத் தவிர்க்க இயலாது. இவை தவிர, வேறு எந்தவகையிலும் இரண்டு நூல்களும் ஒன்றிற்கொன்று தொடர்பு இல்லாதவை. மேலும் தமிழ்ப் பேரறிஞர்களான இருவரும் இருவேறு நோக்கங்களிலும், அணுகு முறைகளிலும், பின்புலங்களிலும் தம் ஆய்வுகளை மேற் கொண்டுள்ளனர்.

பேராசிரியர் மு. வரதராசனார், தமிழ்ப் பாரம்பரிய மரபு வழிச் சிந்தனையாளர். தமிழ் இலக்கியங்களில் ஆழ்ந்த புலமையும் ஈடுபாடும் கொண்டவர். தமிழ் இலக்கியத்தில் மு.வ. அவர்களுக்கு இருந்த புலமையும் பயிற்சியும் அடிகளாரக்கு இருந்ததாகச் சொல்ல இயலாது. அதற்குரிய வாய்ப்பும் சூழலும் அடிகளாருக்கு வாய்க்க வில்லை. அதைப்போல், அடிகளாருக்குள்ள பின்புலம் மு.வ. அவர்களுக்கு இருக்க வாய்ப்பில்லை. அடிகளார், தாய்மொழியைப் போல் ஆங்கிலத்திலும் புலமை வாய்ந்தவர். அடிகளார் இளமைக்காலம் முதல், ஆங்கில வழி கல்வி கற்றவர் 'உலகப் பொது மொழியாகிய ஆங்கில மொழியில் புலமை பெற்று, அதைச் செம்மையுற எழுதவும், பேசவும், ஆற்றல் பெறவேண்டும் என்பதே இளமைப் பருவத்தில் அவரது நோக்கமாக இருந்தது'. (அமுதன் அடிகள் 19893:2) மாணவப் பருவத்திலேயே ஆங்கிலக் கட்டுரைகள் பல எழுதியும், ஆங்கில ஏட்டின்* ஆசிரியராகப் பணியாற்றியும், தனது ஆங்கிலப்புலமையை வளர்த்துக்கொண்டவர். உரோமிற்குச் சென்று உர்பன் குருமடத்தில் சமயவியல் மாணவராகச் சேர்ந்த பொழுது, இத்தாலியம், ஸ்பானிஷ், போர்த்துக்கீசியம், பிரெஞ்சு, செர்மன், கிரேக்கம், எபிரேயம் ஆகிய மொழிகளைப் பயின்றார். இந்த வாய்ப்பும் சூழலும் மு.வ. அவர்களுக்கு ஏற்படவில்லை. தமிழைத்தவிர பிறமொழி என்றவகையில், ஆங்கில மொழியை ஓரளவுக்கு அறிந்திருந்தார். அங்கிலத்திலுள்ள இலக்கியத் திறனாய்வு நூல்களைக் கற்று அவற்றின் சாரங்களைத் தமிழில் தருமளவுக்கு அவரது ஆங்கில அறிவு இருந்தது. அடிகளாரைப்போல, பிற மேலை நாட்டு மொழிகளைக் கற்று, அம்மொழிகளிலுள்ள இலக்கியங்களைக் கற்கும் வாய்ப்பு மு.வ. அவர்களுக்கு அமையவில்லை.

அடிகளார், உலகின் பல நாடுகளுக்கும் பல ஆண்டுகள் சென்ற அனுபவம் உடையவர். முழுமையாக இரண்டு ஆண்டுகள் தமிழ்த்தூதுவராக உலகப் பயணம் மேற்கொண்டதின் விளைவாக, மு.வ. அவர்களைவிட பிறநாடு - பிறமொழி - பிறஇலக்கியம் என்ற வகையில் பட்டறிவும் பயிற்சியும் அதிகம் பெற்றவர்.

---

* Bottled Sunshine எனும் இதழ்

மு.வ. அவர்கள், தமிழ் இலக்கியத்தின் பெருமையைத் - தமிழர்களின் செம்மாந்த வாழ்வைத் தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்ற உள்ளுணர்வுடன் தம் ஆய்வை மேற்கொண்டார். அந்தக் காலகட்டத்தில் அறிமுகமாகியிருந்த, மேத்யூ அர்னால்டு, ஆபர்கிராம்பி, ஐ.ஏ. ரிச்சர்ட்ஸ் ஆகியோரது திறனாய்வுக் கோட்பாடுகளின் கருத்துகளை மேற்கோளாகக் காட்டி, பிரடரிக் மூர்மன் (Fredrick Moorman), பிரான்சிஸ் பால்கிரேவ் (Francis Palgrave), ஆகியோரின் இலக்கியத்தில் இயற்கை என்பதுபற்றிய ஆய்வுகளையும் பின்பற்றித் தம் ஆய்வை அமைத்துள்ளார்.

மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள தனது ஆய்வில் மு.வ. அவர்கள், முதற்பகுதியில் 'சங்க இலக்கியத்தில் இயற்கை பெறுமிடம்' என்ற தலைப்பையும் 'இயற்கையைப் பாடிய சங்கப் புலவர்கள்' என்ற தலைப்பையும் அமைத்து ஆய்வு செய்துள்ளார். முதற்தலைப்பில், சங்க காலத்தைப் பற்றியும், மக்களைப் பற்றியும், இலக்கியத்தைப் பற்றியும், இயற்கையைப் பற்றியும் பொதுவான செய்திகளைப் பின்புலமாகக் குறிப்பிடுகிறார். இரண்டாவது தலைப்பில் 104 புலவர்களைப் பற்றிய செய்திகளையும் பாடல்களையும் பற்றிக் கூறுகின்றார்.

இரண்டாவது பகுதி, நிலம், வானம், தாவரங்களும், விலங்கினங்களும் என்ற மூன்று உட்பிரிவைக் கொண்டது. நிலம் என்ற தலைப்பின்கீழ், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நான்கு நிலப் பிரிவுகளையும், அவற்றைப் பற்றிப் பாடிய பாடல்களையும் விளக்குகிறார். வானம் பற்றிப் பாடிய பாடல்களையும் விளக்குகிறார். வானம் என்ற தலைப்பின்கீழ், நிலா, விண்மீன்கள் ஆகியவற்றைப் பற்றிய பாடல்களைக் குறிப்பிடுகிறார். தாவரஇயல் விலங்கியல் பற்றிய தலைப்பில் தாவரங்களைப் பற்றியும், விலங்கினங்களைப் பற்றியும் பாடப்பட்ட பாடல்களை எடுத்துக் காட்டுகிறார்.

மூன்றாவது பகுதியில் உவமையின் வாயிலாக வெளிப்படும் இயற்கை குறித்தும், மக்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தன்மை குறித்தும் இரு தலைப்புகளில் செய்திகள் சொல்லப்பட்டுள்ளன. அதோடு அந்தப் பகுதியிலேயே முடிவுரையும் சொல்லப்பட்டுள்ளது. பழந்தமிழர் எந்த வகையில் இயற்கையோடு இயைந்த பெரு வாழ்வை மேற்கொண்டிருந்தனர், இயற்கையான நிலப்பாகுபாட்டினை அடிப்படையாகக் கொண்டு, தம் வாழ்க்கையினை அமைத்துக் கொண்டனர். எந்தப் பொருளைப் பற்றிப் பாடினாலும், இயற்கையைப் பின்புலமாக் கொண்டோ, தொடர்புபடுத்தியோதான் தம் பாக்களை அமைத்தனர், பண்டைத் தமிழ்ப்பெரும் புலவர்கள், என்ற செய்திகளையே தம் ஆய்வில் மு.வ. அவர்கள் வெளிப்படுத்தியுள்ளார். ஒட்டு மொத்தமாக, வளர்ந்து வரும் ஆய்வு நெறிமுறைகளின் அடிப்படையில் பார்ப்போமேயானால் அது ஒரு தொகுப்புப் பணியாகத் தான் புலப்படுகிறது. ஆனாலும் தொடக்க காலத் தமிழ் ஆய்வின் தன்மையை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

சங்க இலக்கியப் பாடல்களுடன், ஒர்ட்ஸ் வொர்த் (Words Worth), ஷெல்லி (Shelly) ஆகியோர் பாடல்களைப் பொருள் அடிப்படையில் ஒப்பிட்டுக் காட்டுகிறார். 'தொன்மைச் சிறப்பு வாய்ந்த கிரேக்கர்களைப் போல் எண்ணங்களையும், பழக்க வழக்கங்களையும், பண்பாட்டின் சிறப்பையும் பெற்றிருந்தனர் தமிழர்கள்' (மு. வரதராசன் 1957:405) என்று குறிப்பிட்டுள்ளார். இவை தவிர, ஒப்பியல் நோக்கிலோ, பிற நிலையிலோ அணுகவில்லை. மேலை நாட்டுத்திறனாய்வாளர்கள் என ஆபர்கிராம்பி, அர்னால்டு, ரிச்சர்ட்ஸ் ஆகியோரின் திறனாய்வுக் கருத்துக்களைத் தமது கருத்துக்களுக்கு ஆதரவாகவே மு.வ. அவர்கள் காட்டுகிறார். அவை பற்றிய விவாதங்களையோ, பகுப்பாய்வுகளையோ முன் வைக்கவில்லை.

ஆனால், அடிகளார், ஆய்வின் பகுப்புமுறையிலிருந்து, அணுகுமுறை வரையிலும், மேலை நாட்டில் அன்றை வரையிலும் வளர்ந்திருந்த ஆய்வு நெறிமுறைகளை நன்குத் தெரிந்திருக்கும் வாய்ப்பைப் பெற்றிருந்தார். மேலும் அடிகளாரின் அனுபவத்திற்கு உட்பட்ட மேலைநாட்டு ஆய்வுகள், குறிப்பாக மொழி, இலக்கியம், பண்பாடு, நாகரிகம், மொழியியல், ஒப்பியல் தொடர்பான ஆய்வுகள், சமூகவியல் அடிப்படையிலும், மானுடவியல் அடிப்படையிலும், உளவியல் அடிப்படயிலும் அமைந்திருந்தன. எனவே தம் ஆய்வுகளை அன்றைய நிலையில் வளர்ந்திருந்த ஆய்வின் தரத்தோடு ஒப்புநோக்கும் வகையில் அமைத்திருந்தார்.

மேலும், உலகமொழிகள், இலக்கியங்கள், அவற்றின் தொன்மை, அவை பேசும் மக்கள், அவர்கள் பண்பு, நாகரிகம் ஆகியவற்றை அனுபவ ரீதியாக அறிந்திருந்த அடிகளார், தொன்மைச் சிறப்பும், இலக்கிய - இலக்கண வளமும் கொண்ட தமிழை உலகோருக்குப் புலப்படுத்த வேண்டும் என்ற நோக்கம் அவரது ஆய்வின் அடிப்படை பிரச்சனையாக இருந்தது. ஐரோப்பியர் தம் மொழிகளின் பெருமையினை வலியுறுத்துவதற்கு Classical Literature, Classical Period எனக் கூறி மகிழ்வர். அடிகளாரும் தன்மொழியின் தொன்மை இலக்கியங்களைக் குறிப்பிடும்போது Sangam Literature என்று குறிப்பிடாமல் Classical Literature, Clasical Period என்றே குறிப்பிடுகிறார். மு.வ. அவர்கள் Sangam Literature என்று மட்டும் குறிப்பிடுவது கவனிக்கத் தக்கது.

உலகச் செம்மொழிகளைப் பற்றியத் தரவுகளைச் சேகரிப்பதற்கு, அடிகளாருக்கு அவரது உலகப் பயணமும், உரோமையில் ஐந்து ஆண்டுகள் வாழ்க்கையும் பெரிதும் துணை செய்தன. அவற்றின் அடிப்படையில் தமிழ் இலக்கியத்தை அணுகுவதற்கும், ஒப்பிட்டுப் பார்ப்பதற்கும், அரிய வாய்ப்புக்கள் கிடைத்தன. இத்தகைய பின்புலத்தின் அடிப்படையிலேயே தான் அடிகளார் தம் ஆய்வுகளை நிகழ்த்தியுள்ளார்.

மேலும், அடிகளார் முன்னுரையில் பக்கம் XV-இல், அடிக்குறிப்பில் - குறிப்பு (Note) என்பதின் கீழ், இப்பக்கங்களில் சொல்லப்பட்டுள்ள செய்திகள், மு. வரதராசனாரின், **சங்க இலக்கியத்தில் இயற்கை** எனும் தலைப்பில் 1957-இல் வெளியிட்ட நூலுக்கு முன்னர் எழுதியவை. இந்நூலில் உள்ளக் கருத்துக்கள் தொடர்புடைய மூல நூற்களிலிருந்து விரிவான பகுப்பாய்வை மேற்கொண்டு எழுதப்பட்டவை என்று குறிப்பிடுகிறார்.

அடிகளார், ஆய்வுமேற்கொண்ட ஒரே காலக்கட்ட இலக்கியங்களைப் பற்றி, இயற்கை எனும் ஒரு கருத்தில் (Concept) பேராசிரியர், மு.வ. அவர்களும் தன் ஆய்வை நிகழ்த்தியுள்ளமையாலும், தொடர்புடைய தலைப்பு என்பதினாலும், இரண்டிற்கு முள்ள வேறுபாட்டையும், அடிகளாரின் ஆய்வின் அடிப்படை நோக்க வேறுபாட்டையும் தெளிவுபடுத்துதல், பிற்கால இவை தொடர்பான ஆய்விற்கு நல்லது என்ற நோக்கிலேதான் இருவரையும் ஒப்பிட்டு கூற வேண்டிய கட்டாயத் தேவை ஏற்பட்டது. பிறிதில்லை.

தலைப்பைத் தேர்ந்தெடுத்தற்குரிய காரணம்

ஆய்வின் நெறிமுறைகளில் ஒன்று, தலைப்பைத் தேர்ந்தெடுப்பதற்கான காரணத்தைக் குறிப்பிட வேண்டுமென்பது. அடிகள் இந்தத் தலைப்பைத் தேர்ந்தெடுப்பதற்குரிய காரணத்தைக் குறிப்பிடும்போது, 'புதிய உலகின் விடிவு காலமாகக் கருதப்படும், கீப்ரு தீர்க்கத்தரிசிகள், கிரேக்க தத்துவ அறிஞர்கள், சீன அறிஞர் கன்பூசியஸ் போன்றவர்கள் வாழ்ந்த கி.மு. ஐந்தாம் ஆறாம் நூற்றாண்டுகளிலேயே தமிழ் இலக்கியம் உலக உண்மைகளைப் புதிய நோக்கில் வெளிப்படுத்தின. இந்தக் காலக்கட்டம், தொல்காப்பியர் காலமும், இரண்டாவது சங்க காலமும் ஆகும். இத்தைகய சிறப்புக்குரிய தமிழின் பெருமை உலகளாவிய நிலையிலுள்ள அறிஞர்கள் கண்ணில் படவில்லை. அந்த முயற்சியை யாரும் மேற்கொள்ளவில்லை. சமஸ்கிருதத்திற்கு ஒரு மாக்ஸ்முல்லர் (Max Muller) கிடைத்தது போல் தமிழுக்கு ஒருவர் கிடைக்கவில்லை. மேலை நாட்டு அறிஞர்கள் "தென்னிந்தியாவில் ஒரு பழமையான மொழி உள்ளது" என்று மட்டுமே சுட்டுகின்றனர். இந்தியா என்றால், கங்கை, ஜமுனா சமவெளி பரப்புகளை மட்டுமே கருதுகின்றனர். இந்தியப் பண்பினை அறிவற்குச் சமஸ்கிருத மொழிப் பயிற்சி மட்டும் போதும் என்று கருதுகின்றனர். மேலை நாடுகளில் வெளிவந்துள்ள இந்திய இலக்கிய வரலாற்று நூல்களிலும், தமிழுக்குத் தகுந்த இடமும், புகழும் அளிக்கப்படவில்லை. எனவே, இக்குறைகளைப் போக்கும் வகையில், தமிழின் சிறப்புக்களைச் சான்றாதாரங்களுடன் அறிஞர்கள் ஒத்துக்கொள்ளும் வகையில் எடுத்துச் சொல்ல வேண்டியது முக்கியமான தேவையாகக் கருதப்படுகிறது. அதனால் இத்தலைப்பைத் தேர்ந்தெடுப்பதற்கான கட்டாயம் ஏற்பட்டது' (அடிகளார் 1963:VII & VIII) என்று குறிப்பிடுகிறார்.

ஆய்வின் நோக்கம்

ஆய்வின் நோக்கத்தைச் சுட்டும் பொழுது, ஒரு பொது நிலை மதிப்பீடாக, கவிதையை வாழ்க்கையைப்போல் அனுபவிப்பவர்களுக்காக, தமிழின் தொன்மைச் சிறப்பினையும், இலக்கிய வளத்தையும், தமிழரின் புதுமை நோக்கினையும் தனித்தன்மையையும் உலக அறிஞர் மத்தியில் எடுத்துரைப்பதே இவ்வாய்வின் நோக்கம். இது தமிழ்ப் புலவர்களுக்காக அமைக்கப்பட்ட ஆய்வல்ல. இந்தியாவிலும் வெளிநாட்டிலுமுள்ள மாணவர்களுக்காகவும், தமிழைப் பற்றி அறிந்திராதவர்களுக்காகவும், அறிய விழைவோருக்காகவும் மேற்கொள்ளப்படுகிறது' (மேலது:XV) என்கிறார் அடிகளார்.

'உலகச் செம்மொழிகளிலிருந்து எந்த அளவுக்குத் தமிழ் வேறுபட்டுள்ளது, எவ்வகையில் ஒப்புமையுடன் திகழ்கிறது, என்பதை இயன்றளவுக்கு ஒப்பியல் நோக்கில் ஆய்வதே' (மேலதுXVII) தனது கருது கோளாக வரையறை செய்கிறார்.

ஆய்வின் அடிப்படை ஆதாரங்கள்

இலக்கியம் சிறப்புற்று மிளிர்வதற்கும், வளர்வதற்கும் நிலைக்களனாகத் துணைபுரியும் பொருட்கள் மக்களும் இயற்கையுமே யாகும். இவ்விரு பகுதிகளையும் பிரித்து இயற்கையை விடுத்து மக்களைப் பற்றியும், அல்லது மக்களை விடுத்து இயற்கையைப் பற்றியும் பாடுவரேல் அவ்விலக்கியம் குறையுள்ள இலக்கியமாகவே கருதப்படும். தமிழ்ப் புலவர்கள் தம் புலமைத் திறனைக் காட்டுவதற்கு, முதற்பொருளாக மக்களையும், துணைப்பொருளாக இயற்கையையும் எடுத்துக்கொண்டனர். தமிழரின் இயற்கை ஈடுபாட்டைப்பற்றி ஆராயுந்தோறும், எந்நாளும் புதிய கருத்துக்களையும், வியத்தற்குரிய உண்மைகளையும் கண்டு கொள்ளலாமென முன்னுரையாகக் குறிப்பிடுகிறார்.

தொல்காப்பியம்

சமஸ்கிருதத்தின் மூலத்தை வேதங்களிலிருந்தும், கிரேக்கத்துப் பாணர்களைப் பற்றிக் கோமரின் பாடல்களிலும், ஆய்வதற்கு ஒப்பியல் மாணவனுக்கு வாய்ப்பு இருப்பதுபோல, தமிழின் இலக்கிய மூலங்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கு வரலாற்றுச் சான்றுகள் சிறிதளவே கிடைக்கின்றன. இருப்பினும், தமிழில் தொன்மையாகக் கிடைத்திருக்கும் தொல்காப்பியம் ஏற்கனவே இருந்த பல இலக்கண ஆசிரியர்களைப் பற்றியும், இலக்கியங்களின் வளத்தைப் பற்றியும் குறிப்பிடுகின்றது. தொல்காப்பியத்தின் காலத்தை எவ்வளவுதான் பின்னுக்குக் கொண்டு சென்றாலும் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்குப் பின்னால் கொண்டு செல்ல முடியாது என்பது அடிகளார் கருத்து.

அந்தக் காலக்கட்டத்தையே அங்கீகரித்தாலுங்கூட, தமிழர்களின் வாழ்வைப் பற்றியும், இலக்கிய மரபுகளைப் பற்றியும், ஏராளமான செய்திகளைத் தொல்காப்பியத்தின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. எனவே, தமிழின் தொன்மையையும் மரபு வழிச் செல்வங்களையும் அறிந்து கொள்ள விழைவாருக்குத் தொல்காப்பியம் ஒரு மூல நூலாக விளங்குகிறது.

ஏனைய உலகச் செம்மொழி இலக்கியங்களுக்கு இல்லாத சிறப்புக் கூறாகத் தமிழ் இலக்கியத்திற்கு இருப்பது அகம் புறம் என்ற இரு பெரும் பிரிவுகள். இவ்விரு பிரிவுகளும் தமிழின் தனித்தன்மை, தனிச் சொத்து என்று கூறுகிறார் அடிகளார். இயற்கையின் தட்ப வெட்பம், சிறுபொழுது, பெரும்பொழுது தாவரங்கள் ஆகியவற்றோடு தொடர்புடைய மனிதஇயக்கத்திற்கும், உணர்ச்சிகளின் வெளிப் பாட்டிற்கும், பின்புலமாகவும், மையமாகவும் இப்பிரிவுகள் ஆதாரமாகவும் இருந்தன என்பதைத் தொல்காப்பியம் எடுத்துக் காட்டுகிறது. தொல்காப்பியத்தில் பொருளதிகாரத்தில் இவை பற்றிச் சொல்லப்படும் முழுச் செய்திகளும், இத்தலைப்பிலான அடிகளாரின் ஆய்வுக்குரிய அடிப்படைகள் - ஆதார மூலங்கள். எனவேதான், ஒரு மனிதனின் செயல் முறைகளுக்கு இயற்கை எவ்வாறு ஓர் ஆதாரமாக விளங்குகிறது என்பதனைத் தொல்காப்பியத்தின் பொருளதிகாரம் மிகச் சிறந்த முறையில் எடுத்துக்காட்டுகிறது என்கிறார்.

பாட்டும் தொகையும்

தொல்காப்பியர் காலத்திற்கு முந்தியும், அதற்கு அடுத்துமுள்ள தமிழ் இலக்கியங்கள் நமக்குக் கிடைக்கவில்லை. கி.பி. இரண்டாம் நூற்றாண்டிற்கு முன்னால், தொகுக்கப்பட்ட பத்துப்பாட்டும் எட்டுத் தொகையுமே கிடைத்துள்ளன. இவை தொகுக்கப்பட்ட காலத்திற்கு முந்திய இரண்டு நூற்றாண்டு காலத்திலுமுள்ள, தமிழர்களின் சமூக, அரசியல், பொருளாதார வாழ்க்கை முறைகளையும், இலக்கியத் தன்மைகளையும் எடுத்துக் காட்டுகின்றன. மேலும் இயற்கை செய்யுள்களுக்குப் பின்புலமாக இருந்ததைப் பொருளதிகாரம் விரிவாக எடுத்துரைக்கின்றது.

ஆற்றுப் படையின் வாயிலாகப், பத்துப் பாட்டு, தமிழ் நாட்டின் இயற்கை வளத்தையும் வனப்பையும், காலங்களையும் தட்ப வெட்ப நிலையையும் பெருமளவில் விரிவாக விளக்குகிறது. இது இயற்கை பற்றிய வழிகாட்டி நூலாகவும் பயண நூலாகவும் விளங்குகின்றது. சமஸ்கிருதம், பிராகிருதம் ஆகியவற்றை விட யதார்த்தமும் சிறப்பும் உடையது. சமஸ்கிருதத்திலுள்ள 'சந்தேசா' எனும் பிரிவைவிட ஒரு தனிமனிதனின் பயண அனுபவங்களை மிகவும் யதார்த்தத்தோடு கூறுகின்றது.

பத்துப்பாட்டிலுள்ள ஒவ்வொன்றும் இயற்கையோடு தொடர்புள்ளனவற்றையே எடுத்துக் காட்டுகின்றன. முருகனைப் பற்றிய பாடலாக இருந்தாலும் பிறவகைப் பாடல்களாக இருந்தாலும், அவை இயற்கையின் மிக நுண்ணிய காட்சியையே சுட்டுகின்றன. இவற்றிற்கு எடுத்துக்காட்டாக ‘மலைபடுகடாம்’, ‘குறிஞ்சிப்பாட்டு’ நெடுநல் வாடை ஆகியவற்றில் இடம்பெற்றுள்ள பாடல்களைப் படித்து அறிந்து கொள்ளலாம் என்கிறார் அடிகளார்.

எட்டுத் தொகையில் இடம்பெற்றுள்ள அகம் புறம் பற்றிய சிறப்புச் செய்திகளை விளக்குகிறார் அடிகளார். அகப் பாடல்கள் மனிதனின் உள்ள உணர்வுகளை, அன்பின் வெளிப்பாடுகளை எவ்வாறு உளவியல் அடிப்படையில் வெளிப்படுத்துகின்றன என்பதை உளவியல் கோட்பாடுகளின் துணையுடன் எடுத்துக் கூறுகிறார். ‘புறம்’ என்பது உடல் உரத்தையும், உள்ள வலிவையும், ஆள்வினையையும் வெளிப் படுத்தும் என்று விளக்கம் கொடுக்கிறார். புற இலக்கியங்களான புறநானூற்றிலும், பதிற்றுப் பத்திலும், இயற்கையைப் பற்றிச் சொல்லப் பட்ட செய்திகள், இயற்கையைப் பற்றிப் பாடிய பிற உலக இலக்கியங்களுடன் ஒப்பிடத்தக்கவை. ஆனால், அக இலக்கியங்களில் இயற்கையைப் பற்றிச் சொல்லப்படும் செய்திகள், பிற உலக இலக்கியங்களுக்கு முற்றிலும் அந்நியமானவை என்று குறிப்பிடுகிறார். பழைய காலங்களிலும், தற்காலத்திலும் உள்ள இயற்கை பற்றிய பாடல்களை மதிப்பீடு செய்யும், உலகப் புகழ்பெற்ற ஆய்வாளர்களான, கம்போல்ட் (Humboldt)) ரஸ்கின் (Ruskin), பீஸ் (Biese), பல்கிரேவ் (Palgrave) போன்றவர்களும் அறிந்திராத, ,இயற்கை பற்றிய அரிய செய்திகளை, அரிய பாடல்களாக அக இலக்கிய பாடல்கள் அமைந் துள்ளன என்பதைச் சான்றுகள் பல குறிப்பிட்டு, எடுத்துரைக்கின்றார்.

இந்தியாவின் கங்கைச் சமவெளிப் பரப்பிலும், எகிப்தின் நைல் நதி பள்ளத் தாக்கிலும் சொல்லப்படாதவைகள், இந்தியாவின் தென்கோடியில் இயற்கை பற்றிய கவிதைகளில் சொல்லப்பட்டுள்ளன. இச்செய்திகள், உலக இலக்கியங்களிலும் புதியனவாக உள்ளவை என்பது அடிகளார் கருத்து.

கலித்தொகையில் இடம்பெறும் தலைவி, நிலாவுடனும், மேகத்துடனும், தென்றலுடனும், கடலுடனும் எவ்வாறு, தன் தலைவனைப் பற்றிய உள் உணர்வுகளை வெளிப்படுத்துகிறாள், அவை எவ்வாறு உலகிலுள்ள பிற இலக்கியங்களிலிருந்து வேறுபட்டிருக்கின்றன என்பதைச் சான்றுடன் விளக்குகிறார்.

இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழ்மக்கள், எவ்வாறு தம் உள்ள உணர்வுகளை, இயற்கையின் வழி வெளிப்படுத்துகின்றனர் என்பதனையும் எடுத்துக் கூறுகிறார். இவற்றை முழுமையாகத் தெரிந்து கொள்வதற்கு மூல நூலாக - பார்வை நூலாக - கருவூலமாகத்

தொல்காப்பியம் திகழ்கிறது. எனவே, அகத்தியர் பற்றியும் அவர் காலத்தைப் பற்றியும், வீணாக ஆய்ந்துவரும் தமிழ் அறிஞர்கள் தொல் காப்பியத்தை எல்லையாகக் கொண்டு ஆதாரமாகக் கொண்டு - தம் ஆய்வுகளை மேற்கொள்ளுமாறு அடிகளார் வேண்டுகிறார்.

இயற்கை பற்றிய ஆய்வுகள்

இயற்கை பற்றிப் பாடப்பட்ட பாடல்களின் திறனாய்வுகள் பல வந்துள்ளன. சேக்ஸ்பியர், ஒர்ட்ஸ் வொர்த், ஷெல்லி போன்ற தனிப்பட்டப் படைப்பாளர்களைப் பற்றியும், ஒரு மொழி இலக்கியம், ஒரு நாட்டு இலக்கியங்கள், உலக இலக்கியங்கள் என்ற நிலையிலும் பல ஆய்வுகள் வந்துள்ளன. 1794-இல் சில்லர் (Shiller) இத்தகைய ஆய்வைத் தொடங்கி வைத்தார். அதன் பின்னர் அலெக்ஸாண்டர் வான் கம்போல்ட் (Alexander Von Humboldt) பிரான்சிஸ் டர்னர் பல்கிரேவ் (Francis Turner Palgrave), ஜான் காம்பெல் செர்ப் (John Camphell Sharip), ஆகியோர் இத்துறையில் விரிவான ஆய்வினை மேற்கொண்டனர். இவற்றில் காளிதாசரின் வேதகாலப் பாடல்கள் பற்றிக் கூறப் பட்டுள்ளனவே தவிர, தமிழ்ப் பாக்கள் பற்றி எந்த ஒரு செய்தியும் இல்லை. எனவே, கம்போல்ட், பீஸ் ஆகியோரது இயற்கைப் பாடல்களைப் பற்றிய ஒப்பியல் ஆய்வு, முழுமையான ஆய்வாகக் கருதப்பட மாட்டாது என்பதற்குரிய காரணங்களை விளக்குகிறார். அதோடு, லாப்ரேட் (Laprade) செர்ப் ஆகியோர் ஆய்வுகள் மிகவும் துல்லியமாகவும் வளமுடையதாகவும் அமைய வேண்டுமானால் தமிழ் இலக்கியம் பற்றிய செய்திகள் அவற்றில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்ற அடிப்படை உணர்வுகளை முன்வைத்தே தன் ஆய்வை அடிகளார் மேற் கொண்டுள்ளார். இயற்கையைப் பற்றி ஆய்வு செய்யும் மாணவர்கள் இதை மனதிற் கொள்ள வேண்டுமென்பதே அடிகளாரின் அவா. தனது ஆய்வு வெற்றி பெறுவதற்கு, சேப்மான் (Chapman), ஆர்தர்வேலி (Arthur Walleys) போன்ற பேரறிஞர்கள் தமிழுக்குக் கிடைக்க வேண்டும் என்னும் தன் விருப்பத்தை வெளிப்படுத்துகிறார்.

ஆய்வின் பின்புலங்கள்

தனது ஆய்வின் பின்புலமாக, நிலம், மொழி, நிலத்தின் தட்ப வெட்பநிலை, பருவங்கள் ஆகியவற்றை அமைத்துள்ளார்.

1. நிலம் : ‘கிரேப்நர் (Graebner) காலத்திலிருந்தே ஒரு மனிதன் சார்ந்திருக்கும் நிலம் அவனது பண்பு நலன்களை நிர்ணயிக்கும் தன்மை என்பது நிறுவப்பட்டுள்ளது. இன்று, அறிவியலாக வளர்ந்துள்ள மனித நிலவியலைச் (Human Geogrpahy), சுற்றுப்புறச் சூழலைப் பற்றி ஆய்பவர்கள் அல்லது இலக்கியத்தைப் பற்றி ஆய்பவர்கள் ஆகியோர் புறக்கணிக்க இயலாது’ (Graebner, Methode der Ethnologic) (மேற்கோள்; அடிகளார் 1963:1) மேற்குறிப்பிட்ட கிரேப்நரின் கருத்தை நியாயப்படுத்தும்

வகையில் அடிகளார், உலகின் பல்வேறு வகையானத் தட்ப வெட்ப நிலையில் வாழும், பாலைவனம், பனிக்கட்டி உறையும் பகுதிகள் உட்பட்ட நிலங்களில் வாழும் மக்களையும், அவர்களது வாழ்க்கை முறைகளையும், மன இயல்புகளையும், பண்பாடுகளையும் எடுத்துக் காட்டுகிறார்.

தமிழ்ப்புலவர்கள் கூறும் நீலத்திரைக் கடலைத் தமிழ் நாட்டைச் சூழ்ந்த கடல்களில் பார்க்கமுடியும். சிலவேளைகளில் ஹாவாயைச் சூழ்ந்த கடலிலும் உண்டு. ஆனால், நடுக்கடலில் நீலமிருப்பது கிரீஸ் நகரத்தின் நடுவில்தான். எனவே ஐரோப்பிய படைப்பாளர்கள், 'நீல நடுநிலக்கடல்' (Blue Mediteranean Sea) என அழைப்பது மரபு. அத்தகைய பெருமைக்குரிய கிரீஸ் மிக அழகான ஒரு நாடு. அதன் கடற்கரை பல வளைவுகளை உடையது. அதன் நதிகளும் தாழ்வான குன்றுகளும் ஒரு பகட்டான பரப்பளவு உடையதாக அமைந்திருக்கும். மனித உறவுகள் எளிமையாக ஏற்படும் வகையில் ஒரு பகுதியோடு இன்னொரு பகுதி மிக நெருக்கமாக இணைந்திருக்கும். அளவில் இந்தியாவின் இமய மலைப்பகுதியை விட மிகச் சிறியது. இந்திய பெரும் நதிகள், கிரீஸை விழுங்கிவிடும் அளவுக்கு மிகச் சிறியது. அளவிலே மிகச் சிறியதாக இருந்தாலும், சுய உணர்வும், சுய சிந்தனையும், தனித்தன்மையும், சுதந்தரமும் அங்குச் சிறப்புற்று மிளிர்ந்தன. அதைப்போல தமிழகமும் ஒரு காலத்தில் சிறப்புற்றிருந்தது. தென்னிந்தியாவின் நிலப்பரப்பும், அமைப்பும் பிளவுபட்ட சிறிய மலைகளும், நதிகளும், இயற்கையிலேயே மிக அழகாக அமைந்திருந்தன. கிரீஸைப் போல, சிற்றரசுகளும், குறுநில மன்னர்களும் உருவாவதற்குத் தென்னிந்திய நிலத்தன்மை வாய்ப்பளித்தது. இந்த நில அமைப்பு ஒருவகையில் பல பிரிவுகள் ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்தது. மாறாக, வட இந்தியா, ஒரே சமவெளி பரப்பு நிலத்தையே கொண்டுள்ளது. எனவே சமஸ்கிருதத்தில் தமிழைப்போல, ஐந்து பாகு பாடுகளுடன் பாடல் இயற்றப் படுதற்குரிய சூழலும் வாய்ப்பும் இல்லை.

மொழியலாளரின் கருத்துப்படி ஒரு குறிப்பிட்ட வகையான தட்பவெட்ப நிலை, ஒரு குறிப்பிட்ட வகையான ஒலிகளையே ஏற்படுத்தும். எனவே, திராவிட மொழிகளின் ஒலிகளுக்கும், இந்தோ - ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்த மொழிகளில் குறிப்பாகச் சமஸ்கிருத மொழியின் ஒலிகளுக்கும் வேறுபாடு இருப்பதற்குக் காரணம், அம்மொழிகள் பிறந்து வளர்ந்த நிலத்தின் தட்ப வெட்ப நிலை மாறுபட்டுள்ளமையாகும்.

2. தட்ப வெட்பநிலை : தமிழ்ப் பாடல்களில் பயிலப்படும் சொற்கள், கற்பனைகள் நிலத்தின் தட்ப வெட்ப நிலைக்கு ஏற்ப அமைந்திருப்பதை அடிகளார் எடுத்து விளக்குகிறார். தென்னிந்தியாவின் தட்ப வெட்ப நிலை மிதமான குளிராகவும் மிதமான சூடாகவும் அமைந்திருக்கும். எனவே, வேனிற்காலத்தில் மரநிழல்களிலும், நீர் நிலையங்களின்

பக்கத்திலும் தங்கி, மகிழ்ச்சியாகப் பொழுது போக்கியும், விழாக்கள் எடுத்தும், நீர் நிலைகளில் நீராடியும், பாடி மகிழ்ந்தும் இன்புற்றனர். இது ஒருவகையில், வெர்ஜில் குறிப்பிடும் ஆடு மேய்ப்பர்கள், புல்வெளிகளில் ஆடுகளை மேய்க்கும் பொழுது பாடிச் செல்வதைப் போலுள்ளது என ஒப்பிட்டுக் குறிப்பிடுகின்றார்.

ஆறு பருவங்களிலும், குறிப்பாக முதுவேனிற் காலமும், கார்காலமும் கவிஞர்களின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்திருக்கின்றது. ஞாயிற்றின் வெம்மையை முழுமையாக அனுபவித்து மக்கள் வெறுக்கும் ஒருகாலம் முதுவேனிற்காலம். அதன் பின்னர், மழையை எதிர்பார்த்ததாலும், விவசாயம் மழையை நம்பி இருத்தலாலும், பின்னர் அறுவடை நிகழ்வதாலும், மக்கள் மகிழ்ச்சியாக இருத்தலாலும், அவை பற்றிக் கவிஞர்கள் மிகுதியாகப் பாடினர். மாறாக, ஐரோப்பிய இலக்கியங்களிலும், அமெரிக்க இலக்கியங்களிலும், வேனிற்காலமும் வெம்மையும் அவர்களது மகிழ்ச்சிக்குரிய காலமாகும். வெர்ஜில் நண்பகலில் ஞாயிற்றின் வெப்பத்தால் புற்கள் தலை நிமிர்கின்றன. அது மகிழ்ச்சியின் - இன்பத்தின் வருகையை வெளிப்படுத்துகிறது என்று பாடுவார். மேற்கு - ஞாயிற்று ஒளி கடவுளின் அன்பின் வெளிப்பாடாகக் காட்டப்படுகிறது. எனவே, காதலையும், அன்பையும் வெளிப்படுத்தும் காலமாக அது கருதப்படுகிறது. குளிர்பிரதேச நாடுகளில் தீ அல்லது வெப்பம் என்பது மகிழ்ச்சியின் அடையாளமாகவும், நட்பின் அடையாளமாகவும் காட்டப்படுகிறன்றன. இதற்கு நேர் மாறாகத் தமிழகத்தின் தன்மை அமைந்துள்ளது. அதையே பழந்தமிழ்ப் பாக்கள் வெளியிடுகின்றன. ஒரு நாட்டின் சிறந்த நிலையை - ஆட்சியின் சிறப்பைப் பாராட்டும் பொழுது

'செந்நீர்ப் பூச வல்லது
வெம்மை யரிதுநின் னகன்றலை நாடே' (பதிற்றுப்.28:13:14)

என, வேனிற்கால ஞாயிறு, கொடுமை ஆட்சிக்கு உவமையாக்கப் படுகிறது. வெப்ப நாட்டில், மரநிழல், நீர் நிலையத்தின் அருமை தெரியும். அதனால், தமிழ் நில அமைப்பிற்கேற்ப, ஒவ்வொரு பருவங்களிலும் காணப்படும், ஒவ்வொரு விதமான நிழல்களைப் பற்றியும் கூர்ந்து நோக்கி அதைத் தம் கவிதைகளில் பயன்படுத்தியுள்ளனர்.

'இருள் திணிந்தன்ன ஈர்ந்தண் கொழுநிழல்' (குறுந்.123)

'புகர் நிழல்' (குறுந்.303)

'புள்ளி நிழல்' (அகநானூறு.379)

'வலை வலந்தன்ன மென்னிழல்' (பொருநா.50)

'வரி நிழல்' (சிறுபாண்.12)

மேற்குறிப்பிட்ட பாடல் வரிகளைச் சுட்டிக் காட்டி, கவிஞர்கள் இயற்கையை நுணுகி நோக்கியிருப்பதை வெளிப்படுத்துகிறார்.

பெரும்பாலான காலங்களில், வெம்மை அமைந்திருக்கும் பூகோள அமைப்புடைய தென் இந்தியாவில், குளிர்ச்சியை எவ்வாறு மகிழ்ச்சியுடன் விரும்பினர் - வரவேற்றனர் என்பதற்குச் சங்க இலக்கியங்களில் கவிஞர்கள் பயன்படுத்திய சொற்களைக் குறிப்பிடுகின்றார். குளிர்ச்சியைச் சுட்ட 'தண்', 'பனி', 'மழை' போன்ற சொற்களைப் பயன்படுத்தியிருப்பதையும், சுட்டிக் காட்டுகின்றார். மொழியின் சிறப்பினைச் சுட்டும்பொழுது 'தண்டமிழ்' என்பதிலிருந்தும், 'தண்குரல் எழிலி', 'மழைக் கண்' என அடைமொழிகள் சேர்ப்பதிலிருந்தும் இவற்றைப் புரிந்து கொள்ள இயலும் என்கிறார்.

கவிஞன் ஷெல்லியின் கவிதைகளில் வெறுக்கப்பட்டிருக்கும் மேகம், இந்தியாவின் தட்ப வெட்ப நிலைக் கேற்ப இந்தியக் கவிதைகளில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. எனவே, மழை வருவதற்குரிய அறிகுறிகளான, இடிமுழக்கம், மின்னல், மேகம் போன்றவை, மகிழ்ச்சியின் வருகைக்கான அடையாளங்களாகத் தமிழ்க் கவிஞர்களால் காட்டப்படுகின்றன. மேகம் நன்மையின் அடையாளமாகக் கூறப்படுகிறது.

'பெயன் மழைத் தடக்கை' (புறம்.107)

'பொழி பெயல் வண்மையான்' (கலித்.57,12)

'மாரியன்ன வண்மை'

முதலியவைகளைச் சான்றுகளாக எடுத்துக் காட்டுகிறார் அடிகளார் இரக்க உள்ளம் என்று சுட்டுவதற்கும் குளிர்ச்சியைக் குறிப்பிட்டனர். மரநிழல் தண்மை, நல்லாட்சிக்கும், நல்லது செய்தலுக்கும் உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

நிலம், மனிதனுக்கு எல்லா வகையான வளத்தையும், நன்மைகளையும் பயப்பதினால் உலகிலுள்ள தொன்மையான இலக்கியங்கள், நிலத்தைப் பெண் என்றும், தாய் என்றும் குறிப்பிட்டன. அவற்றிற்கு ஒரு படிமேலாக, தமிழ் இலக்கியம் சமஸ்கிருத இலக்கியத்தைப் போல, மலைகளை மார்பகங்களாகவும், மலைப் பகுதிகளிலுள்ள மூங்கில்களை அவளது மென்மையான சிறு தோள்களாகவும், நதிகளை அவளது மாலைகளாகவும், கடலை அவளது அணிகலன்களாகவும் உவமித்துக் கூறுகிறது. எடுத்துக்காட்டாக,

'மணிமழைப் பணைத்தோள் மாநிலமடந்தை
அணிமுலைத்துயல் வரூஉம் ஆரம்போல'

எனும் சிறுபாணாற்றுப்படை வரிகளைச் சுட்டிக்காட்டுகிறார்.

இயற்கையின் வறண்ட பகுதிகளைக் கூடத் தமிழ்க் கவிஞர்கள், உன்னதமான உவமைகளின் வாயிலாகவும், வருணனை மூலமாகவும் முழுமையாக வெளிப்படுத்தியுள்ள பெருமை தமிழுக்கே உரிய ஒன்று என அடிகளார் நிறுவுகிறார்.

மேற்குறிப்பிட்ட இவ்வாய்வுக் கருத்துக்கள்; நிலம், மொழி, தட்ப வெட்பம் ஆகியவற்றைப் பின்புலமாகக் குறிப்பிடும் முதல் இயலில் கூறப்பட்டுள்ளன.

வாழ்க்கையும் இயற்கையும்

வாழ்க்கையும் இயற்கையும் என்ற இரண்டாவது இயலில், தமிழர்களுக்குத் தொடக்க காலத்தில் இயற்கையோடு இருந்த தொடர்பு (Earlier Contact with Nature) இயற்கையோடு இருந்த வாழ்க்கையின் நெருக்கம் (Intimate life with Nature); இயற்கையும் நாட்டுப் புறப்பாடலும் எனும் தலைப்புக்களில் தமிழ் இலக்கியத்திற்கே அமைந்திருக்கும் தனித்தன்மையைக் கூறி, பிற உலக இலக்கியங்களோடு ஒப்பிடுகிறார்.

தாம் வாழ்ந்த நிலத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தே இயற்கையைப் பற்றித் தமிழ்ப் புலவர்கள் சிந்தித்தனர். எனவே, இயற்கையைப் பற்றி இவர்கள் கூறும் செய்திகள், ஏனைய பிற மொழிப் புலவர்களைவிட முற்றிலும் மாறுபட்டன. ஒரு விவசாயி அல்லது ஓர் அறிவியலாளன் இயற்கையைப் பார்க்கும் பார்வையிலிருந்து, ஒரு கவிஞனின் பார்வை வேறுபட்டது என்பதனைத் தமிழ் கவிதைகளிலிருந்து அறிந்து கொள்ளலாம் என்று குறிப்பிடுகிறார் அடிகளார்.

மேலை நாட்டில், ரஸ்கின் போன்ற கவிஞர்கள் கூட இயற்கையின் அழகைமட்டுமே எடுத்துக்காட்டுகின்றனர். கிரேக்கர்களின் பல்லாஸ் (Pallas) முதல் யுலிஸியஸ் வரையிலுள்ள பாடல்களில் இப்போக்கைப் பார்க்க இயலும். கவிஞன் என்பவன், ஓர் அறிவியலாளனை விடவும், இயற்கையை அதன் அந்தரங்கத்தை அறியும் வரையிலும், மிகவும் ஆழமாகச் சென்று, மனிதனுக்கும் இயற்கைக்கும் உள்ள உறவைச் சோதித்தான். கவிஞனின் அணுகுமுறை, ஒரு தத்துவ ஞானியின் அணுகுமுறையிலிருந்து கூட வேறுபட்டது. தத்துவஞானி உண்மையை நாடுகிறான். கவிஞன் இயற்கையின் அழகில் கனவு காணுகிறான் அதோடு தனது தொலைப் பார்வையையும் செலுத்துகிறான். தமிழ்ப் புலவன், ஓர் அறிவியலாளனைப் போல, தாவர நூல் நுணுக்கங்களையும், செய்திகளையும் கூறியதோடு, இயற்கையின் வனப்போடும் சிறப்போடும், மனித உறவுகளையும் உணர்வுகளையும் வெளிப்படுத்துகிறான். ஆழமானத் தத்துவங்களைக் கூட வெளியிடுகிறான் என்று நிறுவுகிறார் அடிகளார்.

சுதந்தரமான வெட்ட வெளிச்சத்தில், இயற்கையைப் பார்க்கும் மனிதன் அதன் அழகைக் கண்டு மகிழ்வதைப்போல, கவிஞன் தான் பார்த்து மகிழ்ந்த, காட்சியை அல்லது நிகழ்ச்சியை எடுத்துக் காட்டுகின்றான். ஞாயிற்றையும், மழையினையும் பார்த்து, மகிழ்ந்த மகிழ்ச்சியையும், மிகுந்த குளிரையும், பனிமிகுந்த காலத்திலுள்ள துன்பத்தையும் இயற்கையைப் பற்றிப்பாடும் கவிஞன் எடுத்துரைக்கின்றான். சி.ஜே. செயிர்ப்பு (C.J. Shairp) என்பவர், கூறும் மேற்குறிப்பிட்ட கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டு அவை தமிழ் இலக்கியத்திற்கு எவ்வாறு பொருந்தும் என்பதையும் மதிப்பிடுகிறார்.

கவிஞன் என்பவன், இயற்கையைக் கண்டு மகிழ்ந்து, அந்த மகிழ்ச்சியை மட்டும் எடுத்துக் காட்டுவது, ஒரு காட்சியைக் கண்டு மகிழும் குழந்தையின் மகிழ்ச்சியைப் போன்றது. சாசரும், ஸ்பென்சரும் இதைத்தான் தம் கவிதைகளில் வெளிப்படுத்தினர். இதற்கு மேலாக, இயற்கையை மனிதனோடு உறவுபடுத்துகின்ற பொழுதுதான், அதைப் பற்றிப் பல்வேறு வகையான அணுகுமுறையிலும் நோக்கத்திலும் சொல்ல இயலும் என்று நிரூபிக்கிறார்.

இயற்கை காட்சி ஒன்றினைப் பார்க்கும் பொழுது ஏற்படும் உணர்வுகளை வெளிப்படுத்துவது ஒரு வளர்ந்த நிலை. இதில், ஷெல்லியையும், ஒர்ட்ஸ் வொர்த்தையும் விடவும், கீட்ஸ் வேறுபட்டிருந்தான். அவன் தன் கவிதைகளில் உணர்வுகளை மட்டுந் தான் வெளிப்படுத்தியிருந்தான்.

இயற்கையைக் கவிஞர்கள், உவமைகளை வினியோகம் செய்வதற்கான, சரக்கு மிகுந்த சேமிப்புக் கிடங்குகளாகவும் (Rich Store House) சில நேரங்களில், மனித வாழ்க்கையோடு தொடர்புகளைக் காட்டும் நிகழ்ச்சி அல்லது காட்சிகளைக் காட்டுவனவாகவும், மனிதனின் செயலுக்கும், உணர்ச்சிகளுக்கும் ஒரு பின்புலத்தை உருவாக்குவதற் காகவும், தம் கவிதைகளில் இடம்பெறச் செய்துள்ளனர்.

தமிழின் தொன்மைக் காலக் கவிதைகள் தமிழனின், நாகரிகமும் பண்பாடும் சிறப்புற்று மிளிர்ந்த காலத்தில் தோன்றியவை. எனவே அவை நயம் பாராட்டும் தன்மையில் இயற்கையைப் பற்றிப் பாடப்படவில்லை. பழந்தமிழிப் பாடல்கள் எழுந்த காலம் ஏற்கனவே, இயற்கையை நாம் பாராட்டும் கால எல்லையைக் கடந்து வளர்ந்த நிலையிலிருந்தது.

முதன்முறையாக ஓர் அழகான காட்சியைப் பார்க்கும் குழந்தை உடனேயே மகிழ்ச்சியடைவதைப் போல, தண்ணீரின் குளிர்ச்சியையும், நிழலின் சுகத்தையும் உலகம் முழுவதுமுள்ள கவிஞர்கள் பாடியுள்ளனர். கீட்ஸினது புதுமையை வெளிப்படுத்தும் பாடல்களிலும், வெர்ஜில், டென்னிசன் போன்றோரின், இயற்கையை நுணுகிப் பார்த்துப் பாடிய பாடல்களிலும் இத்தன்மையைப் பார்க்க முடியும். தமிழ்க் கவிஞர்களும்

இவ்வகை உணர்வுகளை வெளிப்படுத்தியுள்ளனர். ஆனால் இவற்றிற்கும் மேலே, அவைகளைத் தம் வாழ்க்கையின் மரபுகளோடும் அன்றாட நடைமுறை நிகழ்ச்சிகளோடும் இணைத்தும் பிணைத்தும் காட்டியிருப்பதுதான், தமிழ்க் கவிஞர்களை ஏனைய உலக இலக்கியங்களிலிருந்து வேறுபடுத்தி மேம்பட்ட நிலையில் காட்டுகின்றது என அடிகளார் ஒப்பிட்டு ஆய்ந்துள்ளார்.

இயற்கைப் பாடல்களில் மலர்கள்

மலர்கள் தமிழர்களின் நாகரிகத்திலும், பண்பாட்டிலும் இணைந்திருப்பதற்குக் காரணமே, அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தும் மலர்கள் அவர்களது மன இயல்புகளையும் உறவுகளையும் வெளிப்படுத்தும் அடையாளச் சின்னங்களாக அமைந்தவையேயாகும். நிலப் பாகு பாட்டிற்குப் பெயரிடும் பொழுதுகூட அந்தந்த நிலங்களில் சிறப்புற்று மிளிரும் அரிய மலர்களின் பெயரையே சூட்டி மகிழ்ந்தனர். முல்லை நிலத்திற்கு முல்லை மலர் அடையாளமாக இருப்பதுடன், அது கற்பு எனும் பண்பினைக் குறித்தற்குப் பெரிதும் பொருந்திய பூவாகவும் விளங்குகின்றது.

தலைவன், தலைவிக்குத் தன் அன்பின் அடையாளமாக மலர்களைக் கொடுத்தான். மலர்மாலையை விழாக்காலங்களில் பயன்படுத்தியமையும், நட்பை வெளிப்படுதற்குரிய சின்னமாகக் கொடுத்தமையும் தமிழர்கள் தம் வாழ்வில் ஒரு மரபாகப் பின்பற்றி வந்துள்ளமையைக் காட்டுகின்றன. நெய்யப்பட்ட ஆடைகள் அறிமுகமாகாதக் காலக்கட்டத்தில் மலர்களையே ஆடைகளாக அணிந்து வந்திருக்கின்றனர். வேங்கை முழுமையாகப் பூத்துக் குலுங்கும் காலத்தில் அதன்கீழ் விழாக்களையும், திருமணங்களையும் நடத்தி யிருக்கின்றனர். இது அந்தக் காலத்தில் ஒரு மரபாகப் பின்பற்றப்பட்டு வந்ததற்கு அகநானூறு (86, 156), குறுந்தொகை (125, 24, 295), கலித்தொகை (33, 39), நற்றிணை (170, 320), ஐங்குறுநூறு (72, 73) ஆகியவற்றில் இடம் பெற்றுள்ள பாடல்களைச் சான்றாதாரங்களாக அடிகளார் குறிப்பிடுகிறார்.

மரத்தை வழிபடும் முறையும் இருந்திருக்கிறது. இலைகளை ஆடைகளாக அணிந்திருப்பதோடு மட்டுமல்லாமல், அணிகலன்களாகவும் அணிந்திருக்கின்றனர். எடுத்துக்காட்டாக, அணிகலன்களின் பெயர்களான, தோடு, அரசிலை, குழை, ஓலை, கொந்திளவோலை, தாலிக்கொடி ஆகியன இதைப் புலப்படுத்தும்.

தமிழர்கள், செடிகளையும், மலர்களையும் குழந்தைப் பருவத்திலிருந்தே விரும்புகின்றனர். குழந்தை பிறந்த சில நாட்கள் கழித்து, அரசனான தந்தை, போருக்குப் புறப்படும் பொழுது, பூக்களால் ஆகிய மாலையை அணிந்து செல்வது போல், குழந்தையின் முன் காட்சி தர வேண்டும். இதைப் பார்த்ததும் தன் தந்தை, ஒருபோர் வீரன்

என்பதனை முதற் காட்சியிலேயே அக்குழந்தை உணரவேண்டும் என்பதும் மரபாக இருந்துவந்தது என்பதற்குப் புறநானூறு 100-வது பாடலை எடுத்துக்காட்டி விளக்குகிறார். இறையனார் அகப்பொருள் உரையிலுள்ள இல்லமும் பொழிலும் பற்றியவையும், குறிஞ்சிப்பாட்டில் இறையனார் அகப்பொருள் உரையிலுள்ள இல்லமும் பொழிலும் பற்றியவையும் குறிஞ்சிப்பாட்டில் இடம்பெற்றுள்ளன. தமிழர்களின் இயற்கையோடு தொடர்புடைய வாழ்க்கை நெறியினை எடுத்துக் காட்டுகிறார். அகப்பாடல்களில் வேங்கை மரம் மிகுதியாக இடம் பெற்றிருப்பதையும், காதல் வாழ்க்கையின் பின்னணியாக இயற்கை இடம் பெற்றிருப்பதையும் விரிவாக விளக்கிக்கூறியுள்ளார் அடிகளார்.

விழாக்காலங்களில் மலர்களை எவ்வளவு முக்கியம் வாய்ந்ததாகப் பயன்படுத்தயுள்ளனர் என்பதற்கு, மதுரையிலிருந்து திருப்பரங்குன்றம் வரையிலும் மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த செய்தியைப் பரிபாடல் (19, 15 -18), வரிகள்மூலம் எடுத்துரைக்கிறார். வறுமையிலிருக்கும் துன்பமான காலத்தில் மலர் அணியாமலிருந்த செய்தியைக் குறுந்தொகைப்பாடல் (19)

> "எவ்வி யிழந்த வறுமை யாழ்ப்பாணர்
> பூவில் வறுந்தலை போல்"

என்பதின் வாயிலாக எடுத்துரைக்கிறார். மேலும், ஒவ்வொரு மன்னனின் எல்லையைச் சுட்டும்வகையில் காவல் மரங்கள் அமைந்திருந்தன. காவல் மரங்கள் அரசர்களின் கௌரவங்களைக் (Prestige) உறுதிபடுத்தும் காவல் மரங்களைப் பகைவர் வெட்டினால் அதை ஒரு மானப் பிரச்சனையாகக் கருதி, உடனே பகைவன் மீது மன்னன் போர் தொடுப்பான். மூவேந்தர்களும் அத்திப்பூ, பனம்பூ, வேப்பம்பூ ஆகியவற்றைத் தம் இலச்சினைகளாகக் கொண்டிருந்தனர்.

பாரி முல்லைக்குத் தேர் ஈந்த நிகழ்ச்சி பேகன், மயிலுக்குச் சால்வை கொடுத்துதவிய நிகழ்ச்சி ஆகியவற்றைத் தமிழர்களின் இயற்கை ஈடுபாட்டிற்குரிய சான்றுகளாகக் குறிப்பிடுகிறார். இதை, மயிலுக்கு பட்டுத் துணியைச் சர் வால்டர் ராலிப் (Sir Walter Raliegh) போர்த்திய நிகழ்ச்சியோடு ஒப்பிட்டுக் கூறுகிறார்.

திருமணம் நிகழும் பொழுது, தமிழ்மக்கள் மணப்பெண்மீது மலர்களைத் தூவி வாழ்த்தினார்கள். தங்கள் ஊருக்குப் புதியவராய் வந்த விருந்தினர்க்கு அவ்வூர் மக்கள் மலர் கொய்து கொடுத்து வரவேற்றார்கள். புலவரும், கூத்தரும், பாணரும், அரசரிடம் செல்லும் பொழுது, அரசர் அவர்கட்குப் பரிசிலாக நாடும், ஊரும், களிறும் நல்குவதுடன் பொன்னால் செய்த தாமரைப் பூவினை அளிப்பதும் வழக்கம். இசைவாணர் யாழ் முதலிய இசைக் கருவிகளுக்கு மலர்மாலை சூட்டி அழகுபடுத்தினர்.

அகவொழுக்கத்திற்கு மாலைகளைப் பயன்படுத்தியதுபோலவே தமிழ் மககள் புறவொழுகூகத்திற்கும் அவற்றினைப் பயன்படுத்தினர். போரின் ஒவ்வொரு நிலைக்கும் ஒவ்வொரு மலரை அடையாளமாக அமைத்திருந்தனர்.

மலர்கட்கும், மரங்கட்கும், தமிழில் உள்ள பெயர்கள் இன்னோசை உடையவை. வெரிஜில் எனும் இலத்தீன் புலவர், மலர் செடிகளின் பெயர்களைக் கொண்டு, இன்னோசை படைத்த பல அடிகள் இயற்றியுள்ளார் என்று சிறப்பித்துக் கூறுவர். தமிழ்ப் புலவர்களும், தமிழ்ப் பெயர்களைக் கொண்டு, செவிக்கினிய பல அடிகளை யாத்துள்ளனர் என்று கூறும் அடிகளார்,

“ மெல்லிணர்க் கொன்றையும் மென்மலர்க் காயாவும்
புல்லிலை வெட்சியும் பிடவும் தளவும்
குல்லையும் குருந்தும் கோடலும் பாங்கரும்
கல்லவும் கடத்தவும் கமழ்கண்ணி மலைந்தனர்”

எனும் கலித்தொகை பாடலை எடுத்துக் காட்டி விளக்குகிறார். மேலும் கபிலர், குறிஞ்சிப் பாட்டில், 99 மலர்களின் பெயர்களை வைத்து 35 அடிகள் உள்ள பாடலை இயற்றியமையையும், சுட்டிக் காட்டுகிறார் அடிகளார்.

தமிழர், தம் வழிபாட்டு முறைக்கு மலர்களையும் மாலைகளையும் இயற்கை வனப்பையும், பயன்படுத்தி வந்தனர். மலர்களால் வழிபடும் முறை திராவிடர் முறை. வைதிக வழிபாட்டில் மலர் வழிபாடு இல்லை. திராவிடரிடமிருந்தே மலர் வழிபாட்டு முறையினை ஆரியர் கற்றனர். ‘பூஜை’ என்னும் வடசொல், ‘பூசெய்’ என்னும் தமிழ்ச் சொல்லின் திரிபே. பூவழிபாடு வேத காலத்தில், ஆரியர்களிடம் இன்மையாலும், ‘பூஜை’ எனும் அடிச்சொல், ஆரியத்தில் தவிர, பிற இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் இல்லை. மேலும், “புஷ்ப கர்ம பூஜை” திராவிட மக்களின் தனிப் பண்பாட்டிற்கு இசைந்தது என நம்புவதற்கு இடமுண்டு என எஸ். கே. சட்டர்ஜி (S.K.Chatterji, Race Movement and Prehistoric Culture in the Veric Age, London, 1951:160) கூறும் கூற்றையும் சான்றாதாரமாகக் கூறித் தம் கருத்தை நிறுவுகிறார் அடிகளார்.

முருகன் வழிபாடு இயற்கையுடன் கலந்த வழிபாடு. முருகன் விரும்பும் இடங்கள் இயற்கை வனப்புத் தோன்றுமிடங்கள். இவை அனைத்திற்கும் எடுத்துக்காட்டாக, நக்கீரர் திருமுருகாற்றுப் படையில்,

“ காடும் காவும் கவின்பெறும் துருத்தியும்
யாறும் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்”

என்று கூறும் பாடலின் கருத்துக்களையும் குறிப்பிடுகிறார்.

இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழ்மக்கள், தாவரங்களோடு, குறிப்பாக மலர்களோடு கொண்ட தொடர்பு எவ்வாறு இருந்தன, இயற்கை எந்த வகையில் அவர்களோடு அன்றாட நிகழ்ச்சிகளில் கூடத் தொடர்புடைய ஒன்றாக அமைந்தஎன்பதையும் குறிப்பிட்டு, மேலை இலக்கியங்களோடும் ஒப்பிட்டு, அவற்றிலிருந்து தமிழ்ப் பாக்கள் எவ்வாறு வேறுபட்ட தனித் தன்மையைக் கொண்டு இலங்கியது என்பதையும் இவ்வியலில் அடிகளார் கூறியுள்ளார்.

கவிதை மரவு

மூன்றாவது இயலில், கவிதை மரபுகளைப் பற்றி விரிவாக ஆய்ந்துள்ளார். இதில் இயற்கையைப் பற்றிய விளக்கமும் மனிதனுக்கும் இயற்கைக்குமுள்ள தொடர்பும், மிகவும் விரிவாக அடிகளாரால் விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு, மலைகள், பள்ளத்தாக்குகள், நதிகள் சுற்றியிருக்கும் கடல்கள், மணற்பாங்கான கடற்கரைகள் ஆகியவை உள்ளடங்கியது. இந்நிலப் பரப்பின் பின்னணியில், தமிழ்க் கவிதைகள் தொன்றுதொட்டு ஒரு மரபை உருவாக்கி, அதைக்காத்து வருவதாக அடிகளார் குறிப்பிடுகிறார். அவரது ஆய்வின்படி, தமிழ்ச் செய்யுள் ஒவ்வொன்றும் அது படைக்கப்பட்ட நிலத்தையும், அதன்தன்மையையும் பதிவு செய்துள்ளது. இயற்கையாக அமைந்த நிலப்பரப்பை அடிப்படையாகக் கொண்டு, அவ்வேறுபட்ட நிலப்பரப்பிற் கேற்ப வாழும் மக்களின் வாழ்க்கையை மையமாகக் கொண்டு, ஐந்திணைப் பாகுபாடு செய்து, அவற்றின் அடிப்படையில் கவிதைகளைப் புனைந்திருப்பது ஒன்றே, தமிழர்களின் இயற்கை ஈடுபாட்டிற்குரிய மிகச் சிறந்த சான்று என்பது அடிகளார் துணிபு. இந்த நிலப்பாகுபாடுகளில் பாடப்பட்ட பாடல்களை மேலும் நில அமைப்பைப் பின்புலமாகக் கொண்டு அகம் புறமென் பாகுபாடு செய்திருப்பது, ஏனைய உலக இலக்கியங்களுக்கு இல்லாத ஒரு பெருஞ்சிறப்பென அடிகளார் கருதுகிறார்.

இந்த ஐந்து நிலப்பாகுபாடுகளும், மனிதனின் தொடக்கம், பண்பாட்டு வளர்ச்சி ஆகியவற்றின் பரிணாம வளர்ச்சியை மிகச் சிறந்த முறையில் எடுத்துக் காட்டுகின்றன. இன்று, ஐம்பதுகளிலும், அறுபதுகளிலும், உலகில் மிகச் சிறந்த மானிடவியல் அறிஞர்களாகக் கருதப்படுகின்ற ஏ.எல். கிரோபர் (A.L. Kroeber, Anthropology, New York, 1948), இரால்ப் லின்டன் (Ralph Linton, The Tree of Culture, NewYork, 1955), ஹன்டிங் டன் (Huntington) ஆகியோர் ஆராய்ச்சியின் காரணமாக வெளிப்படுத்தப்பட்டுள்ள கருத்துக்கள் சங்க காலத்திலேயே ஐந்து நிலப் பாகுபாட்டின் அடிப்படையில் யாத்த ஐந்திணைப் பாடல்களில் தமிழ்ப் புலவர்கள் வெளிப்படுத்தியிருக்கின்றனர் என அடிகளார் எடுத்துரைக்கிறார்.

தமிழரின் ஐந்து நிலப்பாகுபாடு, ஐந்து வகையான பண்பாட்டிற்குரிய சூழலை அமைத்துள்ளது. வெவ்வேறு வகையான சுற்றுப்புறச் சூழலில் வாழ்பவர்கள், தாம் வாழும் சூழலுக்கேற்ப தம் வாழ்வை அமைத்துக்கொள்ளும் கட்டயாத்திற்குள் உந்தப்படுகிறார்கள். எனவே, அவர்கள் வாழ்க்கை முறையும், பட்டறியும் வேறானவை. அவற்றின் அடிப்படையில்தான், கவிதைகளின் தன்மையும் அமைந்திருக்கும். இந்த உண்மையைத்தான் 'இயற்கை சூழல் இயற்கைத் தொழில், ஆகியவை பண்பாட்டின் பரிணாம வளர்ச்சியின் அடிப்படை' என்று இலெப்லே (Le Play) எனும் மக்கள் இயல் வல்லுநர் கூறியுள்ளார். அவர் கூறுவதற்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ்ப் புலவர்கள் இதை நிரூபித்துவிட்டனர்.

தமிழகத்தின், ஐந்து நிலப்பாகுபாடும், அவற்றின் அடிப்படையிலான கவிதைகளும் மேலை நாட்டு மனித இனப் பண்பாட்டு ஆய்வாளருக்கும், தொடக்க காலப் பண்பாடு பற்றி ஆய்ந்தோருக்கும் தெரிந்திருந்தால் அவர்கள் பெரிதும் வியப்படைந்திருப்பர் என்கிறார் அடிகளார்.

ஒவ்வொரு பாடல்களும் அந்தந்த நிலப்பரப்பிற்கு எற்ப பாடப் பட்டிருப்பதால், புலவர்கள் இயற்கையைப் மிகவும் கூர்ந்து நோக்கி யுள்ளனர் என்பது புலப்படுகிறது. பிறமொழிப் புலவர்கள், இயற்கை யிலுள்ள தாவரங்களையும், விலங்கினங்களையும், இயற்கை பருவங்களையும் கூர்ந்து கவனித்துத் தம் கவிதைகளைப் புனையவேண்டு மென்ற கட்டயாத்திற்கு உட்படவில்லை. ஆனால் தமிழ்ப் புலவர்கள், தமிழ்க் கவிதை மரபின்படியும், விதிமுறைப் படியும் இயற்கையைக் கூர்ந்து கவனிக்கும் கட்டுபாட்டிற்குள் உள்ளார்கள். எனவேதான் பெரும்பாலான கவிதைகள், நிலப்பரப்பின் அடிப்படையிலும் அது சார்ந்திருக்கும் பகுதியின் அடிப்படையிலும் பாகுபாடு செய்யப் பட்டுள்ளன.

இயற்கையும் மனிதனும்

ஸ்டாப்போர்ட் புரூக் (Stopford Brooke) என்பார் தமது Study of Naturalism in English Poetry எனும் நூலில், கவிதைக்கு இருபொருள்கள் உண்டு என்று குறிப்பிடுவார். ஒன்று உலக இயற்கை, இன்னொன்று மனித இயற்கை. சிறந்த கவிதையில், உலக இயற்கையும் மனித இயற்கையும் இணைந்திருக்கவேண்டும். மனித இயற்கை முதன்மையானது. உலக இயற்கை இரண்டாவது நிலையைச் சார்ந்தது. இநத் அடிப்படையில் அமையும் கவிதையே சிறந்தது என்பது பூரூக்கின் கருத்து. இது முழுமையகத் தமிழ்க் கவிதைக்கும் பொருந்தும் என்பதனை அடிகளார் விளக்கிக் கூறியுள்ளார்.

பழைய தமிழ்க் கவிதைகளில், மனிதனைப் பற்றியே பெருமளவில் சிந்தித்திருக்கிறார்கள் என்பது புலப்படும். அதுவும் ஒரு பிரிவு அல்லது ஒரு குறிப்பிட்ட சமுதாயம் என்று பார்க்கவில்லை. ஒட்டு மொத்தமான ஓர் இலட்சிய மனிதன் அல்லது உலக மனிதன் என்றே கவிஞர்கள் பார்த்திருக்கின்றனர் - படைத்திருக்கின்றனர். இயற்கை ஈடுபாட்டாளராகவும், உளவியல் அறிஞர்களாகவும் திகழ்ந் திருக்கின்றனர். மனிதனோடு தொடர்புடைய இயற்கையைத்தான் அவர்கள் முக்கியமாகக் கருத்தில் கொண்டனர். இயற்கை எனும் அரங்கில், மனித நடிகர்கள் வந்து சென்றனர் என்ற நிலையில் தான் தம் கவிதைகளைப் படைத்துள்ளனர். இயற்கையைப் பின்னணியாகக் கொண்டு வாழ்க்கை எனும் நாடகத்தை நடத்தினர் என்ற முறையிலேயே கவிதைகள் படைக்கப்பட்டுள்ளன. இயற்கை மனிதரிடம் அக்கறையும் இரக்கமும் கொண்ட பின்புலமாகக் கவிதைகள் உணர்வுகளையும், மனித நேயங்களையும், மனித நடவடிக்கைகளையும், மனிதப் பண்பு நலன்களையும், வெளிப்படுத்துகின்றன. இவற்றைப் படைப்பதற்கு இயற்கை இன்பகரமானதாகவும் முரண் உடையதாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை அடிகளார் எடுத்துரைக்கிறார்.

உலக இலக்கியங்களைப் பயில்பவர். வெர்ஜில், ஓர்ட்ஸ்வொர்த் போன்ற மேல்நாட்டுப் புலவரின் இயற்கை ஈடுபாட்டைப் பெரிதும் போற்றுகின்றனர். பேராசிரியர் இரைடர் (Ryder) என்பார், காளிதாசரின் மேக தூதைப் பற்றி ஆராயும் பொழுது, அச்செய்யுளில் தோன்றும் இயற்கை ஈடுபாட்டின் தன்மை பிற இலக்கியங்களில் எவற்றிலும் இல்லை என வியந்து கூறுகின்றார். அவர், கபிலர், பரணர் முதலானோரது படைப்புக்களைப் பார்த்திருப்பாரேயானால், முன்னர் காளிதாசரைப் பற்றிக் கூறியதைவிட மிகவும் வியத்தற்குரிய பல காரணங்களைக் கண்டிருப்பார் என்பது அடிகளாரின் நம்பிக்கை.

இயற்கைப் பாடல்களில் நீதிநெறிகள்

நான்காவது இயலில், வரலாற்றையும், நீதி நெறிகளைப் பற்றிய விளக்கங்களையும் மேலை நாட்டறிஞர்களுடன் ஒப்பிட்டு குறிப்பிடுகிறார். கிரேக்கர்களுக்கும், உரோமர்களுக்கும், அவர்கள் வரலாற்றை எழுதுதற் குரிய மூலங்களைப் போன்ற சான்றாதாரங்கள் இல்லாவிட்டாலும், சங்ககால இலக்கியங்களில் இடம் பெற்றிருக்கும் செய்திகளின் அடிப்படையில் தமிழரின் வரலாற்றைச் சிறப்பாக எழுத இயலும் என்பது அடிகளார் துணிபு. இதற்குப் பி.டி. சீனிவாச ஐயங்காரின் தொன்மை கால முதல் கி.மு.600 வரையிலான தமிழர்களின் வரலாறு (History of the Tamils from the earliest times to 600 A.D.) என்ற நூலையும், கே. என். சிவராஜபிள்ளை, எழுதிய தமிழகத்தில் அகஸ்தியர் (Agastya in TamilNadu) எனும் நூலையும் ஆதாரங்களாகச் சுட்டிக் காட்டி விளக்குகிறார்.

அக இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள செய்திகள், தமிழர்களின் வாழ்க்கை, நம்பிக்கை, மரபு, பண்பாடு ஆகியவற்றை வெளிப்படுத்துகின்றன. அரசர்கள், சிற்றரசர் ஆகியோர் பற்றியும் அக்காலப் போர்முறைப் பற்றியும், ஆட்சி அமைப்பு பற்றியும் தெளிவாகத் பல செய்திகள் புற இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. அவை, தமிழர் பற்றிய வரலாற்றிற்கு மூலங்களாகத் திகழ்கின்றன என அடிகளார் குறிப்பிடுகிறார்.

சங்க இலக்கியம் நீதி இலக்கியமாகவும் திகழ்கிறது. 'சங்க இலக்கியத்தில் அறக்கருத்துக்கள்' எனும் தலைப்பில் ஆய்வு செய்தற் குரிய மூலங்கள், சங்க இலக்கியங்களில் மிகுதியாகக் கிடைக்கின்றன. ஔவையாரின் பாடல்களை எடுத்துக்காட்டாகக் காட்டுகின்றார். ஒரு நாட்டின் மழைவளம், இயற்கை வளம் ஆகியவை அந்நாட்டின் மன்னனின் நல்லாட்சியைப் பொறுத்தே அமைந்துளது என்பதையும் எடுத்துக் காட்டுகின்றார். மேலும், போர் நெறியையும், அக வாழ்வில் தலைவன், தலைவி, செவிலி, நற்றாய் ஆகியோர் கடைப்பிடிக்கும் நெறி முறைகளையும் சுட்டிக் காட்டுகின்றார்.

தலைவியைப் பிரிந்த தலைவனிடம் - பழைய நிலையில் அன்பு செலுத்தாது புறக்கணிக்கும் தலைவனிடம் அவனுக்கு அறிவுரை கூறும் முகத்தான், தோழி, 'முன்பு வேப்பங்காயைக் கொடுத்தாலும் இனிது என்றாய். இப்பொழுது மலையிலுள்ள ஏரியின் தெளிந்த நீரைக் கொடுத்தாலும் கசக்கிறது என்கிறாயே' என்று கூறுவதையும் எடுத்துரைக்கிறார்.

வள்ளல்களின் மனம் மலைகள் போன்று எல்லா வளமும் இயற்கையாகப் பெற்று, எல்லோருக்கும் எல்லாக் காலத்திலும் உதவும் என்று கூறப்பட்டுள்ளது.

பூக்கள்தோறும், தேனைமட்டும் அருந்துவதற்காக, பூக்களில் தேனிருக்கும் காலத்தில் நாடிச் செல்லும் வண்டு; செல்வம் இருக்குங் காலத்தில் மட்டும் நட்பு பாராட்டி, பின்னர் பிரிந்து செல்லும் நண்பருக்கு உவமையாக அகநானூற்றுப் பாடலொன்றில் சொல்லப்பட்டுள்ளது. அதையும் எடுத்துக்காட்டுகின்றார்.

> " நிறைந்தோர் தேரும் நெஞ்சமொடு குறைந்தோர்
> பயனின்மையிற் பற்று விட்டொரூஉம்
> நயனின் மாக்கள் போல வண்டினம்
> கனைப்பூ நீத்துச் சினைப்பூப் படர" (அகம் 71,1-4)

கலித்தொகைப் பாடல்களில், பாலைக்கலியில், ஞாயிறு கொடுங்கோல் ஆட்சிக்கும், நெய்தல் கலியில், மாலை நேர ஞாயிறு வெற்றியின் அறிகுறியாகவும், வெற்றிபெற்ற மன்னின் நற் செயல்களின்

பயனை அனுபவிக்கும் இன்னொரு உலகத்திற்கு அழைத்துச் செல்வதாகவும் காட்டப்படுகிறது. பாலையில், சுய நலக்காரன் செல்வம் பயன்படாததுபோல், பாலைக்கலியில் நில மரம் இலை உதிர்ந்து பயன் படாது நிற்பது உவமையாகச் சொல்லப்பட்டுள்ளது. (கலி.34,10), நீர் நிலைகளின் பக்கத்தில் வளரும் வளமான மரம், நிழல் கொடுத்து மக்களுக்குப் பயன் அளிப்பதுபோல, நல்லுள்ளம் கொண்டவர் மனமும் செயலும் உளது, என நல்லவர்களுக்கு உவமையாகக் (கலி.27, 1-2) கூறப்படுவதை அடிகளார் சுட்டிக் காட்டியுள்ளார்.

கலித்தொகை, 10, 119 ஆகிய பாடல்களில் இடம் பெற்றுள்ள செய்திகளைச் சுட்டிக் காட்டி, யானை, தன் துணைக்கு உதவும் நிகழ்ச்சிகளை எடுத்துரைத்து, விலங்கினங்களிடமிருந்து தமிழ்க் கவிஞர்கள் அறிவு பெற்றனர் என விளக்குகிறார்.

கடவுள் கொள்கை

சமயம் தொடர்பான தமிழர்களின் சிந்தனை வளர்ச்சியைச் சங்க இலக்கியங்களில் பார்க்க இயலும் என்பதனை எடுத்துரைக்கின்றார். நம்மை மீறிய ஓர் ஆற்றல் - ஒரு படைப்பாளர் - ஓர் இறைவன் உண்டு என்ற தமிழர் நம்பிக்கையைச் சங்க இலக்கியப் பாடல்கள் வெளிப் படுத்துகின்றன. பிராமணீயத்தையும், புராண சமய வாதங்களையும் நம்பிக்கைகளையும், சங்க இலக்கியததிலிருந்து வேறு படுத்தினால், சமயம் பற்றிய தமிழர்களின் மிக உன்னதமான சிந்தனை வளத்தைப் பார்க்க முடியும் என அடிகளார் கருதுகிறார். சமஸ்கிருதம், கிரேக்கம், இலத்தீன் இலக்கியங்கள் கூறும் பல கடவுள்கள், தெய்வங்கள், தவறான வழியிலான கடவுளின் மூலங்கள், பிறப்புக்கள், போராட்டங்கள் ஆகியவற்றைச் சங்க இலக்கியச் சமயம் பற்றி பாடல்களில் பார்க்க இயலாது. இயற்கை பிறழ்ந்த நிகழ்ச்சிகள் தமிழ் இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன. அவையும் இறைவனைப் பற்றிய செய்திகளில் இடம் பெறவில்லை. எட்டுத் தொகையிலேயே கடைசியாகத் தொகுக்கப் பட்டவைகளாகக் கருதப்படும், பரிபாடலிலும் கலித்தொகையிலும் தான், ஆரிய சமயத்தின் செல்வாக்கைப் பார்க்க முடியும். அதற்கு முன்னால் உள்ள இலக்கியஙகளில் அத்தகைய சமயச் செல்வாக்கு இல்லை. கடவுள் என்ற சொல்லும் அதற்குரிய விளக்கமும், தொடக்ககால இலக்கியங்களிலேயே இடம் பெற்றள்ளது.

தமிழர்களின் பண்பாடும், கடவுள் கொள்கையும்; இயற்கை வளமும், வனப்பும் மிகுந்த மலைப்பகுதியிலேயே தான் உருவாகின. இயற்கை அழகினையே கடவுளெனக் கொண்டனர் என்பதற்கு முருக வழிபாடு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. இதற்கு ‘மலைக்கிழவோன்’, ‘சேயோன்’ என்ற சொற்களைச் சான்றாதாரங்களாக அடிகளார் எடுத்துரைகிறார்.

வேட்டையாடுதல் குறிஞ்சி நிலத்தின் முக்கியமானத் தொழில். விலங்கினங்களை வேட்டையாடுவதற்குப் பயன்படுத்திய கருவிகளில் ஒன்று வேல். மேலாண்மை ஆற்றல் வாய்ந்தவன் வேலை உடையவன் என்ற கருத்தில் 'வேலவன்' என முருகன் சுட்டப்பட்டான். முருகன் ஆற்றல் மிகுந்த விலங்காகிய யானைமேல் செல்லக் கூடிய வலுவுடையவன். மலைப்பகுதியில் வாழும் அழகான பறவையாகிய மயில் அவனுடன் தொடர்பு படுத்தப்படுகிறது. சேவல் அவனது கொடியின் அடையாளம். மலை வாழ் குறத்தியாகிய வள்ளி அவனுடைய துணைவி. மலையில் கிடைக்கும் தினையும், தேனும் அவனது படையல் பொருட்கள். அவனுக்கு விருப்பமான மலை, திருப்பரங் குன்றம். இம்மலையின் இயற்கை வனப்பைப் பரிபாடலும், திருமுருகாற்றுப் படையும் வியந்து கூறுகின்றன. எனவே முருகன் இயற்கை கடவுள் என்று பாராட்டப்படுகிறான் என்று அடிகளார் விளக்குகிறார்.

அக இலக்கியத்தில் குறிஞ்சி நிலக் கடவுளாக முருகன் அமைக்கப்பட்டுள்ளான். பெண்கள் நலன் நாடி முருகனை வேண்டுவர். நினைத்த கணவனை அடைவதற்கும் முருகனை வேண்டினர்.

மலைப்பகுதியிலிருந்து பெரிய அடர்த்தியான காட்டுப்பகுதிக்கு மக்கள் இடம் பெயர்ந்தனர். அடர்ந்த காடு இருளாக இருக்கும். எனவே, அந்த இயற்கையை அடியொற்றி, 'சேயோன்' என்று அழைத்ததற்கு மாறாக, காடுகளில் 'மாயோன்' என அழைத்தனர்.

காடுகளில் ஓரளவுக்குத் தற்காலிக குடி அமைத்து அலைந்து திரிந்து மேய்ப்பவர்கள், மருத நிலம் வந்தபோது முறையான குடியிருப்பை அமைத்தனர். அதனால் ஆட்சி அமைப்பு ஏற்பட்டது. இங்கு உறவுகள் பலப்பட்டன. இறைவனை 'ஆட்சியாளன்' அல்லது 'அரசன்' என அழைத்தனர். எனவே, ஆட்சியாளனைச் சுட்டும் 'வேந்தன்' என்ற சொல்லைப் பெய்தனர். விவசாயத்திற்கு மழையைப் பெரிதும் எதிர்பார்த்தனர் - நம்பினர். வேந்தன் மழையைக் கொடுக்கும் மேகத்தைக் கட்டுப்படுத்துபவன். வேண்டும் காலத்தில் மழையைக் கொடுக்கும் வல்லமை படைத்தவன் என நம்பினர். மேகம் நீல நிறத்தை மட்டுமல்ல பல வண்ணங்களையும் உடையது. எனவே, காலப்போக்கில், மழையைத் தருவதற்குக் காரணமான மேகத்தின் பல வண்ணங்களை மனதிற் கொண்டு இறைவனை 'வர்ணன்' என அழைத்து மகிழ்ந்தனர். கடல் வளம் கொடுப்பவனாகக் கருதப்பட்டான் வர்ணன். கடலில் நீராடி வர்ணனை வழிபட்டனர் என்பது அடிகளாரின் கணிப்பு.

பாலை என்று ஒரு நிலம் தொல்காப்பியரால் படைக்கப்படவில்லை. பாலையில், வீர வழிபாடு இருந்தது. வீரர்களுக்கு நினைவுச் சின்னமாக நடுகல் நட்டனர். எனவே கொற்றவை வழிபாடு மலர்ந்தது என்று குறிப்பிடுகிறார்.

கடவுள் கொள்கையில் பிற்காலத்தில் ஆரிய கலப்பால், பல மாறுதல்கள் எற்பட்டன. அவற்றுள் ஒன்றாக, நாட்டுப் புறப்பாடல்களின் கலப்பாலும், ஆரியம் போன்ற பிற சமயக் கலப்பாலும், மாயோன் திருமால் ஆக்கப்பட்டான் என அடிகளார் கருதுகிறார்.

விலங்கினங்களின் பயத்திலிருந்து மக்களைக் காப்பாற்றுகிறவன் முருகன், எனவே பயத்திற்கு முருகனையும், அன்பிற்குத் திருமாலையும் கொண்டனர் எனக் குறிப்பிடுகிறார்.

சங்கப் பாடல்களில், பரிபாடல் காலத்தால் பிந்தியது என்பது அடிகளார் கருத்து. எனவே பரிபாடலில் பதினைந்தாம் பாடலின் புலவர் இளம்பெரும் வழுதியார், திருமாலைப் பற்றிப் பாடியமை, கடவுள் கொள்கையின் ஒருவளர்ந்த நிலையென அடிகளார் கருதுகிறார்.

ஐந்திணைப் பாகுபாடு

ஓர் இனத்தின் குணநலன்கள் அது சார்ந்திருக்கும் நிலப்பரப்பின் பின்னணியில்தான் அமையும் என்பார் குரோஸ் கோட்ஜே. (Grose Hodge Roman Panorama, Cambridge, 1946) . இக்கருத்து ஐந்து நிலப் பாகுபாட்டிலுள்ள தமிழ் மக்களுக்கு முற்றிலும் பொருந்தும் என்பதனை அடிகளார் நிறுவுகிறார்.

மேற்குத் தொடர்ச்சி மலையில், குறிப்பாக நீலகிரி மலையிலும், பழனி மலையிலும், பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் ஓர் அரிய மலர் குறிஞ்சி மலர். தமிழர்களின் இயற்கையைக் கூர்ந்து கவனிக்கும் தன்மையின் விளைவாக அம்மலரை இயற்கை அழகு கொழிக்கும் மலைப் பகுதிக்குப் பெயராகச் சூட்டினர்.

திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை, சேலம் மாவட்டங்களுக்கு இடைப்பட்ட காடுகளும் புல்வெளியுமே முல்லை நிலம் என்பது அடிகளார் கருத்து. செப்டம்பரில் மழை பெய்து முல்லை மலரும். இம்மலரே இந்நிலப்பகுதிக்குப் பெயராகச் சூட்டினர். ஆறுகளும், நீர்நிலைகளும் மிகுந்த பகுதி. அங்கு மலரும், மருதப்பூவை, அடையாளமாகக் கொண்டு மருதநிலம் என்றனர். தமிழ் நாட்டின் கடற்கரை பகுதியில் கரையோரமாக உள்ள நீர்த்தேக்கங்களில் (Back Water) நெய்தல் பூக்கும். அம்மலர் அந்லிப் பகுதிக்குப் பெயராயிற்று. பாலை என்பது வறட்சியான பகுதி. பழந்தமிழில் பாலை என்பது, சுரம், காடு, ஆகியவற்றையே சுட்டியுள்ளது. எனவே, ஐந்து நிலப்பாகுபாட்டில் ஒன்றான பாலை என்பது தற்காலிகமானது என்பது அடிகளார் கருத்து. மேலும், முல்லை நிலம் மேற்கு நாடுகளைப்போல பச்சைப் பசேலெனும் பசுமை நிறைந்த புல்வெளி அல்ல. காடுகளும் புல்வெளியும் உண்டு. இந்த நிலப் பகுதியில் ஏப்ரல் நடுவிலிருந்து செப்டம்பர் நடுவுவரை மழை வராத காலம். இந்தக் காலக் கட்டத்தைத் தான் பாலை என்றனர், என்கிறார் அடிகளார். பாலை எனும் பூ

காடுகளில் பூக்கும். இது வேனிற்காலத்தில் பூத்துக் காய்க்கும். குறிப்பாகப் பிற கனிகள் கிடைக்காத காலத்தில்தான் காய்க்கும். கோடைகாலத்தில் விலங்கினங்களும், மக்களும் இதைப் பயன்படுத்தினர். மேற்குறிப்பிட்டக் கருத்துக்களுக்கு, இளம்பூரணர் கூறும் தொல்காப்பியப் பொருளதிகார உரையிலுள்ள கருத்துக்களை மேற்கோளாகக் காட்டுகிறார். பாலை எனும் பூவைத் தமிழ் நாட்டில் அதிகமாகப் பார்க்க இயலாது. ஆனால் இலங்கையின் வடபகுதியிலுள்ள தமிழர் வாழும் பகுதிகளில் இவற்றைப் பார்க்க இயலும் என்கிறார் அடிகளார்.

தமிழ் இலக்கிய மரபின் நெறிப்படி, ஐந்து நிலப்பிரிவுகளில் ஒவ்வொன்றும், காதலையும் போரையும் பற்றிய பாக்களின் பின்னணியாக அமைந்துள்ளது. அகப் பாடல்களில், தலைவனும், தலைவியும சந்தித்து, தங்கள் காதலை வெளிப்படுத்தி உரையாடும் நிகழ்ச்சிகள் குறிஞ்சி நிலத்தில் நடைபெறுவதாகவே புலவர்கள் படைத்துள்ளனர். கூதிர்காலத்தைத் தவிர வேறு எந்தப் பின்னணியையும், வேறு பருவகாலத்தையும், தம் விருப்பத்திற்கேற்ப படைத்துக் காட்ட இயலாது. இவ்வாறு தமிழ்க் கவிதை மரபு அமைந்துள்ளது. ஆறு பருவங்களில் இந்தப் பருவ காலத்தில்தான் அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலும் மழையும் குளிரும் மிகுந்திருக்கும். மேலும் மலைப்பகுதி, இரகசிய சந்திப்பிற்கும், பிறருக்குப் புலப்படாத வகையில் அடிக்கடிச் சந்திப்பிற்கும் ஏற்ற சூழல் வாயந்த இடம். எனவே, கவிஞர்கள் களவைக் குறிஞ்சியில் நிகழ்வதாகக் காட்டுகின்றனர். உரையாசிரியர்களின் கருத்தை அடியொற்றியே இக்கருத்தை அடிகளார் குறிப்பிடுகிறார்.

புறத்தில் குறிஞ்சிக்கு இணையான ஒன்று வெட்சி. அக இலக்கியத்தில் குறிஞ்சியில் காதலின் தொடக்கம் என்பதைப்போல புற இலக்கியத்தில் வெட்சி போரின் தொடக்கமாக அமைந்துள்ளது. ஆநிரைகளைக் கவர்தல் வெட்சிப்பூ சூடிய வீரர்களால் நிகழ்கிறது. இது போரின் தொடக்கம். இது மலைப் பகுதியில் பூக்கக் கூடிய ஒருபூ. சிவப்பு நிறமுடையது. எனவே குருதியோடும் போரின் தொடக்கமாக - அறிகுறியாக அப்பூவினைச் சூடினர். போரின் ஒவ்வொரு நிலைக்கும் அடையாளமாக ஒவ்வொரு பூவைக் குறிப்பிட்டனர். அதன் பின்னர், போரின் ஒவ்வொரு செயலுக்கும் அப்பூக்களின் பெயரையே சூட்டினர். போர் வீரர்கள் அணிந்திருந்த அப்பூக்களாலாகிய மாலை, அவர்களின் செயற்பாட்டிற்குரிய அடையாளமாகவும், அவர்களின் உணர்வுகளை வெளிப்படுத்துவனவாகவும் அமைந்திருந்தன. வெட்சிப்பூச் சூடிய வீரர்கள் அணிஅணியாகச் சென்ற காட்சி

வெள்வாள் மறவர் மிலைச்சிய வெட்சியால்
செவ்வானஞ் செல்வது போற் செல்கின்றார்
(பெரும்பொருள் விளக்கம்: புறத்திரட்டு-752)

என்று வர்ணிக்கப்படுகிறது.

போரின் தொடக்கமாக வெட்சி அணிந்து செல்லும் தமிழர் போர் முறையை வியந்து, 'பூக்களை அடையாளங்களாகக் கொண்டு, போர் செய்வது, எங்களுக்கு மிகவும் புதுமையானது. இப்பூக்கள் எதிரிக்கு ஒரு வகையான அச்சத்தைக் கொடுக்கும் வகையில் அமைந்துள்ளது. ஒரு நிலையில் இராணுவச் சீருடை போலவும் திகழ்கிறது. ஐரோப்பிய இராணுவ வீரர்கள், தலையில் சூடிய பூக்களின் மன ஆற்றலை அறிந்தவர்களல்லர். அவர்களுக்கு, ஒரு புது வகையான அனுபவத்தையே நல்கும்' என டாக்டர் போப் (அடிகளார்: 1963:76) குறிப்பிடுகிறார். கிரேக்கர்களையும் உரோமர்களையும் போல, தமிழர்கள் இயற்கையின் அழகுணர்ச்சியை நுகருவர். அவர்கள் மலர்களை விரும்புவதைப்போல், தமிழர்கள் விரும்பினாலும், அவர்களைவிட ஈடுபாட்டுடனும் அறிவியல் அடிப்படையிலும் பயன்படுத்தினர். தலையில் பூச்சூடுவது, வெம்மையில் குளிர்ச்சி தருவதுடன் ஒரு வகையில் மருந்தாகவும் பயன்படுகிறது என்று விளக்குகிறார் அடிகளார்.

தலைவன் தலைவி பிரிவையே ஏனைய நான்கு நிலப்பரப்புக்களும் சுட்டுகின்றன. திருமணத்திற்கு முன்பும் பின்பும் நடைபெறும் பிரிவுகளையே குறிப்பிடுகின்றன. திருமணத்திற்கு முன்னர், உறவினர்களால் இச்செறிக்கப்பட்ட தலைவி தலைவனை அடிக்கடிச் சந்திக்க இயலாது. அதைப்போல், திருமணமான பின்னர் பொருள் வயப்பட்டுள்ள பிரிவு ஏற்படுகிறது. இப்பிரிவுக் காலங்களில் இருபாலரின் உள்உணர்வுகளை உளவியல் அடிப்படையில் புலவர்கள் வெளிப் படுத்துகின்றனர். தலைவனது பிரிவுத் துன்பங்களை வெளியிடுவதைவிட தலைவியின் பிரிவுத்துன்பங்களையே மிகுதியாக அக இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. குறுகிய காலப்பிரிவாக இருப்பதால், தலைவி அதை ஓரளவுக்குப் பொறுத்துக் கொள்ளுகிறாள். எனவே அதை 'இருத்தல்' எனக் குறிப்பிடுகின்றனர். புலவர்கள் இதற்குரிய காலமாக ஆகஸ்ட் திங்கள் நடுவிலிருந்து அக்டோபர் நடு வரையிலான கார்காலத்தையும் மாலைப் பொழுதையும் அமைத்துள்ளனர்.

இந்தியாவின் தட்பவெட்ப நிலைக்கு ஏற்ப, மழைக்காலத்தில் வெளியூர் பயணம், போர் ஆகியவற்றை மேற்கொள்வதில்லை. மழைக்காலம் தொடங்குவதற்கு முன்னரே எல்லா வினைகளையும் முடித்துக் கொள்வர். அந்தக் காலக் கட்டத்தில்தான் - கார்காலத்தில் தான் 'முல்லை' எனும் மலர் பூக்கும். தலைவி தலைவனுக்காகப் பொறுமையாகவும், கற்போடும் காத்திருப்பதால், தூய வெண்மை நிறமுடைய அப்பூவைப் பெண்டிரின் கற்புக்கு உவமையாகச் சொல்லுகின்றனர்.

ஞாயிறு மறைகின்ற நிலையில் வரும் அந்தி மங்கலில், காதலர்கள் ஒருவரை ஒருவர் நினைத்துத் துன்புறுவர். இதை உலகிலுள்ள சிறந்த கவிஞர்களான, ஷெல்லி, கிரே (Gray) தாந்தே (Dante) போன்றவர்கள் தம் கவிதைகளில் வெளிப்படுத்தியுள்ளனர்.

ஷெல்லி இத்தகைய, மாலைப் பொழுதைப் 'புன் கண் மாலை' எனச் சுட்டுவான் என்கிறார் அடிகளார்.

அக இலக்கியத்திலுள்ள முல்லைக்கு எதிர்நிலையாகப் புற இலக்கியத்தில் வஞ்சி அமைந்துள்ளது. இம்மலர் மஞ்சள் நிறமானது. வஞ்சிப்பூ அணிந்து செல்லும் போர்வீரர்கள், மன்னனுடன், பகைவனின் நாட்டைக் கைப்பற்றும் நோக்கத்தில், காடுகளில் கூடாரம் அமைத்து, தாக்குவதற்குரிய நேரம் பார்த்து காத்திருப்பார்கள். அகத்திலும் புறத்திலும் முல்லைநிலத்தில் காத்திருப்பது பொதுவாக அமைந்துள்ளது.

தமிழகத்தின், கடலும் கடலைச் சார்ந்த கரையும் மட்டுமல்லாமல், மணற்பாங்கான ஏனைய கடலோரப் பகுதிகளும் நெய்தல் நிலத்தைச் சார்ந்தவையாகும். அக இலக்கியத்தில் பிரிவுக் காலத்தில், தன் தலைவனை எதிர்பார்த்துக் கடற்கரையோரமாகத் தலைவி காத்திருக்கும் பின்னணியாக நெய்தல் நிலம் அமைந்துள்ளது.

அக இலக்கியத்தைப் பொறுத்தவரையில், முல்லைக்கும் நெய்தலுக்கும் அதிக வேறுபாடு இல்லை. முல்லைக்கு மழைக்காலம் வரையறை செய்யப்பட்டது போல் நெய்தலுக்கு எந்த ஒரு பருவமும் வரையறை செய்யப்படவில்லை. காற்றும் அலைகளும் மிகுந்த எந்த ஒரு பொழுதாகவும் இருக்கலாம். தொல்காப்பியரும் இதற்கு எந்த ஒரு காலத்தையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. முல்லை நிலத்திலும், நெய்தல் நிலத்திலும் பின்புலமாக அமைந்துள்ள தலைவியின் பிரிவுத்துன்பத்தைப் பொறுத்தவரையிலும், முல்லை நிலத்திலுள்ள மாலைக்கும், ஞாயிற்றின் மறைவு நிகழும் மாலைப் பொழுதிற்கும் அதிகமான வேறுபாடு இல்லை. ஆனால், முல்லை நிலத்தில் ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் அமைத்துக் கூறவேண்டும்.

புற இலக்கியத்தில் போர் நிகழ்வதற்குரிய இடமாக இந்நிலப்பரப்பு அமைந்துள்ளது. இது பரந்த வெற்றிடமாக இருப்பதால் இங்குப் போர் நிகழ்வதற்குரிய சூழலுள்ளது. அது போழ்து வீரர்கள் தும்பைப் பூவை அணிந்திருப்பர். தும்பைப்பூ கடற்கரை ஓரங்களிலுள்ள நீர்த்தேக்கங்களில் பூக்கக் கூடிய ஒரு மலர். மேலும் அந்தக்காலத் தமிழர் வரலாற்றில், பல நாடுகளைத் தமிழ் மன்னர்கள் கடல் வழியாகச் சென்றே கைப்பற்றினர். போர்களும் கடற்கரை மணற்பரப்பில் நிகழ்ந்திருக்கின்றன. அக இலக்கியத்தில் நெய்தல் துன்பத்தின் நிலைக்களனாக அமைந்திருப்பதைப்போல, தும்பைபூ அணிந்து நடத்தும் போரில் பல உயிர்கள் மாய்வதால், இங்கும் துன்பமும் மிகுந்திருக்கும்.

பாலைநிலம் பிரிவின் அடையாளமாக்க காட்டப்படுகிறது. முல்லைத் தலைவி பிரிவுத் துன்பத்தை மனதிற் பொறுத்துக் கொள்ளும் நிலையிலுள்ளது. நெய்தல், அத்துன்பத்தை வெளிக்காட்டும் நிலையிலுள்ளது. இந்த மூன்று பிரிவுகளுக்கும் இடையில் ஒரு சீரான முன்னேற்றத்தைக் காட்டுகின்றனர். குறிஞ்சி நிலத்தில், வேட்டைக்குச்

செல்லும் தலைவன் வீட்டைவிட்டு அதிக நேரம் பிரிந்திருப்பதில்லை. மாலையிலோ அதற்கு முன்னரோ வீடுதிரும்பி விடுவான். எனவே அந்நிலப் பகுதி காதலர் சந்திப்பிற்குரியதாகப் படைக்கப்பட்டுள்ளது. முல்லை நிலத்தில், நிலத்தைப் பக்குவப்படுத்துவோர், காலையில் சென்று மாலையில் தான் திரும்புவார்கள். சில மாதங்கள் ஆட்டு மந்தையை அழைத்துக் கொண்டு பல ஊர்களுக்குச் சென்று மீண்டும் வருவர். அதுபோழ்து அவர்கள் வீட்டைவிட்டுச் சென்ற பிரிவு மிக அதிகமான நாட்களாக உள்ளது. நெய்தல் நிலத்தில், மேலும் காலம் நீடிக்கிறது. கடலில் மீன் பிடிக்கச் செல்வோர், இரவில்தான் திரும்புவர். அதுவும் ஆபத்து மிகுந்த ஒரு சூழலிலிருந்து செயல்படுவதால் அவர்களது வருகை மிகவும் அச்சத்துடன் எதிர்பார்ப்புடையது. மேலும், கடல் வாணிகத்திற்காகச் செல்வோர், பல மாதங்கள் கழித்தே திரும்புவர். அதுவும் ஆபத்து நிறைந்த ஒரு பயணம். பாலைக்கு ஒதுக்கப்பட்ட காலம், இளவேனிலும் முதுவேனிலும் ஆகும். விதிவிலக்காகச் சில வேளைகளில் பின்பனிக் காலமும் ஆகும். இந்தக் காலக் கட்டத்தில்தான், ஞாயிற்றின் ஒளி தரையில் பட்டு நிலம் சூடாகி தற்காலிகப் பாலையாக மாறும். அதுவும் ஞாயிற்றின் வெம்மை மிகுந்திருக்கும் நடுப்பகலே பாலைக்குரிய பருவமாகக் கூறப்பட்டுள்ளது. தரிசாக இருக்கும் பாலை நிலம் போல, தலைவன் பிரிவால், அவள் மனம் தரிசாக துன்புறுவது தாம் பிரிவுக்குரிய பொருத்தமான நிலமாகப் பாலை தமிழ்க்கவிஞர்களால் காட்டப்படுகிறது என்கிறார் அடிகளார்.

பாலைக்கு இணையான புற இலக்கியப் பிரிவு வாகைத்திணை. பாலைப் பகுதியில் பூக்கும் வாகைப்பூ வேனிற் காலத்திலேதான் மலரும். இத்திணை வெற்றிக்குரியது. போரிலிருந்து திரும்பும் வீரர்கள் வெற்றிச் சின்னமாக அதை அணிந்திருப்பர். பாலை என்பது, தற்காலிகமாக, ஏனைய நான்குநிலப் பரப்பிலும் அமைய வாய்ப்புண்டு. அதேபோல், பிற நான்கு வகையான, போரின் இயக்கம் அல்லது செயல் முறைகளிலும் வெற்றி ஏற்படுவதுண்டு. எனவே, பாலையை வாகைக்குக்குரியதாகப் புலவர்கள் தேர்ந்தெடுத்தனர் என்பது அடிகளார் கருத்து.

தலைவனின் நடவடிக்கைகளாலும், அவன் மீது கொண்ட ஐயத்தாலும், தலைவி ஊடல் கொள்வாள். அதற்குரிய நிலப்பகுதியாக மருதம் சுட்டப்படுகிறது. குடும்ப வாழ்க்கையில் தலைவனின் ஒழுக்கக்கேடு, பல விதமான குழப்பங்களை ஏற்படுத்துகின்றது. அதனால் குடும்பத்தில் பிணக்குகள் ஏற்படுகின்றன. அந்தப் பிணக்கு அல்லது ஊடல் தீர்ந்தபின் மீண்டும் அன்புசெலுத்தும் சூழல் உள்ளது. இத்தகைய நிகழ்ச்சி குடும்ப வாழ்க்கையில் எப்பொழுது வேண்டுமானால் நிகழும். எனவே, ஊடலுக்குக் காலம் சுட்டப்பட்டவில்லை. கணவன், பரத்தையிடம் சென்றுவிட்டு அதிகாலையில் மீண்டும் இல்லம் வருவான். அதுபோழ்து அவன்மீது ஐயம் அல்லது சினம் கொள்ளும் தலைவி ஊடல் கொள்கிறாள். எனவே, வைகறையும், விடியலும், பொழுதாக மட்டும் சுட்டப்பட்டுள்ளன.

மருதத்திற்கு இணையாகப் புறத் திணையில் அமைந்திருப்பது உழிஞை. போர் வீரர்கள் பகைவர் கோட்டையை முற்றுகையிடும் நிகழ்ச்சி. போர்வீரர்கள் அணிந்திருக்கும் உழிஞைப்பூவின் அடிப்படையில் போரின் இச்செயற்பாட்டிற்கு இப்பெயர் சூட்டப் பெற்றது. பெரும்பாலும் மருத நிலத்திலேயேதான், தமிழகத்தின் நகரங்களும் தலை நகரங்களும் அமைந்திருந்தன. தலை நகரங்களில் அரண்மனைகள் இருந்தன. எனவே அதன் அரணாக இருந்த கோட்டையை முற்றகையிடும் நிகழ்ச்சியை மருதத்திற்கு இணையாக அமைத்துள்ளனர்.

மேற்குறிப்பிட்ட ஐந்துதிணைகளையும் தவிர, மேலும் கூறப்பட்டுள்ள பெருந்திணையும், கைக்கிளையும் இந்நிலப் பாகுபாடு செய்தபின்னர் உள்ளவைகளாக இருக்கலாம் என்பது அடிகளார் எண்ணம். ஏனென்றால் தொல்காப்பியர் இவற்றிற்கு நிலப்பரப்பு குறிப்பிடவில்லை. மேலும் ஐந்துநிலப் பிரிவுகளும் அமைத்ததற்குச் சில நூற்றாண்டுகளுக்குப் பின்னர், இலக்கியங்களின் வளர்ச்சி நிலையில் புதிதாக இரு திணைகளைச் சேர்த்திருக்கலாம். அல்லது, மேற்குறிப்பிட்ட ஐந்திணைகளிலும், இவற்றின் இலக்கணமரபுப் படி உட்படுத்த முடியாத பாடல்கள் இருந்திருக்கலாம். அவற்றை உட்படுத்தும் வகையில், புறத் திணையில் இரண்டும் அவற்றிற்குச் சமமாக அகத்திணையிலும் இரண்டு என நிலப்பரப்பு இல்லாமலேயே வேறு இரண்டு திணைகளையும் சேர்த்திருப்பதற்கு வாய்ப்புள்ளது என்பது அடிகளார் கருத்து.

ஒப்பியல் ஆய்வு

ஐரோப்பிய இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள இயற்கைப் பாடல்களையும், சமஸ்கிருதத்தில் இடம் பெற்றுள்ள இயற்கைப் பாடல்களையும் படித்தபின்னர், அவற்றோடு தமிழ் இயற்கைப் பாடல்களையும் ஒப்பிடவேண்டுமென்ற ஒரு பேரார்வம் அடிகளாருக்கு ஏற்பட்டதாகக் குறிப்பிடுகிறார்.

ஐரோப்பிய மலைகள் மனிதனால் செப்பினப் பட்டதாகக் குறிக்கப்பட்டுள்ளன. ஆனால் தமிழ்ப் பாக்கள் மலைகளிலிருந்து மனிதன் தன்னைச் செப்பனிட்டான் என்று சுட்டுகின்றன. ஐரோப்பிய புலவர்கள், ஞாயிற்றின் மறைவு ரோஜா நிறமென்றும், இரத்த சிவப்பு என்றும் மட்டுமே வர்ணிக்கின்றனர். இரபேல் (Raphael) என்பார், **மெடோனஸ்** எனும் தனது படைப்பில், ஞாயிற்றின் மறைவு அமைதியாக இருப்பதாகவும், அதில் ஓர் ஒழுங்கும் இருப்பதாகவும் குறிப்பிட்டார். தமிழில் பல வண்ணங்களையும் பல்வேறு வகையானத் தன்மைகளையும் வெளிப்படுத்துகின்றனர். மேலும், தமிழ்க் கவிதைகளில் ஞாயிற்றின் தோற்றம் மறைவு குறித்து ஏராளமான உவமைகளும் தத்துவங்களும் அமைந்த பாடல்கள் உள்ளன.

தமிழில் இயற்கையைப் பற்றியப் பாடல்கள் கோபுரம் போல் ஒன்றன்மேல் ஒன்றாக மிக அழகுடன் அமைக்கப்பட்டுள்ளன. தலைவி ஒருவன் ஒருமரத்தின் கீழ் நிற்பதாகச் சுட்டுவதாக இருந்தாலும், அந்தமரம் எத்தகைய பூக்களைப் பூக்கும், அம்மரம் எத்தகையது என்ற முழு விவரங்களும் அப்பாடலில் அமைந்திருக்கும். எனவே, தமிழிலுள் இயற்கைப் பாடல்களை ஓர்ட்ஸ் வொர்த்தின் முல்லைப் பாடல்களுடன் ஒப்பிடுவதைவிட வெர்ஜிலின் முல்லைப் பாடல்களுடன் (Bucolics) ஒப்பிடுவது பொருத்தமானது என அடிகளார் குறிப்பிடுகிறார்.

தமிழும் சமஸ்கிருதமும்

சமஸ்கிருதமும், தமிழும் நிலத்தைப்பற்றியும், நிலவைப் பற்றியும், மேகத்தைப் பற்றியும் ஒரேதன்மையில் பாடியிருக்கின்றன. ஆனால் அவற்றைப் பற்றிய கலையழகை அல்லது உட்பொருளை எடுத்துரைப்பதில் (Interpretation) தமிழ் மேம்பட்டுக் காணப்படுகிறது.

ஆர்தர் ஏ. மெக்டோனல் (Arthur A. Macdonell) கருத்தின்படி, ரிக்வேதத்தின் பெரும் பகுதியும் சமயப் பாடல்களே. பத்தாவது புத்தகம் மட்டும் எல்லோருக்கும் பொதுவானதாக உள்ளது. அதிலும் கடவுளைப் பற்றிய செய்திகளே மிகுதி. மனிதனின் சாதாரண வாழ்க்கைக்கு அங்கு இடமில்லை. இயற்கையை ஒரு குழந்தை பார்ப்பது போன்ற பார்வையே பெற்றுள்ளது. ரிக் வேதத்தில் 33 கடவுள்களும், அவர்களைப் பற்றியப் புராணச் செய்திகளுமே இடம் பெற்றுள்ளன.

ஆரியர்களின் செல்வாக்கில்லாத தமிழ்ப் பாக்கள், யதார்த்த தன்மை நிறைந்த வகையாக இருக்கிறது என்பது அடிகளார் துணிபு. தமிழ்ப் பாடல்களில், அரசர்கள் இறைத்தன்மை உடையவர்களாகக் காட்டப்படவில்லை. ஆரிய வருகைக்குப் பின்னர் உள்ள பாடல்களிலேதான் அத்தகையவை சேர்க்கப்பட்டுள்ளன என்பதை எடுத்துக்காட்டுகின்றார்.

சமஸ்கிருதத்தில், பூக்கள் ஒரு மனிதனை அழகு படுத்துவதற்கும், விழாக்களில் அலங்கரிப்பதற்குமே பயன்பட்டன. மலர்களால் இறைவனுக்கு வழிபாடு செய்யும் மரபும் இல்லை. வேதக்கால இலக்கியங்களில் இதைப்பற்றிய எந்தச் செய்தியும் இல்லை. மலர்களாலும், இலைகளாலும் பழங்களாலும் இறைவனுக்குப் பூஜை செய்து வழிபடுவது திராவிடர்கள் மரபு. இதற்கு எஸ். கே. சட்டர்ஜியின் கருத்துக்களைச் சான்றாதாரமாகக் காட்டுகிறார். இதனுடன், எஸ்.பி. தாஸ் குப்தா Aspect of Indian thought எனும் நூலில் கூறியுள்ள கருத்துக்களையும் குறிப்பிடுகிறார்.

யுதிஸ்திராவின் நளோபாக்கியானாவில் ஞாயிற்றின் 108 பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன. இதேபோல் தமிழிலும் வேனிற் காலத்தில் காணப்படும் நிழலைப் பற்றிப் பல பாடல்கள் பேசுகின்றன.

காட்டிலே விடப்பட்ட தமயந்தி நளனைத் தேடும்படிக் கூறுவதும், அவள் வெளிப்படுத்தும் உணர்வுகள், வருணிக்கப்படும் இயற்கை அழகு, மலை, நீரோடை, காடு ஆகியவை சங்க இலக்கியத்திற்கு முற்றிலும் மாறுபட்டவை. இயற்கை, இராமனுக்கும் சீதைக்கும் இரங்குவதுபோல் காட்டப்படுவது இந்திய இலக்கியங்களில் பொதுவாகக் காணப்படும் ஒரு தன்மை. அவற்றிலிருந்து சங்க இலக்கியம் முற்றிலும் வேறுபட்டது என்று அடிகளார் குறிப்பிடுகிறார்.

காலையில் எழும் ஞாயிறு, (Rising Sun), இள ஞாயிறு ஆகியவை, தமிழ் இலக்கியத்தில், வழிபாட்டிற்குரியனவாகக் காட்டப்பட்டாலும், கடவுளின் கண்ணாகவோ, கணவனின் வருகையை அறிவிப்பதாகவோ கூறப்படவில்லை. ஓரளவுக்குச் சாவித்திரியின் துன்பம், மாலைப் பொழுதைப் பற்றியு வருணனைகள் ஆகியவை, நெய்தல் அல்லது முல்லைப் பாட்டுடன் ஒப்பிடத்தக்கவையாக உள்ளன என்பது அடிகளார் எண்ணம்.

கிரேக்கம், இலத்தீன், சமஸ்கிருதம் ஆகியவைபோல், சங்க இலக்கியத்தில் கடவுளைப் பற்றிய செய்திகள் இல்லை, காரணம் அம்மொழிப் புலவர்களைப் போல, பழைய புராணங்களில் சங்க கால புலவர்களுக்கு ஈடுபாடு இல்லை. தமிழ்ப் பாக்களில், இயற்கை பேராற்றல் வாய்ந்த ஒன்றாகவே படைக்கப்பட்டுள்ளது. ஆனால், வேதகால இலக்கியங்களிலும், இயற்கை, மனிதனால் தெய்வீகத் தன்மை உடைய ஒன்றாகப் படைக்கப்ட்டுள்ளது. முருக வழிபாட்டிலும், திருமால் வழிபாட்டிலும் இத்தகைய சில கூறுகள் காணப்படுகின்றன. அவையும் ஆரியர்களின் செல்வாக்கால் ஏற்பட்ட ஒன்றே என்பது அடிகளார் முடிபு. உயர் சாதி, புரோகித தன்மையுடன் வாழ்ந்த கவிஞர்களின் கவிதைகளில் சமயங்களின் செல்வாக்கு இருந்தது. ஆனால், தமிழ்ப் புலவர்கள், சாதாரண மக்களின் காதல் வாழ்க்கை, போர் போன்ற மக்களின் அன்றாட வாழ்க்கையையே மையமாகக் கொண்டு இலக்கியம் படைத்தனர் என பி.டி. சீனிவாச ஐயங்கார், 'ஆரியருக்கு முந்திய தமிழ்ப் பண்பாடு' (The Pre-Aryan Tamil Culture) எனும் நூலில் கூறும் கருத்துக்களை ஆதாரமாக எடுத்துக்காட்டுகிறார் அடிகளார்.

இயற்கையைப் பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்ட சங்க இலக்கியங்கள், செம்மொழித் தன்மையிலும் (Classical Nature) அளவிலும் சமஸ்கிருதத்தை விட மிகுதியானவை. இந்திய இலக்கிய செம்மொழிக் கால புலவர் காளிதாசர் என்று குறிப்பிடுகின்றனர். ஆனால், அவர் நாடகங்களிலும், காவியங்களிலும் இடம்பெற்றுள்ள இயற்கையைப் பற்றியவற்றைசு சங்க இலக்கியங்களோடு முழுமையாக ஒப்பிட இயலாது. சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி ஆகியவற்றில் இடம் பெற்றுள்ள இயற்கைக் காட்சிகளுடன் தான் ஒப்பிட முடியும். எனவே, இந்திய இலக்கியங்களில் தொன்மையானச்

செம்மொழித் தன்மையுள்ள இலக்கியங்கள் சங்க இலக்கியங்களே என்பது அடிகளார் ஆய்வு முடிபு.

காளிதாசர் சங்க காலத்திற்கு இரண்டு, மூன்று நூற்றாண்டுகளுக்குப் பிந்தியவர். இயற்கையைப் பற்றிய அவரது உவமைகள் மனித பண்பு நலன்கள், பூக்கள், இலைகள், மலைகள் பற்றிய செய்திகள் ஆகியவற்றை மட்டும் தமிழுடன் ஓரளவுக்கு ஒப்பிடலாம். ஆனாலும் அவர் சங்க இலக்கியத்தைப்பற்றி அறியாமலிருப்பது, அடிகளாருக்கு வியப்பாக உளது. ஏனென்றால், 'சமஸ்கிருதத்தையும், பிராகிருதத்தையும் தவிர தொன்மையான மொழியாகத் தமிழ் ஒன்றுதானிருந்தது. பிராகிருதத்தில் இயற்கையைப் பின்புலமாகக் கொண்டு பாடப்படவில்லை' எனச் சுசிகுமார் (Ancient Indian Erotics and Erotic Literature) குறிப்பிடும் கருத்தை ஆதாரமாகக் காட்டுகிறார். மேலும் காளிதாசர் போன்ற ஓர் அறிவாளிக்குத் தமிழ் இலக்கியத்தின் இயற்கைப் பாடல்களைப் பற்றித் தெரியாமல் இருப்பதற்கு நியாயமில்லை. ஏனென்றால், சகுந்தலா நாடகத்தில் நான்காவது அங்கத்தில் சகுந்தலை பேசும்பொழுது, மலபார்* மலையிலுள்ள சந்தனத்தை உவமையாகக் குறிப்பிடுகிறார். எனவே காளிதாசர் தென்னகத்தைப் பற்றி அறிந்திருக்கிறார். சமஸ்கிருதப் பாடல்களில் இல்லாத வகையில் மலைகளைப் பற்றியும், நதிகளைப் பற்றியும் மரங்களைப் பற்றியும் காளிதாசர் குறிப்பிடுகிறார். (கடலைப் பற்றிக் குறிப்பிடவில்லை) அது அவரது தனித்தன்மையைக் காட்டுகிறது என்பார் பேராசிரியர் ரைடர். காளிதாசர் இவற்றை வர்ணிக்கும் தன்மைபோல் சங்க இலக்கியத்தில் பார்க்க இயலாது. காளிதாசரின், ரிது - சம்கர பாடல்கள் ஒவ்வொன்றையும் சங்க இலக்கியத்திலுள்ள பருவங்களோடு தொடர்புடைய சிலபாடல்களுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அப்பொழுதுதான், சங்க இலக்கியம், காளிதாசர் காலத்திற்கு முன்னரே, எவ்வளவு தூரம், பருவங்களைப் பற்றிய பாடல்களைப் பாடுவதில் மேம்பாட்டுடனும் முன்னேற்றமடைந்த நிலையிலும் இருந்தது என்பது புலப்படும். அதோடு இத்தகைய பாடல்களைப் பொறுத்த வரையில் காளிதாசர் எவ்வளவு பின்தங்கிய நிலையில் - முதிர்ச்சியற்ற தன்மையில் காணப்படுகிறார் என்பதையும் புரிந்து கொள்ள இயலும் என்கிறார் அடிகளார்.

காளிதாசரின் பாடல்கள் எப்பொழுதும் இளமைப் பொலிவுடன் திகழும் என்று திறனாய்வாளர்களால் பாராட்டப்படுகின்றன. ஆனால்அவற்றைச் சங்கப் பாடல்களுடன் ஒப்பிடும் பொழுது அவை வெறும் வருணனையே தவிர, அவற்றிற்கு அப்பால் வேறொன்றுமில்லை என்பதைப் புரிந்து கொள்ளமுடியும். மேலும், தமிழ் இயற்கைப் பாடலில், காதலின் அழகைப் பற்றிக் வருணிக்கும் பொழுது கடைப்பிடிக்கப்படும் கண்ணியம் காளிதாசரின் பாடல்களில் பார்க்க இயலவில்லை.

---

* மலபார் அக்காலத்தில்தமிழகத்தின் ஒரு பகுதியாக இருந்தது.

காளிதாசரும், நிலத்தையும் அதன் பருவ காலங்களையும் வருணிக்கிறார். ஆனால் காதலின் பல நிலைகளிலும், காதலரின் உணர்வு வெளிப்பாடுகளிலும், காளிதாசர் குறிப்பிடும் பருவங்கள் சங்க இலக்கியத்தில் இடம் பெறுவதைப் போலக் குறியீடாக அமையவில்லை. பருவங்களைக் காதலர் கூடுவதற்கும் பிரிவதற்கும் மட்டுமே சுட்டிக் காட்டுகின்றார் காளிதாசர். மத்திய இந்தியாவின், தட்பவெட்ப நிலைக்கேற்ற சில வருணனைகள், சில தென்னிந்தியாவிற்கும் பொருந்துகிறது. ஆனால் அவரது கோடை கால வருணனை தமிழ்க் கவிதையில் இடம்பெற்றுள்ள பாலை நில வருணனைக்கு முற்றிலும் பொருந்தாது. குளிர் காலத்தைப் பற்றிய காளிதாசரின் கவிதைகளும் பொருந்தாது. நெடுநல் வாடையில், குளிர்காலத்தில் தன் தலைவனைப் பிரிந்து வாழும் தலைவி வெளிப்படுத்தும் உணர்வுகளைக் காளிதாசரால் காட்ட இயலவில்லை.

காளிதாசர், வால்மீகியிடமிருந்து பெற்ற உத்தி, மேகத்தைத் தூதுவிடல். அவரது தூதுவிடும் பாடலில், யக்ஷா, அவன் மனைவியிட மிருந்து வலுக்கட்டாயமாகப் பிரிக்கப்படுகிறான். அப்பொழுது தன் மனைவியிடம் மேகத்தைத் தூதுவிடுகிறான். அதில், யக்ஷாவின் உள் உணர்வுகளைவிட நிலைத்தைப் பற்றிய வருணனைகளையே இடம் பெறச் செய்துள்ளார் காளிதாசர். அவனது உண்மையான உணர்வுகள் வெளிப்படுத்தப்படவில்லை. காளிதாசரின் மேகதூது வருணனையையும், குறுந்தொகை 163-ஆவது பாடலில் இடம் பெற்றுள்ள, தலைவி கடலிடம் கூறும் செய்திகளின் வாயிலாக வெளிப்படும், அவளது உள்ள உணர்வுகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது காளிதாசரை விட வேறுபட்டிருக்கும் தன்மையைப் பார்க்க முடியும். இவற்றோடு ஞாயிறு, நிலவு ஆகியவைகளிடம் கூறுவதாக உள்ள, கலித்தொகை 42, 144 ஆகிய பாடல்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, சங்க இலக்கியப் புலவர்கள், காளிதாசரைவிட எவ்வளவு மேம்பட்டு தனித் தன்மை வாய்ந்த சிறப்புடன் திகழ்கின்றனர் என்பதை அறிந்து கொள்ள இயலும். இயற்கையைப் பற்றிப் பாடுபவர்களுள், இந்தியாவிலேயே மிகச் சிறந்த கவிஞராகக் காளிதாசர் கருதப்படுகிறார். அவர், ஏரிகளையும் காடுகளையுமே பாடினார். ஆனால் தமிழ்ப்புலவர்கள் இயற்கையின் எந்தப் பகுதியையும் விட்டு வைக்கவில்லை. எல்லாவற்றையும் பாடினர்.

எனவே சமஸ்கிருதப் பாடல்களைவிடப் பன்மடங்கு சிறந்த முறையில் தமிழ்ப்புலவர்கள் இயற்கையைப் பாடியுள்ளனர் என்பது அடிகளாரின் முடிவு.

கிரேக்கம், இலத்தீன் பாடல்களுடன் ஒப்புமை

பதினெட்டாவது, பத்தொன்பதாவது நூற்றாண்டைச் சார்ந்த, ஐரோப்பியக் கவிஞர்களை விட, கிரேக்கம், இலத்தீன் ஆகிய கவிஞர்களோடு சங்க காலக் கவிஞர்களை ஒப்பிட இயலும் என்று குறிப்பிடுகிறார் அடிகளார்.

நெடுங்காலமாக உலக கவிதை வரலாற்றில், இயற்கையைப் பற்றிப் பாடும் மரபு பல மாறுதல்களுக்கு உட்பட்டு வளர்ந்துள்ளது. மனித வளர்ச்சியைப் போல் அது ஒரு பரிணாம வளர்ச்சியைப் பெற்றுள்ளது. குழந்தையைப் போல், இயற்கையைப் பார்த்து மகிழ்ந்து பாராட்டல் முதல் நிலை..........நிலையான குடியிருப்பு, நகர வாழ்க்கை நாகரிகம் ஆகியவை தோன்றிய நிலையில், மனிதனின் விருப்பம் வெளிப்பட்டது. அதற்கேற்ப இயற்கையைப் பின்புலமாகக் கொண்டு கவிதை புனைந்தனர். மூன்றாவது நிலையில், நாகரிகமும், பண்பாடும் வளர்ந்த பொழுது, இயற்கையில், சொகுசையும், இன்ப துன்பங்களையும் தேடினார்கள். இந்த மூன்றாவது நிலையைத் தொடக்கக் காலத்திலேயே சங்க காலப் புலவர்கள் அடைந்திருந்தார்கள்.

'மனித மனம் இன்ப துன்பங்களில் பங்கெடுத்து, மிகவும் பக்குவப்படும் போது, நாகரிகத்தின் மேல் தளத்திலுள்ளோருக்கு இயற்கை ஆணித்தரமான மனஉணர்வுகளை வெளிப்படுத்தும் வாயிலாக அமைகிறது' என்பார் ஜே.சி. செர்ப் (J.C. Shairp; Poetric in Interpretation, p.236, மேற்கோள்: அடிகளார் 1963:131) இக்கூற்று, பெரும்பாலும், தற்காலத்திற்குள்ள கருத்தாக அமைந்துள்ளது. இது குறிப்பாக ரூசோ, கோதே, ஓட்ஸ் வொர்த் போன்றோர் காலத்திற்குப் பொருந்தும்.

இயற்கையை எடுத்துரைக்கும் தன்மையில், வெர்ஜில் காலத்திற்கும், ஓட்ஸ் வொர்த் காலத்திற்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. பரணருக்கும் பாரதியாருக்கும் வேறுபாடு உண்டு.

சோமரையும், கிஸாயிடையும் (Hesoid), தியோகிரட்டஸையும் (Theocritus), சங்க காலப்புலவர்களுக்கு முந்தியவர்களாகக் கருதுவார்கள். அவர்களுக்கெல்லாம் இயற்கை மீது மிகுந்த ஈடுபாடு இருந்தாலும், சங்கப் புலவர்களின் முன்னேற்றமும், எடுத்துரைக்கும் ஆற்றலும் இல்லை என்பது அடிகளார் கருத்து.

ஒரு காப்பியக் கவிஞன் என்ற முறையில், கோமர், காப்பியத்தின் துரிதமான இயக்கத்திற்கேற்ப இயற்கையை மிகுதியாக வருணிக்கவில்லை. கிரீஸின் இயற்கையாக அமைநதிருக்கும் அழகான நிலப்பரப்பை வருணிக்காமல் இருக்க இயலாது. இலியட்டிலும், ஒடிசியிலும், இயற்கை உவமைகளாகவும், உணர்வுகளின் வெளிப்பாடாகவும் இடம் பெற்றுள்ளது. ஆனால், கோமர் குறிப்பிடும் நிலப்பரப்பும் சங்கப்புலவர்கள் காட்டும் நிலப்பரப்பும் வேறுபாடானவை. ஏதென்ஸின் மேலுள்ள மேகமற்ற வானமும், ஞாயிற்றின் தோற்றமும் நீரோடைகளும், நீரூற்றும் அவைபற்றிய அபூர்வ வருணனைகளும் வெப்பமிகுந்த நாடான (Tropical Country) இந்தியாவில் படைக்கப்படும் இலக்கியங்களில் இடம் பெற வாய்ப்பில்லை. இவற்றைச் சங்க இலக்கியங்களில் எதிர்பார்க்க இயலாது. எனவே, கிரேக்கம், இலத்தீன் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள இயற்கை வருணனைகள் தமிழில் இல்லை.

வெர்ஜிலும், ஹோரசும் (Horace) லுக்கிரட்டியசும் (Lucretius) சங்ககாலப் புலவர்களின் சமகாலத்தவர்கள். உரோமை, நாகரிகத்தின் உச்சக் கட்டத்தில் இருந்த காலத்தால் வாழ்ந்தவர்கள். ஆனால், அவர்கள் பாடிய இயற்கைப் பாடல்களில் வெளிப்படும் உணர்வுகள், ஐரோப்பிய பாடல்களின் வாயிலாக வந்தவைகளாகவே உள்ளன.

உரோமர்களும், தம் நாட்டை மிகவும் விரும்பியர்வள். ஆனால் தமிழர் விரும்பிய அளவுக்குச் சொல்ல இயலாது என்கிறார் அடிகளார். தமிழர்களும், உரோமரைப் போல, நகரங்களைப் பெரிதும் விரும்பியவர்கள். ஒருபெண்ணை ஒரு நகரத்தினோடு ஒப்பிடும் தன்மை உலகில் வேறு எந்த இலக்கியங்களிலும் இல்லாத ஒன்று. தமிழர்களின் நகரங்கள் அழகின் அடையாளங்களாகத் திகழ்ந்தன. எனவே, அவை பெண்ணுடன் ஒப்பிட்டுக் கூறப்பட்டன.

லுக்கிரட்டீஸ், பிரசித்த பெற்ற ஒரு தத்துவஞானி. இருப்பினும், இயற்கை எவ்வாறு ஒரு தூண்டுகோலாக அமையும் என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளார். ஹோரேஸ், நகரத்தைச் சார்ந்தவர். கிராமச் சூழலில் இயற்கையை மிகுந்த ஈடுபாட்டுடன் எழுதியவர். ஆனால் இயற்கையைப் பற்றிப் பாடியவர்களில் தலையாயவர். அவர் இயற்கையை நன்கு வருணித்தவர். அதன்மீது ஈடுபாடு கொண்டவர். உணர்வுகளை வெளிப் படுத்தியவர். சங்கப் புலவர்களை அவருடன் தான் ஒப்பிட இயலும். அதுமிக எளிது. மரபு வழி இருவருக்கும் பொது. நிலத்தை வருணிக்கும் மலைபடுகடாம் பாடல்களை, வெர்ஜிலின் ஜார்ஜிக் (Georgic) உடன் ஒப்பிடலாம். வெர்ஜிலும், சங்கப் புலவர்களும், இயற்கை எவ்வாறு ஓர் அரங்கமாகத் திகழ்கிறது என்பதை எடுத்துரைக்கின்றனர்.

கிரேக்கர்களும், உரோமர்களும், தமிழர்களைப் போல, இலைகளிடமும், பூக்களிடமும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்கள். ஆனால் தமிழர்களைப் போல, தமது அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தவில்லை.

காட்டுலஸ் (Catulus) என்பவன் இலத்தீன் மொழியில் காதல்பாக்கள் புனைவதில் வல்லவன். எந்த ஒரு கவிதை மரபையும் பின்பற்றாமல், தன் உள் உணர்வுகளையே தன் காதலி லெஸ்பியா (Lesbia) விற்கு வெளியிடுவதாகக் கவிதை எழுதினான். இந்த ஒரு தனிப்போக்கைச் சங்க இலக்கியங்களில் பார்க்க இயலாது. புறநானூற்றைத் தவிர பிறவற்றில் தலைவன், தலைவி எனப் பொதுமைப் படுத்தியே படைத்தனர். கபிலரும், பரணரும் கூடத் தங்கள் சொந்த அனுபவங்களைத்தான் சொன்னார்கள் என்று உறுதியாகச் சொல்ல இயலாது என்கிறார் அடிகளார்.

ஆங்கில இலக்கியத்தோடு ஒப்புமை

வெர்ஜிலின் இலக்கிய மரபு, ஆங்கில இலக்கியத்திலும், மறுமலர்ச்சி காலத்திற்குப் பின்னர் பின்பற்றப்பட்டது. சாசரும்,

ஸ்பென்சரும், புதுவகையானப் புதுமை இலக்கியத்தைப் படைத்தனர். ஆனால் சேக்ஸ்பியர் சங்க இலக்கியத்தோடு ஒப்பிடத்தக்கவர். அவர் ஒரு நாடக ஆசிரியர் என்ற முறையில், இன்ப - துன்பங்களின் பின்னணியாக இயற்கையைக் காட்டினார். எனவே, அவர் சங்கப் புலவர்களுடன் பெரிதும் ஒப்புமையுடையவராகத் திகழ்கிறார்.

தொன்மை காலத்திலிருந்தே, பருவங்கள், ஐரோப்பாவில் பிரபல்யமானவை. இளவேனிற் காலம், புத்துணர்வுக்கும், இலை உதிர்காலம் அழிவிற்கும் அல்லது துன்பத்திற்குமுரிய குறியீடுகளாக அமைந்தன. மாறுபட்ட பருவச் சூழலுக்கேற்ப மேலை நாட்டுக் கவிஞர்கள் தம் கவிதைகளைப் பாகுபாடு செய்து படைத்தனர். அவர்கள், இளவேனிற் காலம், கோடை காலம், இலை உதிர்காலம், குளிர்காலம் எனும் நான்கு பருவங்களின் அடிப்படையிலேயே தம் கவிதைகளை இயற்றினர். தமிழ்க் கவிதைகள், ஐந்து நிலப்பிரிவுகளில் அமைந்துள்ளன. பல வகைப்பட்ட, மாறுதல்களுடைய கவிதைகளில் தமிழ்நாட்டின் ஆறு பருவங்களும் வருணிக்கப்பட்டாலும், ஐந்து நிலப் பாகுபாடும் அவற்றால் பாதிக்கப்படவில்லை. வேறுபாடு, மழைக்காலத்திற்கும், கோடை காலத்திற்கும் மட்டும் தான் அமைந்திருக்கிறது. மேலை நாட்டுக் கவிதைகள், பருவங்களையும் அவற்றின் அடிப்படையிலான பலவகைப் பட்ட தன்மைகளையும் வெளியிட்டுள்ளன. தமிழ்க் கவிதைகள், நிலப் பரப்பையும் அவற்றின்அடிப்படையிலான பலவகைப்பட்ட தன்மை-களையும் வெளிப்படுத்தியுள்ளன. ஐரோப்பிய கவிஞர்களுக்குப் பருவ காலங்கள் தூண்டுதலாக அமையும். தமிழ்க் கவிஞர்களுக்கு நில அமைப்புத் தூண்டுதலாக அமையும். இந்த அடிப்டை சேக்ஸ்பியரின் இயற்கைப் பாடல்களிலும் தமிழ்க் கவிஞர்களின் இயற்கைப் பாடல்களிலும் காணப்படுகின்றன.

சேக்ஸ்பியரின் மேக்பத் (Macbeth) எனும் நாடகத்தில், கொடுங்காற்று, உயர்ந்த சக்தியாகக் காட்டப்படுகிறது. பிசாசுகளின் வருகையை இடியும் மினனலும் வெளிப்படுத்துகின்றன. சூலியசீசரில் கெட்ட சகுனங்கள், மரணத்தைச் சுட்டிக் காட்டுவதாக அமைக்கப் பட்டுள்ளன. கிங் லியரில் கூட, கொடுங்காற்று, மனித செயல்களோடும், இயக்கங்களோடும் தொடர்பு படுத்தப்படுகிறது.

தமிழ்ப் பாடல்களில், கடுமயான வெப்பம் காதலரின் பிரிவின் பின்னணியாக அமைக்கப்பட்டுள்ளது. மிகுந்தகுளிர் தலைவியின் துன்பத்தைப் புலப்படுத்துவதாக உள்ளது. இதற்கு நெடுநல்வாடையை எடுத்துக் காட்டாக அடிகளார் குறிப்பிடுகிறார்.

சேக்ஸ்பியருக்குப் பின்னருள்ள ஆங்கிலப் புலவர்களுள், ஜேம்ஸ் தாம்சன் (James Thompson) சங்கப் புலவர்களுடன் ஒப்பிடத்தக்கவர் என்கிறார் அடிகளார். போப்பிற்குப்பின் இயற்கையைப் பற்றிப் பாடியவர்களுள் இவர் தலையாயவர். **'பருவங்கள்'** என்ற அவரது

கவிதைகள், தரத்தில் சங்க இலக்கியத்திற்கு ஈடாகச் சொல்ல இயலாது. இருப்பினும் நூற்றுக்கணக்கான வரிகளாலான தம் பாடல்களில், இயற்கையைக் கருவாகக் கொண்டு பாடியமை ஒப்பிடத்தக்கவை. அவர் இயற்கை ஈடுபாடு மிகுந்த ஒரு கவிஞர். எனவே, இயற்கையைக் கூர்ந்து கவனித்துள்ளார். அதன் விளைவாக, மரங்களையும், மலர்களையும், விலங்குகளையும், பருவங்களையும் சிறந்த முறையில் பாடியுள்ளார். இளவேனிற்காலம், தூய காதலுக்குக் குறியிடாக அவரால் பாடப்படுகிறது. கோடை காலம், அவருக்குத் தத்துவப் பாடல்களைப் பாடும் வாய்ப்பை நல்கி உளது. இலை உதிர்காலம், தத்துவார்த்த கிராமிய வாழ்க்கையைப் பற்றிப் பாடவைத்தது. குளிர்காலத்தில் குளிரால் இறந்தவர்களைப் பார்த்த கவிஞர், குளிர் என்றால் துன்பம் என்ற உணர்வினை வெளிப்படுத்திப் பாடியுள்ளார். தாம்ஸன் விரிவான விளங்கங்களைக் கொடுத்துள்ளார். ஆனால் அவை, ஒரு கணக்கெடுப்பாளரின் (Enumerator) பணிபோல் அவர் கவிதைகளில் வெளிப்பட்டுள்ளது. தமிழ்ப் புலவர்கள் வாழ்க்கையை எடுத்துரைப்பதைப் போல் அவர் எடுத்துரைக்கவில்லை. இருப்பினும், தமிழ்ப் புலவர்களைப் போல், இயற்கையிலிருந்து தெரிந்து கொண்டவற்றைத் தத்துவார்த்தமாகப் புலப்படுத்துகிறார். தமிழ்ப் புலவர்கள், தம் கவிதைகளில் இயற்கையை நெடுங்காலமாகப் பயன்படுத்தி வருவதனால், இயற்கையிலிருந்து தெரிந்து கொண்டவற்றை அறவுரைகளாகவும், தத்துவங்களாகவும் மிக எளிதாக இடம் பெறச் செய்ய முடிந்தது. தாம்ஸனுக்கு அவைகள் புதியவை. எனவே சிலநேரங்களில், ஓர் அறவுரையாளனைப்போல், இயற்கையிலிருந்து சிலவற்றைக் கற்றுகொள்ள முயற்சிக்கிறார். இயற்கையை அவர் நேரடியாகப் பார்த்தமையால் அவை எளிதாக அவருக்குப் புலப்படுகிறது.

கரடு முரடான நிலப்பரப்புடைய ஸ்காட்லாண்ட், மலைகளைப் பற்றிப் பாடிய இயற்கைப் புலவர்களை உடைய ஒரு நாடு. அவர்களுள் பர்ன்ஸ் (Burns) என்பவர் சிறப்புடையவர். அவர்தம் பாடல்களில், மனிதனுக்கு முதலிடமும், இயற்கைக்கு இரண்டாவது இடமும் கொடுத்துள்ளார். இயற்கையை ஒரு நாடகக் அரங்கம் போல் காட்டுவார். தமிழ்ப் பாக்களுடன் இவரது பாடல்கள் ஒப்பிடத் தக்கவை. தமிழ்க் கவிஞர்களும், இயற்கையை ஓர் அரங்கமாகக் கொண்டு, அதன்மேல், மக்களின் செயற்பாடுகளையும், வாழ்க்கையையும், உணர்வுகளையும் உலவவிடுகின்றனர். கிரே (Gray) என்ற கவிஞன் தனது கையறு நிலைப் பாடல்களிலும், கோலின்ஸ் (Collins), மாலையைப் பற்றிய தனது பாடல்களிலுள்ள இயற்கையின் தன்மையை எடுத்துரைத்துள்ளனர். ஆனாலும் ஸ்டாப்போர்ட் புரூக்கி (Stopford Brooke) குறிப்பிடுவதுபோல், இயற்கையைப் பற்றிப் பாடியவர்களுள் முதன்மையானவர் ஓர்ட்ஸ் வொர்த். இயற்கையைப் பற்றி அவர் பாடிய பாடல்கள் மிக உன்னதமானவை. கிரேக்கக் கவிஞர்களும், இலத்தீன் கவிஞர்களும், இயற்கையைப் பற்றிப் பாடும்பொழுது இறைவனையே முன்னிலைப் படுத்துவர். காரணம்,

எல்லாமே இறைவனின் அருளால் நடைபெறுகின்றன என்ற நம்பிக்கையை உடையவர்கள். இறைவனே அவர்களது பாதுகாவலன். ஆனால், தமிழ்ப் புலவர்கள் இயற்கையைப் பற்றிப் பாடும்பொழுது, கடவுளை முன்னிலைப் படுத்திப் பாடுவதில்லை. ஒரு வகையில் தமிழ்ப் புலவர்கள் கிரேக்க, இலத்தீன் புலவர்களை விட முன்னேற்றமுடையவர்கள் என்று கொள்ளலாம். தலைவி துன்புறும் போது, கடலிடம் தன் துன்பங்களைப் பகிர்ந்து கொள்ளகிறாள். கடல் அலையையே விளிக்கிறாள். ஒர்ட்ஸ் வொர்த் ஒரு புதிய கண்ணோட்டத்- துடன் இயற்கையை அணுகுகிறார். இயற்கை ஒரு பேராற்றலை விழிப் படையச் செய்கிறது (The Mighty being in awake) என்று குறிப்பிடுகிறார்.

கிரேக்க கவிதைகளிலும், இலத்தீன் கவிதைகளிலும், இயற்கை ஒரு நாடக மேடையாக உவமிக்கப்பட்டுள்ளது. அந்த மேடையில், மனிதர்கள் நடிப்பதாகக் காட்டப்பட்டுள்ளது. ஆனால், தமிழ் இயற்கைப் பாடல்களில், மனிதனின் நாடக வாழ்கைக்குப் பொருந்துமாறு, மனிதர்மீது அக்கரை கொண்ட நிலையில் இயற்கைக் காட்சிகள் இடம் பெற்றுள்ளன. மனிதனின் உணர்வுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அவனது உணர்வின் மாற்றங்களுக்கேற்ப, இயற்கைக் காட்சிகள் மாற்றப்பட்டு நாடக ஆக்கம் பெற்றுள்ளன.

ஆனால் ஒர்ட்ஸ் வொர்த்திற்கு, இயற்கை மனித இயல்பிலிருந்து வேறுபட்ட நிலையில், ஒரு பேராற்றல் வாய்ந்த சக்தியாகப் புலப்பட்டது. இயற்கையை இயற்கையாக விரும்பினால் அதனுள் அமைந்திருக்கும் ஆற்றல் ஓர் உந்து சக்தியாக நம் உணர்வுகளைத் தூண்டுமென நம்பினார். இயற்கையின் பொருளாக அமைந்திருக்கும் மலைகள், மரங்கள், கொடுங்காற்று முதலியவைகளில் ஒரு பெருஞ்சக்தி இருப்பதாக உணர்ந்தார். அதையே பிறருக்குத் தெரிவித்தார். மனிதனின் தனித்தன்மையை உருவாக்குவதற்கு, இயற்கை உலகளாவிய நிலையில் முடிவில்லாத ஓர் உணர்வினை வெளிப்படுத்தும் என்று குறிப்பிட்டார்.

தமிழ்ப் புலவர்களின் இயற்கையைப் பற்றிய பாடல்களை முழுமையாக நோக்கும் பொழுது, சமயச் சார்புற்ற ஒரு தன்மையையோ ஒரு பெரும் சக்தியாக அது திகழ்கிறது என்பதையோ பார்கக இயலாது. ஆங்கில இலக்கியத்தோடு ஒப்பிட்டுப்பார்க்கும் பொழுது, சில நிலைகளில் ஒப்புமை காணப்பட்டாலும், பலநிலைகளில், தமிழ்க் கவிதையின் தனித்தன்மையும், மேம்பட்ட நிலையும் தெள்ளத் தெளிவாகப் புலப்படும். எனவே, இயற்கையைப் பற்றிப்பாடிய சங்க காலப் புலவர் தந்நிகரற்றவர்கள் என்பது அடிகளாரின் ஆய்வு முடிவு.

இவ்வாய்வு நூல் அடிகளாரின் ஆய்வின் தரத்திற்கும், போக்கிற்கும் ஓர் உரைகல். இதுதான் அவரது ஆய்வுப் பணிகளில் தலையாய ஒன்றாக அமைந்துள்ளது. அவரது ஆழப் புலமையையும்,

ஆய்வியல் அணுகு முறைகளையும், பரந்து பட்ட பட்டறிவையும் தமிழ் ஆய்வு மீதுகொண்ட அக்கறையையும் அறிந்து கொள்வதற்குரிய வாயிலாக அமைந்துள்ளது.

இந்த ஆய்வில் அடிகளார் குறிப்பிட்ட கருத்துக்களைப் பேராசிரியர் வ.சுப. மாணிக்கனார்; தனது 'தமிழ்க் காதல்' (The Tamil Concept of Love) எனும் முனைவர் பட்ட ஆய்வு நூலில்மேற்கோளாகக் காட்டியுள்ளார். அடிகளாரின் ஆய்வின் மையக்கருத்து, நிலப்பரப்பின் அடிப்படையில் இயற்கையைப் பற்றிப் பாடியவர்கள் சங்க காலப்புலவர்கள் மட்டுமே என்பது. எனவே அதை வற்புறுத்தும் வகையில் மறுபதிப்பில் 'Landscape Poery' என்று மறு பெயரிட்டார். இதைப் பின்பற்றி, அண்மையில் 1994-இல் வெளியிடப்பட்ட சங்க இலக்கியப் பாடல்களின் ஆங்கில மொழிபெயர்ப்பு நூலுக்குப் பேராசிரியர் ஏ.கே. இராமானுஜம், 'The Interior Landscape - Love Poems from a Classical Tamil Anthology' என்று பெயர் அமைத்துள்ளார். தனது முன்னுரையில் கூட நிலப்பாகுபாட்டிற்கே சிறப்பிடம் கொடுத்துள்ளார். இவை, அடிளாரின் ஆய்வின் பயன் அல்லது தாக்கம் எனினும் பொருந்தும்.

அடிகளாரின் ஆய்வுத் தொகுப்பு நூல்கள்

தமிழ் ஆய்வுக்குப் பயன்படும் வகையில் அடிகளார் மூன்று தொகுப்பு நூல்களை வெளியிட்டுள்ளார். தமிழியல் நூல்கள் ஆய்வடங்கல் (A reference Guide to Tamil Studies) எனும் நூலை, 1966-ஆம் ஆண்டில் மலாயாப் பல்கலைக்கழக வெளியீடாக வெளியிட்டார். 1961 முதல் 1963 வரை அடிகளார் மேற்கொண்ட தொகுப்புப் பணியின் விளைவாக இந்நூல் வெளிவந்தது. மேலை நாடுகளில் தமிழியல் ஆய்வாளர்களைத் தவிர பிறர் அறியாதிருந்த தமிழியல் நூல்கள் பலவற்றை இதில் சேர்த்துள்ளார். இத்தொகுப்பில் 1355-நூல்களைப் பற்றிய குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளன. ஆங்கிலம், பிரெஞ்சு, இலத்தீன், செர்மன், போர்த்துகேயம், ரஷ்யன், போலிஷ், செக், மலாய், சமஸ்கிருதம், இத்தாலியம் முதலிய பல மொழிகளில், தமிழியல் தொடர்பாக வெளிவந்துள்ள நூல்களைப் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. இலக்கியம், மானுடவியல், தொன்மை இயல், கலை, கல் வெட்டியல், சமூக வரலாறு, பண்பாடு, நாகரிகம், இலக்கிய வரலாறு திறனாய்வு மொழியியல், ஒப்பியல், தத்துவம் எனப் பல துறையைச் சார்ந்த நூல்கள் இதில் இடம்பெற்றுள்ளன. தமிழ் ஆய்வாளருக்கு இது ஒருகையேடு.

வெளிநாடுகளில் தமிழ்க் கல்வி (Tamil Studies Abroad) எனும் தொகுப்பு நூல் 1968-இல் உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் சார்பில் வெளியிடப்பட்டது. இதில், செர்மனி, பிரான்சு, இத்தாலி, ஆலந்து, இங்கிலாந்து, செக்கோஸ்லோவிக்கா, சோவியத் ரஷ்யா, அமெரிக்கா, மலேசியா, ஜப்பான், போர்த்துக்கல், ஸ்பெயின், ஸ்வீடன், சுவிட்சர்லாந்து,

இலங்கை, இந்தியாவின் பிற மாநிலங்கள் ஆகியவற்றில் நிகழ்ந்துவரும் ஆய்வுகளைப் பற்றிய முழுவிவரமும் இடம் பெற்றள்ளது. தமிழகத்தைத் தவிர பிற இடங்களில் தமிழியல் ஆய்வு எவ்வகையில் வளர்ந்து வருகிறது என்ற செய்தியை இந்நூல் முழுமையாகத் தருகிறது. தம் ஆய்வுத்தொடர்பாக, உலக நாடுகளைத் தொடர்பு கொண்டு ஆய்வு செய்ய விழைவோர்க்குரிய சிறந்த தொகுப்புநூல்.

தமிழர் பண்பாடும், நாகரிகமும் (Tamil Culture and Civilization) எனும் தலைப்பில் அடிகளார் தொகுத்தநூல் 1976-இல் ஆசிய பதிப்பகத்தின் சார்பில் வெளியிடப்பட்டது. தமிழ்ப் பண்பாடும் நாகரிகமும் குறித்து ஆங்கிலத்தில் பலர் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து இந்நூலை அடிகளார் அமைத்தார். தமிழகத்தின் தலைசிறந்த பேராசிரியர்களாகத் திகழ்ந்த. வ.அய். சுப்பிரமணியம், மு. வரதராசனார், அ. சிதம்பரநாதன், தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் போன்றோரும், ஆய்வியல் அறிஞர்களான பி.ஆர். இராமச்சந்திர தீட்சிதர், பி.டி. சீனிவாச ஐயங்கார் ஆகியோரும் எழுதிய கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. மேலை நாட்டு அறிஞர்களான அலெக்சாண்டர், கமீல் சுவலபில், எம்.பி. எம்மன்னோ, தாமஸ் பர்ரோ, ழான் பிலியோசா, ஆல்பர்ட் ஸ்விட்சர், மார்ட்டிமர் வீலர், ஹீராஸ் முதலிய பலரும் எழுதிய நூல்களிலிருந்தும் கட்டுரைகளிலிருந்தும் 53 பகுதிகளை இத்தொகுப்பில் இடம் பெறச் செய்துள்ளார் அடிகளார். இது, தமிழ்ப்பண்பாடு, நாகரிகம் பற்றித் தெரிந்து கொள்ள விழைவோருக்கும் அவை தொடர்பாக ஆய்வு செய்ய முற்படுபவருக்கும் உதவும் ஓர் அரிய ஆய்வுத் தொகுப்பு.

இவற்றைத் தவிர 'தமிழியல் பற்றி இதழ்களில் வெளிவந்த கட்டுரைகளின் ஆய்வடக்ல் தொகுப்பிலும் ஈடுபட்டிருந்தார். ஆனால் அத்தொகுப்பு நூல் வெளிவந்ததாகத் தெரியவில்லை' என அமுதன் அடிகளார் (அமுதன் 1993:179) குறிப்பிடுகின்றார்.

முனைவர் பட்ட ஆய்வு

இலண்டன் பல்கலைக் கழகத்தில் 1955 முதல் 1957 வரை, பேராசிரியர் ஜோசப் லாவெரீஸ் என்பவரை நெறியாளராகக் கொண்டு 'பழந்தமிழ் இலக்கியத்தில் கல்விச் சிந்தனைகள்' (Educational thought in Ancient Tamil Literature) எனும் தலைப்பில் அடிகளார் ஆய்வுச் செய்தார். இவ்வாய்வு நூலாக வெளிவரவில்லை.

வடநாட்டில் புராண இதிகாச காலமுதல் அசோகர் காலம் வரையிலும் கல்வி வளர்ந்தமையையும், குறிஞ்சி நிலத்தில், அகவன் மக்கள் மூலம் கல்வி பரவிய காலம் முதல் திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை காலம் வரையிலும் தமிழகத்தில வளர்ந்து வந்த கல்வியைப் பற்றியும் ஆய்வு செய்துள்ளார். தமது கருத்தை நிறுவுவதற்காக ஆங்கிலம் கிரேக்கம், இலத்தீன், பிரெஞ்சு, ஜெர்மன் முதலிய மொழிகளிலுள்ள நூல்களையும் சான்றுகளாகச் சுட்டுகிறார்.

பாலி, சமஸ்கிருதம் ஆகியவை வாயிலாக அறியப்படும் சமுதாயத்தில், சமயச் சார்புடைய கல்வி இருந்தமையையும், தமிழ்ச் சமுதாயத்தில் சமயம் சாராக் கல்வி இருந்ததையும் அடிகளார் எடுத்துரைக்கிறார் ஆண், பெண் வேறுபாடு இன்றியும், எத்தகைய தொழிலைச் செய்தாலும் எந்த வேறுபாடு இல்லாமல் கல்வி கற்றனர் என்பதைச் சுட்டுகிறார்.

• தொடக்க காலத்தில் மனிதனின் அச்சத்தைப் போக்கவும், மந்திரம் ஓதி நோயைப் போக்கவும், நிமித்திகம் கூறவும் வல்லவராக அகவன் மக்கள் விளங்கினர். அவர்களே மக்களுக்குக் கல்வி வழங்கும் ஆசானாகத் திகழ்ந்தனர். அகவல் சடங்கு முறையில் பயன்பட்ட அகவலோசையும், அகவற்பாவும் பழந்தமிழ்ப் பாவினமாகிய அகவற் பாவாக மாறின என்றும், பாடலில் காணும் 'அடி' என்னும் சொல்லுங்கூட அகவன் மக்களின் ஆடலுக்கும் தாளத்துக்கும் அகவற்பாவுக்குமுள்ள தொடர்பினைக் குறிக்கின்றது என்றும் அடிகளார் குறிப்பிடுகிறார்.

அகவன் மக்களக்கு அடுத்த நிலையில் தமிழகத்தில் கல்வியைப் பரப்பியவர்கள் பாடல், ஆடல், இசை, கவிதை புனைதல் ஆகியவற்றில் சிறந்து விளங்கிய பாணர்களே என்று அடிகளார் கருதுகிறார். அவர்கள் காலத்திற்குப் பின்னர் தோன்றிய புலவர்கள் செல்வாக்கப் பெற்றனர். அவர்கள், தம் அறிவாற்றலாலும், ஆளுமையாலும், அறிவுரைகூறும் ஆசான்களாகத் திகழ்ந்தனர். இவற்றிற்குச் சங்க இலக்கியத்திலிருந்து பலச் சான்றுகளை எடுத்துக் காட்டுகின்றார் அடிகளார்.

அதன்பின்னர், மெய்யுணர்வாளர்களும், சமய அறிஞர்களும் கல்வியறிவைப் புகட்டினர். திருக்குறள், சிப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றை இயற்றிய ஆசிரியர்களின் புலமைகளைச் சுட்டிக் காட்டித் தன் கருத்தை நிறுவுகிறார்.

'பிச்சைபுகினும் கற்கை நன்றே' 'கற்றோர் ஒளியோர்' என்று குறிப்பிடும் புறநானூற்றைச் சான்றாதாரமாகக் காட்டித் தமிழ்ச் சமுதாயம் கல்வியில் மேம்பட்டிருந்தது என்பதை விளக்குகிறார். •

பல்கலைக் கழக ஆய்வுகள்

மலாயப் பல்கலைக் கழகத்தில், 1961 முதல் 1969 வரை, இந்தியத் துறையின் தலைவராகப் பணியாற்றினார். இத்துறையில் ஆய்விற்கு முதன்மை வழங்கினார். முதுகலை மாணவர்கள் ஆய்வேடு எழுத வேண்டும் என்பது கட்டாயமாக இருந்தது. 'அடிகளார், சிலப்பதிகாரம், சங்க கால நிலவியல், சங்க இலக்கியங்கள், தமிழ் இலக்கியங்களின் கால உறுதிப்பாடு, தொடக்கக் காலத் தமிழ் அச்சுக்கலை, வெளிநாடுகளில் தமிழர் குடியேற்றம்' எனப் பல துறைகளில் ஆராய்ச்சி செய்து வந்தார் (சிங்காரவேலு, மேற்கோள், அமுதன் அடிகள் 1993:48).

தமிழ் நாட்டிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும், தமிழறிஞர்களையும், மொழியியல் வல்லுநர்களையும் வரவழைத்து ஆய்வுரைகள் நிகழ்த்த ஏற்பாடு செய்தார். தமிழகத்திலிருந்து, பேராசிரியர் மு. வரதராசனார், தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் போன்றோரும், வெளிநாடுகளிலிருந்து ஆஷர், கிளாரன்ஸ், எட்கர் கோல்ட்டன், காரில் மெங்கெஸ் போன்றோரும் அழைக்கப்பட்டிருந்தனர் (எஸ்.அரசரதனம்: மேற்கோள்: ஆமுதன் அடிகள் 1993 : 49).

மேலும், மலாய்ப் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் இருவர் திருக்குறளைத் தத்தம் மொழியில் பெயர்த்து எழுதுவதற்கு அடிகளார் துணை செய்தார். அதன் விளைவாக மலாய் மொழியிலும், சீன மொழியிலும் திருக்குறள் மொழி பெயர்க்கப்பட்டது. மலாய் மொழியில், இஸ்மாயில் ஹூசைன் என்பவரும். சீனமொழியில் ச்சீங் ஹஸி (Cheeng Hasi) என்பவரும் மொழிபெயர்த்தனர். (மேலது) இங்குப் பணியாற்றிய பொழுதுதான் வெளிநாட்டுப் பல்கலைக் கழக மரபின்படி பேராசிரியர் பொறுப்பேற்ற சிறிதுகாலத்தில், ‘இந்தியச் சிந்தனையும் உரோமைய ஸ்டாயிக் சிந்தனையும்’ எனும் தலைப்பில் ஓர் ஆய்வுரை வழங்கினார்.

அடிகளார் பணியாற்றிய எட்டு ஆண்டுகளிலும், ஒல்லும் வகையால், தமிழ் ஆய்வுகளைத் தாம் மேற்கொண்டதோடு, பிற பேராசிரியர்களையும் அதில் ஈடுபடச் செய்தார்.

உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றம்

புது தில்லியில் 1964-ஆம் ஆண்டு நடைபெற்ற கீழைத் தேச அறிஞர்களின் உலக மாநாட்டில் கலந்து கொள்ள அடிகளார் சென்றபோது, வகுப்புத் தோழரான பேராசிரியர் வ.அய். சுப்பிரமணியம் அவர்களிடம், “சுப்பு நாம் தமிழுக்கென உலக மாநாடு ஒன்று நடத்த முயல வேண்டாமா அதற்குரிய கூட்டம் ஒன்றைக் கூட்டி ஒரு நிறுவனம் அமைக்க வேண்டாமா?” என்று கேட்டார் (வ.அய். சுப்பிரமணியம், முன்னுரை XII நூல் : அமுதன் அடிகள்) அவரது அந்த விருப்பத்தின் செயற்பாடே உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம். அதன் சார்பாக அடிகளார் நடத்திய உலகத் தமிழ் மாநாடுகள். அடிகளாரின் ஆய்வுப் பணியின் முதிர்ந்த நிலையாகும்.

இம்மன்றம், இதுகாறும் எட்டு உலகத் தமிழ் மாநாடுகளை நடத்தி, தமிழ் ஆய்வை உலகளாவிய நிலைக்கு விரிவுபடுத்தி உயர்வடையச் செய்த பெருமையில் அடிகளாருக்குப் பெரும் பங்குண்டு. இந்திய மொழிகளில் ஏனைய மொழிகள் அடைய முடியாத ஒரு பெரும் சிறப்பை, அடிகளாரால் நிறுவப்பட்ட இம் மன்றம் தமிழ் ஆய்விற்கு நல்கியது. உலகிலுள்ள பல அறிஞர்கள் தமிழ் ஆய்வில் ஈடுபட அடிகளார் அமைத்துக்கொடுத்த உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றமாகிய ஆய்வு அரங்கம் இன்று தமிழ் ஆய்வின் கலங்கரை விளக்கமாகத் திகழ்கிறது.

முடிவுரை

தமிழ் ஆய்வுலகிற்கு, வித்திட்டவர்கள், வழிகாட்டியாகத் திகழ்ந்தவர்கள் பழைய உரையாசிரியர்கள். ஓர் இலக்கியப்படைப்பை எளிமையாகப் படிப்பதற்கும், புரிந்து கொள்வதற்கும், நுகர்வதற்கும் தம் விளக்க உரைகளாலும், ஒப்புமை கருத்துக்களாலும் எடுத்துரைத்தலாலும் (Interpretation) ஆய்வுப் பணியைத் தொடங்கி வைத்தவர்கள் இளம்பூரணர் முதல் அடியார்க்கு நல்லார் வரையிலுமுள்ள உரையாசிரியர்கள்.

ஐரோப்பியர் வருகை, தமிழ் இலக்கியத்திற்கு ஒரு புதிய வழிகாட்டியாக அமைந்தது. தமிழை உலகிற்கு அறிமுகப்படுத்தியதோடு, தமிழின் சிறப்புகளை வெளிப்படுத்தும் நிலையில், போப், கால்டுவெல், எல்லீஸ், வீரமாமுனிவர் போன்றோர் இலக்கிய ஆய்வுகளையும், மொழியியல் ஆய்வுகளையும் மேற்கொண்டனர். அவர்களது ஆயவுப்பணிகளால், உலக நீரோட்டத்தில் தமிழ் இலக்கியமும் தமிழ் ஆய்வும் அடையாளங் காட்டப்பட்டன.

ஆங்கிலக் கல்வியும், மேலை இலக்கிய அறிமுகமும் மேலை நாட்டுத் திறனாய்வையும், திறனாய்வுக் கொள்கைகளையும் தமிழ் அறிஞர்கள் தெரிந்து கொள்ளும் வாய்ப்பை நல்கின. அதன் விளைவாகப் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை, வ.வே.சு. ஐயர், பி.டி. சீனிவாச ஐயங்கார், கே.என். சிவராஜபிள்ளை, எம்.எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை, கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி, பேராசிரியர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், பேராசிரியர் அ. சிதம்பரநாதன், பேராசிரியர் மு. வரதராசனார், பேராசிரியர் வ.சுப. மாணிக்கனார் போன்ற ஆய்வியல் அறிஞர்கள் தமிழ் ஆய்வை வளப்படுத்தினர்.

தமிழ் ஆய்வில் நவீனத் தன்மையை, அறிவியல் அணுகு முறைகளை அறிமுகப்படுத்தி வளப்படுத்தியவர்களுள் பேராசிரியர் கைலாசபதி முதன்மையானவர். பேராசிரியர் ஆ. வேலுப் பிள்ளை, பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

மேற்குறிப்பிட்ட ஆய்வாளர்கள் அனைவரும் ஒரு தனிநபராகத் தம் ஆழப்புலமைக்கும், ஆற்றலுக்கும் ஈடுபாட்டிற்கும் ஏற்ப தமிழ் ஆய்வை வளர்த்தனர். ஆனால், தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் ஆய்வுப் பணி ஒரு நிறுவனத் தன்மையைப் (Institutional) பெற்றிருந்தது. உலகளாவிய நிலையில் தமிழ் ஆய்வை ஒருங்கிணைத்த பெருமை அவருக்குண்டு.

உரோமையில் மாணவராக இருந்தபொழுது 'வீரமாமுனிவர் கழகம்' தொடங்கிய காலமுதல் 'உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம்' அமைத்த காலம் வரையிலான அவரது ஆய்வுப் பணிகளை நோக்கும் பொழுது, அது ஒரு பெரிய ஆய்வு வரலாறாக, தனியொரு அய்வு யுகமாகத் தென்படுகிறது.

ஒல்லும் வகையால் தமிழ் ஆய்வை அடிகளார் மேற்கொண்டார். முதல் கட்டமாக வீரமாமுனிவர் கழகம், தமிழ் இலக்கியம் கழகம் (1948-இல் தூத்துக்குடியில் நிறுவியது) போன்ற கழகங்களை நிறுவி, ஆய்வுத் தளங்களை அமைத்தார். கழகம் மூலம் ஆய்வு இதழ்களை வெளியிட்டார். இதழ்கள் வாயிலாகத் தமிழின் ஆய்வுப் பரப்பை விரிவுபடுத்தினார். இலக்கியம், இலக்கணம் என்ற நிலையில் தொகுப்புகளாக இருந்த தமிழ் ஆய்வுப் போக்கை, பல்துறை ஆய்வாக-பல்துறை அறிஞர் பங்கு கொள்ளும் ஆய்வாக - பல நாட்டு நல்லறிஞர் ஈடுபடும் ஆய்வாக மலரச் செய்தார். அவை மூலம் உலகளாவிய நிலையில் பல ஆய்வு அறிஞர்கள் தமிழுக்குக் கிடைத்தனர்.

தமிழின் ஆய்வின் தரத்தை நவீனப்படுத்தும் தன்மையிலும் - மேலை நாட்டு இலக்கியத் திறனாய்வுக் கொள்கைகளைப் பின்பற்றும் நிலையிலும் - அறிவியல் அணுகுமுறைகளுடன் ஆய்வு நூல்களை இயற்றினார். ‘பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை’ எனும் அவரது ஆய்வு நூல் தமிழ் ஆய்வில் ஒரு திருப்புமுனை. ஒரு கருவூலம். ஒரு ஆய்வுக் களஞ்சியம். இவ்வாய்வு நூலின் மூலம் அறிவியல் பூர்வமாக வளர்ந்து வரும் ஒப்பியல் ஆய்வில் அடிகளார் ஒரு முன்னோடியாகத் திகழ்கிறார். ஒப்பியல் ஆய்விற்கு அடிகளாரின் பங்களிப்பு கணிசமானது.

அடிகளாரின் தமிழ் ஆய்வுப் பணியின் முழுமையை அவரது அரும் முயற்சியால், அமைக்கப்பட்ட உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றமும் அதன் செயற்பாடுகள் மூலமும் அறிந்து கொள்ள இயலும்.

தவத்திரு. குலேந்திரன் குறிப்பிடுவது போல, ‘தமிழை உலக வரைபடத்தில் இடம் பெறச் செய்தவர்’ (எஸ். குலேந்திரன், மேற்கோள்: அமுதன் அடிகள், 1993:203) அடிகளார். தனிநாயகம் அடிகளாரின் அன்பையும் நல்மதிப்பையும் பெற்றவர் அவரது வகுப்புத்தோழரான பேரறிஞர் வ.அய். சுப்பிரமணியனார், அடிகளாரை நன்கு அறிந்தவர். அவரது ஆய்வுப் பணிகளை முழுமையாக உணர்ந்தவர். அவரைப் போன்றே தமிழ்ச் சார்பைத் தவிர பிற சார்பை அறியாத முழுநேர ஆய்வாளர். அன்னாருடன் அடிகளார் கற்கும் காலத்தில் அவரது தமிழ் உணர்வு, உள்ள வேட்கை எவ்வாறு இருந்தது என்பதனை ‘வகுப் பறைகளில் பாடம் நடந்த பின்னரும், உடன் உணவு உண்ணும் வேளைகளிலும் அடிகளின் பேச்செல்லாம் தமிழின் இலக்கிய வளத்தை உலகறியச் செய்ய வேண்டும்; தமிழ் ஆசிரியர்களும், மாணவர்களும் சமுதாயத்தில், பிறருடன் ஒன்றாமல் தனித்து நிற்பது நன்றன்று. எல்லாத் துறைகளிலும் முன்னேற வேண்டும், தமிழாய்வின் தரம் உயரவேண்டும். பல நாடுகளுக்குத் தமிழ் ஆய்வாளர்கள் சென்று தமிழ் இலக்கியச் செல்வங்களை உலகறியச் செய்திடவேண்டும் என்பன பற்றித்தாம் இருந்தன’ (வ.அய். சுப்பிரமணியன், முன்னுரை, அமுதன் அடிகள் 1993:iv) என்று குறிப்பிடுவதிலிருந்து புரிந்து கொள்ள இயலும். எனவே, எப்பொழுதும், தமிழ் ஆய்வுப் பணிகளைப் பற்றியே சிந்தித்துள்ளார்

அடிகளார் என்பது புலப்படும். தமிழ் இலக்கிய ஆய்வில் ஒரு பேரரசனாக அடிகளார் திகழ்ந்தார் என்பதுடன், தமிழ் ஆய்வுக்கு அவரது பங்களிப்பு மகத்தானது.

ஆனால், 'தமிழகம் அவர் செய்த பெருந்தொண்டை முழுமையாக உணர்ந்திடவில்லை. அவரால் உலக அரங்கில் தமிழுக்கு ஏற்பட்ட சிறப்பை, இதுவரை விலை மதித்திடவில்லை. தமிழ் நாட்டில் நல்ல தொண்டுகளைச் சீர்தூக்கிப் பாராட்டப் பல ஆண்டுகள் ஆகும். வளராத மனநிலை உடையவர்கள் பலராகையால்அந்த மனநிலை மாற பல ஆண்டு நீடித்திடும். ஆனால் விரைவில் அந்த நிலை மாறாமல் இருக்காது. அன்று தனிநாயகம் அடிகளைச் சிரமேற் கொண்டு தமிழர் போற்றுவர்' என்று பேராசிரியர் வ.அய். சுப்பிர்மணியனார் (மேலது:xviii) கூறும் கூற்று சிந்திக்கத் தக்கது.

துணை நூற்பட்டியல்

தமிழ்

அமுதன் அடிகள் (1993) — தனிநாயக அடிகளார் சென்னை 600 113

சுதாகர் கெ.ப. (1993) — தனிநாயகம் அடிகளாரின் தமிழ்ப்பணி, சென்னை 3.

தனிநாயகம் அடிகளார் (1961) — தமிழ்த் தூது, சென்னை 1.

தனிநாயகம் அடிகளார் (1966) — ஒன்றே உலகம் சென்னை 1.

ஆங்கிலம்

Manickam, V.Sp. (1962) — The Tamil Concept of love Madras 1.

Ramanujam, A.K. (1994) — The Interior Landscape Love Poems from a Classical Tamil Anthology Madras

Thaninayagam, Xavier. S. (1963) — Nature Poetry in Tamil The Classical Period Singapore

Varadarajan. M. (1957) The Treatment of Nature in Sangam Literature (Ancient Tamil Literature) Madras 1.

Tamil Culture - Journal

1. Ancient Tamil literature and the study of Ancient Indian Education
Vol. V. No.I. January 1956

2. Ancient Tamil Poet - Educators
273, Vol. VI No.4, October 1957

3. Anto de procenays Tamil - Poturgese Dictionary
117, Vol.XI. No.2 April-June 1964

4. Apperception in Tamil Literary Studies
181, Vol.XII Nos.2 & 3, April-June 1966, July-Sept 1966

5. Bibliographical Guide to Tamil Studies
333, Vol.IX. No.4, Oct-Dec 1961

6. Bibliography of Tamil Studies
98 Vol.X No.1 Jan-Mar 1963

7. Earliest Jain and Budhist Teaching in the Tamil Country
337, Vol. VIII. No.4, Oct-Dec 1959

8. Educators of Early Tamil Society
105, Vol.V. No.2, April 1956

9. Ethical Interpretation of Nature in Ancient Tamil Poetry
186, Vol.I, Nos.3&4, September 1952

10. First Books Printed in Tamil
288, Vol.VII. No.3, July 1958

11. Indian Thought and Roman Stoicism
1, Vol.X. No.3, July-Sept 1963

12. Language Rights in Ceylon
217, Vol.V No.3, July 1956

13. Reginal Nationalism in Twentieth Century Tamil Literature
1 Vol.X. No.1, Jan-Mar 1963

14. Seminal Period of Indian Thought
4, Vol.VI, No.1, January 1957

15. Seminal Periodof Indian Thought
    235, Vol.VI No.3, July 1957

16. (Dr.R.P.) Sethu Pillai - An Appreciation
    248, Vol.VI. No.3 July 1957

17. Tamil Cultural influence in Southeast Asia
    203, Vol.IV No.3, July 1955

18. Tamil Culture - Its Past, Its Present and Its Future - with Special Reference to Ceylon
    341, Vol.IV, No.4 October 1955

19. Tamil Development and Research Council
    1, Vol.VIII No.1 Jan-Mar 1958

20. Tamil Manuscripts in European Libraries
    219, Vol.VII, Nos.3&4, October 1954

21. Tamils said it all with flowers
    164, Vol.II No.2 April 1953

22. This Journal of Academy
    1, Vol.IV No.1, January 1955

23. Vocabulary and Content of Tamil Primers and First Readers
    208, Vol.VIII No.3 July-Sept 1959

****** *****

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை - 600 113.

அண்மை வெளியீடுகள்

தொல்காப்பியப் பொருளதிகாரம் ஆங்கில மொழிபெயர்ப்பு	40.00
சங்க இலக்கியம் கவிதையியல் நோக்கு சிந்தனைப் பின்புல மதிப்பீடு	110.00
நாடகமேடை நினைவுகள்	160.00
தமிழின் பா வடிவங்கள்	35.00
உலகத் தமிழாராய்ச்சி நிறுவன சுவடி விளக்க அட்டவணை (சித்த மருத்துவம்)	75.00
சுவடி விளக்க அட்டவணை (இலக்கியம்)	70.00
சுவடி விளக்க அட்டவணை (மெய்யியல் - நா.புறவியல்)	70.00
அரசினர் கீழ்த்திசைச்சுவடி நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி - I	110.00
ஆளும் தமிழ்	28.00
பொருள் புதிது	35.00
புதிய அமைச்சகம் புரிந்த பணிகள்	10.00
சின்னணைஞ்சான் கதை	75.00
தொல்காப்பியம் இலக்கியக் கோட்பாடுகள்	110.00
இயற்கை மொழியாய்வு-தமிழ்	75.00
சூடாமணி நிகண்டு: ஒரு சொல் பல்பொருள் விளக்கம்	65.00
தமிழ் நாடகமேடை முன்னோடிகள்	40.00
இராசேந்திரன் (நாடகம்) (ம.ப.)	50.00
தமிழ் வள்ளல் பாண்டித்துரையார்	25.00
பாணினியின் அஷ்டாத்தியாயி-தமிழாக்கம் - பகுதி 1	95.00
பாணினியின் அஷ்டாத்தியாயி-தமிழாக்கம் - பகுதி 2	60.00
பாணினியின் அஷ்டாத்தியாயி-தமிழாக்கம் - பகுதி 3	90.00
தேவநேயப் பாவாணரின் மொழியியல் - வரலாற்றுக் கொள்கை (அ.சொ.)	35.00
தமிழ்த் தூது (ம.ப.)	20.00
யாப்பருங்கலம் (ம.ப.)	170.00
முல்லை	25.00
பரணர்	85.00
திராவிட மொழியின் மூவிடப் பெயர் (ம.ப.)	40.00
பாஸ மகாகவியின் இரட்டை நாடகங்கள்	36.00
Persona in Tolkappiyam	50.00
Studies in Tamil Prosody and Poetics	45.00
Tamil India	40.00

தனிநாயகம் அடிகளாரின் ஆய்வுகள்	22.00